# கலாச்சாரங்களுக்கிடையில் ஓர் முஸ்லிம் பெண் (உம்மத்)

இறைவனை மட்டுமே ஏற்றுக் கொண்டு வாழும் ஒரு பெண் முஸ்லிம் பெண் எனப்படுகிறாள். அவள் தன் கொள்கையில் உறுதியாக இருக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் அதை விட்டுக் கொடுக்கக்கலாகாது.

தற்போது நாம் காணும் உலகம் ஆடம்பரங்கள் நிறைந்ததாகவும், கலாச்சாரங்களைச் சீரழிக்கும் விதத்திலும் அமைந்துள்ளது. சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் பெண்ணினம் உயிருடன் புதைக்கப்பட்டும், சிதையில் ஏற்றப்பட்டும் வதைக்கப்பட்டது. 1987 ல் இந்தியாவில் மான்சிங் என்பவர் இறந்துவிட்டதால் பச்சிளம் பெண்ணான ரூப்கன்வர் என்பவர் தன்னுடைய கணவனுடைய சிதையில் உயிருடன் ஏற்றப்பட்டால். அவள் துடிதுடித்து கருகிச் செத்ததை இந்தியமக்கள் நேரிலும், மீடியாக்கள் வாயிலாக செய்தியாகவும் கேட்டுத் தெரிந்து கொண்டனர். இச்சம்பவம் உலகத்தையே சோகத்தில் ஆழ்த்திவிட்டது. நவநாகரீக காலத்தில் மக்கள் வாழ்ந்து கொண்டும் இவ்வாறு செய்கிறார்கள் என பலரும் வியப்படைந்தனர் வேதனைப்பட்டனர். அனேகப் பெண்கள் இன்று உயிருடன் புதைக்கப்படாது, உடன் கட்டை ஏற்றப்படாது இருந்தாலும், அவர்களின் கண்ணியம் காக்கப்படாது இழிவான நிலையிலேயே நடத்தப்படுகிறார்கள். ‘பெண்ணியம்’ பேசுவோரும், மாதர் சங்கங்களும், நாங்கள் அனைத்தையும் விமர்சனம் செய்வோம் இதுவே எங்கள் கொள்கை என்று முழங்கும் நவீனத்துவ வாதிகளும் பெண்களை இழிவுபடுத்துவதில் கொஞ்சம் குறைவைத்திட வில்லை. மனித இனம் தன் மானத்தை மறைத்துக் கொள்வதற்காக ஆடைகளை விற்பனை செய்யும் ஜவுளிக்கடை பொம்மை முதல், மதுக்கடையின் வரைபடம் வரை பெண்களின் அரைநிர்வாணப் போஸைத்தான் காண்பிக்கின்றன.

உலகில் இஸ்லாத்தைத் தவிர வேறு எந்தக் கலாச்சாரம் பெண்களுக்குரிய உரிமைகளையும், கண்ணியத்தையும் அளித்ததாகச் சரித்திரம் இல்லை. உயர்வான இந்த மார்க்கத்தில் இருக்கும் பெண்கள் உண்மையில் பெரும் பாக்கியவான்கள். இவர்கள் இந்தக் கொள்கையில் நிலைத்து நிற்கும் பண்பை இழந்துவிடுவார்களானால் அது இவர்களை மட்டும் பாதிப்பதாக அமையாது. நாளை வரவிருக்கும் இவர்களின் சந்ததியினர் அனைவரையும் பாதிக்கும் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். படித்தவர்கள், அறிவுஜீவிகள் என்று அழைக்கப்படும் நவீன எழுத்தாளர்களும் சிந்தனையாளர்களும், மீடியாக்களும் சீரிய கலாச்சாரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் முஸ்லிம் பெண்களை சந்திக்க இழுப்பதற்காக படாத பாடுபடுகின்றனர். உரிமைகள், நியாயங்கள் என்று போலித்தனமான கோஷங்கள் போட்டு பெண்களின் மனதைக் கவர்ந்து வருகின்றனர். இஸ்லாமிய கொள்கை மற்றும் கலாச்சாரத்தை அறியாத முஸ்லிம் பெண்கள். இவர்களின் இந்த போலித்தனமான சித்தாந்தத்திற்குள் சிக்கிச் சிக்கிச் சீரழிகின்றனர். இவர்களுக்கு நடுவில் வாழும் இறைநம்பிக்கையுள்ள முஸ்லிம் பெண், தன்கொள்கையில் உறுதி உள்ளவள் என்றால், அவள் தன் வாழ்க்கையை திருக்குர்ஆன் மற்றும் நபி (ஸல்) அவர்கள் காட்டித் தந்த வழிமுறைகளைப் பின்பற்றி வாழ்ந்த அவர்களின் மனைவிமார் மற்றும் நபித்தோழர்களின் மனைவிமார்கள் வாழ்ந்து காட்டிய விதத்தில் தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவேண்டும். இஸ்லாமியக் கொள்கை மற்றும் கலாச்சாரம் எதிலும் அனுசரித்துக் கொள்ளுதல் என்ற நிலை அவளிடம் இருக்கவே கூடாது. கொள்கைக்காக உயிரைத் தியாகம் செய்த அன்னை கதீஜா மற்றும் சுமைய்யா (ரழி) அவர்களைப் போன்று இன்றைய முஸ்லிம் பெண்களும் தங்கள் உயிரைத் தியாகம் செய்வதிலும் தயங்கக் கூடாது.

இன்றைய முஸ்லிம் பெண்களிடத்தில் எம்மதமும் சம்மதம் எனும் சித்தாந்தம் செயல்வடிவம் பெற்று வருகிறது. சில இடங்களில் முஸ்லிம் பெண்கள் கோவில்களும் சென்று வருகிறார்கள். நேர்ச்சை என்ற

பெயரில் மாரியம்மன், காளியம்மன் தீச்சட்டி விழாக்களில் ஆடிவருபவர்களுக்கு மாலைகள் அணிவிப்பதும், எண்ணெய் வாங்கி ஊற்றுவதும் வழக்கமாகக் காணப்படுகின்றன. பிறமதக் கடவுளர்களுக்கும் சக்தி உண்டு என எண்ணிக் கொண்டிருக்கும் நிலையில் இவர்கள் தங்களை முஸ்லிம்கள் என்று கூறுவது வேடிக்கையாக இருக்கிறது.

எம்மதமும் சம்மதம் என்ற கோட்பாட்டை பல காலங்களாக முஸ்லிம்களில் சிலரும் சேர்ந்து உரைத்ததால் வந்த வினைகள்தாம் இவை என்பது கவனிக்கத் தக்கது.

ஒரு சாரார், கல்விக்கு, செல்வத்திற்கு, குழந்தை வரம் தருவதற்கு, வீரத்திற்கு இவ்வாறு ஒவ்வொன்றுக்கும் ஒரு கடவுளை ஏற்படுத்திக் கொண்டு இறைவனை விளையாட்டுப் பொருளாகவும், வேடிக்கை நாயகனாவும் ஆக்கிவிட்டனர். இவர்களின் கடவுளர்கள் எண்ணிக்கையற்றுக் காணப்படுகின்றனர்.

இன்னொரு சாரார் கடவுளுக்கு மனைவி மற்றும் பிள்ளைகளைக் கற்பித்து பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என கடவுளை மூன்றாகத் துண்டாடி விட்டார்கள்.

இன்னொரு சாரார் கடவுள் எனும் இறைவன் ஒருவன் மட்டுமே அவனுக்கு நிகராக எதுவும் கிடையாது என்று அழுத்தம் திருத்தமாகக் கூறிவருகின்றனர்.

எம்மதமும் சம்மதம் எனக் கூச்சலிடும் இவர்கள் மேற்குறிப்பிட்ட மூன்று மதங்களில் எதை மெய்யெனக் கருதுகிறார்கள்?

மூன்றுமே மெய்யான இறைமார்க்கம் என்கிறார்களா? அல்லது இல்லை இல்லை மூன்றுமே பொய்யானது எனக் கூறவருகிறார்களா?

மூன்றுமே பொய்யென்றால் மறுபேச்சிற்கு இடமில்லை. மூன்றுமே மெய்யான மதங்கள்தான் என்றால் அது எந்தவகையில் சரியாக இருக்கிறது? இவர்கள் இதை விளக்கக் கடமைப்பட்டுள்ளார்கள்.

உதாரணம் ஒன்று இணைக்க!

“அல்லாஹ்வுக்கு இணைகற்பிப்பவனுக்கு சுவர்க்கத்தை அல்லாஹ் ஹராமா(க ஆக்கி வில)க்கிவிட்டான். மேலும், அவன் ஒதுங்கும் இடம் நரகமே ஆகும். அக்கிரமக்காரர்களுக்கு உதவி புரிபவர் எவருமில்லை.“

(அல்குர்ஆன் 5:72)

“அன்றியும், உமக்கும், உமக்கு முன் இருந்தவர்களுக்கும் வஹி முலம் நிச்சயமாக அறிவிக்கப்பட்டது என்னவென்றால், நீவிர் (இறைவனுக்கு இனைவைத்தால் உம் நன்மைகள் (யாவும்) அழிந்து நஷ்டமடைபவர்களாம் விடுவீர்கள் (என்பதேயாகும்) (39:65)

நபி(ஸல்) அவர்களை அல்லாஹ் சொர்க்கவாசி என்று அறிவித்துள்ளான். அவர்களே இறைவனுக்கு இனை வைத்தால் நன்மைகள் யாவும் அழிந்து விடும் என்று இறைவன் கூறுகிறானே, நம்முடைய நிலைமையை எண்ணி பார்கின்றோமா. இன்றைக்கு நாம் இனை வைப்பது மாற்று மத கோயில்களுக்கு சென்று வருவது தான் என்று நாம் எண்ணிக்கொண்டிருக்கிறோம். இது தவறு அல்லாஹ்வை தவிர மற்ற எந்த பொருளை வணங்கினாலும் அது இனை தான்(சிறுக்கு).

இன்னும் அல்லாஹ் கூறுகிறான்.

நிச்சியமாக அல்லாஹ் தனக்கு இனை வைப்பதை மன்னிக்க மாட்டான். இதை தவிர (மற்ற) எதையும் தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான். யார் அல்லாவுக்கு இனை வைக்கிறார்களோ அவர்கள் நிச்சயமாக பெரிய பாவத்தையே கற்பனை செய்கின்றார்கள். (அல்குர்ஆன் 4:48)

இன்று நாம் என்ன நினைக்கிறோம். அல்லாஹ்வை முன்னிருத்தி அவுலியாக்களிடம் கேட்கிறோம். நாங்கள் தொழுவதில்லை, நோன்பு நோற்பது இல்லை. ஹஜ் செய்வது இல்லை. அதனால் நாங்கள் கேட்டால் இறைவன் கொடுக்கமாட்டான். அதனால் நாங்கள் அவுலியாக்களிடம் கேட்டு அல்லாஹ்விடம் பெறுகிறோம் என்று கூறிவருகின்றேமே இடைதரகர் இல்லாத மார்க்கம் இஸ்லாமிய மார்க்கம். நான் தொழுவது இல்லை, நோன்பு வைப்பது இல்லை, ஸக்காத் கடமையை செய்வது இல்லை, ஹஜ் செய்வது இல்லை என்று கூறுபவர்கள் முதலில் முமீன்கள் அல்ல. இஸ்லாம் வருவதற்கு முன்பு மக்காவில் வாழ்ந்து வந்த மக்கள் இந்த பூமியை படைத்தது யார் என்று கூறுவார்கள். இந்த வானத்தை படைத்தது யார் என்று கேட்டால் அல்லாஹ் என்று கூறுவார்கள். அந் நிலையில் இருக்கும் போது அல்லாஹ் ஏன் நம் இறை தூதர் முஹம்மது(ஸல்) அவர்களை துதராக ஏற்படுத்தினான் என்பதை சிந்தித்து பாருங்கள்.

உங்களுக்கு வானத்திலிருந்தும், பூமியிலிருந்தும் உணவளிப்பவன் யார்? உங்கள் பார்வைகளின் மீதும் சக்தியுடைவன் யார்? இறந்தவற்றிலிருந்து உயிருள்ளவற்றையும், உயிருள்ளவற்றிலிருந்து இறந்தவற்றையும் வெளிப்படுத்துப்பவன் யார்? (அகிலங்களில் அனைத்து காரியங்களையும் திட்டமிட்டுச் செயல்படுத்துப்பவன் யார்? என்று (நபியே!) நீர் கேளும் உடனே அவர்கள் அல்லாஹ் என்று பதில் அளிப்பார்கள். அவ்வாறாயின் அவனிடம் நீங்கள் பயபக்தியுடன் இருக்க வேண்டாமா என்று நீர் கேட்பீராக. (10:31)

இன்றும் பல, பல வசனங்களில் அல்லாஹ்வின் மீது மட்டும் நம்பிக்கைவையுங்கள் என்று அல்லாஹ் தன் அருள் மறையாம் திருமறையில் கூறுகிறான். இதை நாம் சிந்தித்து பார்ப்பது கிடையாது. இன்னும் சாம் இறைவனின் இலக்கணம் என்ன இறைவனின் தன்மைகள் என்ன, இறைவன் நம் மீது எவ்வளவு இரக்கம் காட்டுகிறான் என்பதை நாம் அறியாமலேயே இருக்கின்றோம்.

அண்ணல் நபி(ஸல்) அவர்கள் எழுந்து நின்று (குத்பாவில்) ஐந்து விஷயங்களை கூறினார். நிச்சயமாக அல்லாஹ் உறங்குவதில்லை என்றும், உறங்குவது அவனுக்கு தகாது என்றும், நீதியை அவனே நிலை நிறுத்துகிறான் என்றும் அதாவது ஒவ்வொருவரின் உணவையும் அவனே குறைக்கவும் பெருக்கவும் செய்கிறான் என்றும், பகலில் செய்யப்படும் வேலைகளை இரவு படுப்பதற்கு முன்னரும், இரவில் செய்யப்படும் செயல்களைப் பகல் புலர்வதற்கு முன்னரும், அவனிடமே (வானவர்கள் மூலம்) எடுத்துச் செல்லப்படுகின்றன என்றும், அவனுக்குரிய திரை, ஒளி என்றும், அதனை அவன் நீக்கினால் அவனுடைய பேரொளி எது வரை செல்கின்றதோ அது வரை உள்ள படைப்புகள் அனைத்தும் எரிந்துவிடும் என்றும் அவர்கள் எடுத்துரைத்தனர்.

அறிவிப்பவர் : அபூ மூஸா(ரலி) இஷா,

நூல்:முஸ்லிம்

ஆனால் நாம் எவ்வாறு இறைவனின் இலக்கணத்தை புரிந்து வைத்திருக்கிறோம் என்றால் நாம் நேரடியாக கேட்டால் இறைவன் கொடுக்கமாட்டான். அதனால் இடைத்தரகரான அவுலியாக்களிடம் நாம் கேட்டால் கொடுப்பார்கள் என்று புரிந்து வைத்திருக்கிறோம். நாம் அல்லாஹ்விடம் கேட்டால் எந்த அளவுக்கு சந்தோசப்படுவார்கள் என்பதை நபி(ஸல்) அவர்கள் ஒரு ஹதீஸ் மூலமாக விளக்குகிறார்.

ஒரு மனிதன் பாலைவனத்தில் தனக்கு வேண்டிய உணவு, நீர் உடை எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு பிராயணம் செய்கிறான். பிராயணம் செய்யும் போது சற்று ஒய்வு எடுப்பதற்காக உறங்குகிறான். உறங்கி எழுந்தவுடன் பார்க்கும் போது அவன் பிராயணம் செய்த ஒட்டகம் காணமல் போய் விடுகிறது. உடனே அவன் இத்துடன் என்னுடைய உயிர் பிரியப்போகிறது என்று நினைத்து கவலைப்பட்டு கொண்டிருக்கிறான். ஏனென்றால் பாலைவனத்தில் நாம் நடக்கமுடியாது இன்னும் அங்கு உணவு நீர் எதுவுமே கிடைக்காது. நாம் கொண்டு வந்த உணவு, நீர் எல்லாம் ஒட்டகத்தில் சென்று விட்டது. ஆதலால், நாம் இனி உயிர் வாழ முடியாது என்று மிகவும் வேதனையாக அமர்ந்து கொண்டிருக்கும் பொழுது காணமல் போன ஒட்டகம் திரும்பி வருகிறது அப்பொழுது அவன் ஒட்டகம் கிடைத்த சந்தோசத்திற்கு இறைவனிடம், இறைவா நீ எனக்கு அடிமை நான் உனக்கு எசமான் என்று கூறுகிறான் சந்தோசத்தில் நாம் எதை பேசுகிறோம் என்றே தெரியாது அல்லவா அதைபோல், நாம் இறைவனிடம் பிராத்தனை செய்தால் அல்லாஹ் அந்த அளவிற்கு சந்தோசப்படுகிறான்.

நாம் என்ன நினைக்கிறோம், நாம் கேட்டதை எல்லாம் இறைவன் கொடுக்கிறான் என்று பொறுமையை இழந்து விடுகின்றோம்.

நபி(ஸல்) அவர்கள் கூறுகிறார்கள் நாம் கேட்ட துஆக்களை அல்லாஹ் மூன்று விதமாக அங்கீகரிக்கிறான்.

1. கேட்டதை எல்லாம் கொடுக்கிறான்.
2. கேட்டதை விட அதிகமாக கொடுக்கிறான்.
3. கேட்டதில் கெடுதல் இருந்தால் அதை தடுக்கிறான்.

ஆனால் நாம் என்ன செய்கிறோம் கேட்டதை எல்லாம் இறைவன் கொடுக்கவில்லையே என்று நினைத்து அவுலியாக்களிடம் செல்கிறோம், மற்ற மதத்தவர் எப்படி ஒவ்வொன்றுக்கும் ஒரு கடவுள் என்று வைத்துள்ளார்களே அதே போல் நாம் ஒவ்வொன்றுக்கும் ஒரு அவுலியா என்று வைத்திருக்கிறோம், இங்கே உங்களுக்கு சமீபத்தில் ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சியை நினைவு கூற கடமைபட்டுள்ளோன். ஏர்வாடியில் புத்தி சரியில்லாத பல பேர் தீக்கு பழியான சம்பவத்தை நாம் பத்திரிகையிலும், டி.வீ செய்தியிலும் நாம் பார்த்ததை யாரும் மறந்து விட முடியாது புத்தி சரியில்லாதவனுக்கு அல்லாஹ் கேள்வி கணக்கு இல்லை என்று கூறுகிறான். ஆனால் அப்படிப்பட்டவர் தீக்கிரையாகும் பொழுது அங்கே (ஏர்வாடியில்) அடங்கி இருப்பதாக, பலர் நோய்களை குணப்படுத்துவதாக, பல பைத்தியங்களை நேர்படுத்துவதாக நம்பியிருக்கும் நாம் அனைவரும் சற்று சிந்தித்து பார்க்கவேண்டும் அங்கே அடங்கி இருக்கும் பாவாக்கள் அவுலியாக்கள் யாரேனும் வந்து காப்பாற்றினார்களா? இன்றும் செய்தியில் அங்கே நான்கு, ஐந்து கபர்களிலே காணவில்லை என்று கூறுகிறார்களே இனியாவது நாம் சிந்தித்து பார்க்க வேண்டாமா.

நபி(ஸல்) அவர்கள் இறக்கும் தருவாயில் தன்னுடைய மருமகன் அலி(ரலி) அவர்களை கூப்பிட்டு இந்த மக்கா நகரத்தில் தரைமேல் உள்ள கப்ருகளை தகர்த்திவிட்டு வருமாறு கூறினார்கள்.

இன்னும் நபி(ஸல்) கூறினார், நான் இறந்த பிறகு என்னுடைய அடக்கஸ்தலத்தில் கப்ரை எழுப்பிவிடாதீர்கள் என்று கூறினார். உலகத்திற்கு இறுதி தூதராக வந்த நபி(ஸல்) அவர்களுக்கே கபர் கட்ட கூடாது என்று கட்டளை இட்டு இருக்கிறார்களே இன்று நாம் யாரை யாரையோ அவுலியாக்கள் என்று கபுருக்கு போய் வணங்குகிறோமோ அல்லாஹ் நம்மை மன்னிப்பான. இன்னும் பெண்கள் நன்றாக சிந்திக்க வேண்டும் கபருகளுக்கு ஜியாரத் செய்யும் பெண்களை நபி(ஸல்) அவர்கள் சபித்துள்ளார்கள்.

தன்னை இரத்தம் சிந்தவைத்து கல்லால் அடித்த நகர பெண்களை பெருமானார் நபி(ஸல்) அவர்கள் சபித்தார்களா இல்லை, அரபு சிங்கம் என போற்றப்படும் ஹம்ஷா(ரலி) அவர்களை ஹிந்த் என்ற பெண்மணியை பெருமானார் சபித்தார்களா இல்லை, பின் யாரை சபித்தார்கள் கப்ரை ஜியாரத் செய்யும் பெண்களை நபி(ஸல்) சபித்தார்.

ஒரு முறை நபி(ஸல்) அவர்கள் கபர் ஸ்தானத்தின் வழியாக சென்று கொண்டிருக்கும் பொழுது பாத்திமா(ரலி) அவர்கள் வந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது நபி(ஸல்) பாத்திமா(ரலி) அவர்களை கூப்பிட்ட என் அருமை மகளே பாத்திமாவே! நீ எங்கே சென்று விட்டு வந்தாய் என்று பெருமானார் நபி(ஸல்) அவர்கள் கேட்ட பொழுது பாத்திமா(ரலி) அவர்கள் தந்தையே இவ்வழியாக ஒருவர் வீட்டிற்கு சென்று துக்கம் விசாரித்து விட்டு வருகிறேன் என்று பாத்திமா(ரலி) கூற அதுதானே பார்த்தேன் நீ மட்டும் கப்ரு ஸ்தானத்திற்கு வந்து இருந்தால் உன்னுடைய மூதாயையர்கள், சுவனத்தில் நுழையும் வரையில் நீ சுவனத்தில் நுழைய மாட்டாய் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்.

சுவனத்தின் தலைவி என்று அறிவிக்கப்பட்ட பாத்திமா(ரலி) அவர்களுக்கே இந்த நிலைமை என்றால் சகோதரிகளே சிந்தித்து பாருங்கள். இன்று நம் வீட்டில் தாத்தா, பாட்டி, அண்ணன் தம்பி, அப்பா, அம்மா, கணவன் இன்னும் உள்ள நம் உடன் பிறப்பு, நன்பர்கள் யாரவது இறந்தால் நாம் கப்ர் ஸ்தானத்திற்கு செல்கிறோமா. அப்படியிருக்க யார் என்றே தெரியாத, நல்லர்வர்கள், கெட்டவர்கள் என்றும் தெரியாதவர்களிடம் உதவி கேட்க செல்கிறோமே இது இணை இல்லையா? அல்லாஹ் இதை மன்னிப்பான.

இன்றும் அல்லாஹ் கூறுகிறான்.

(நபியே!) என் அடியார்கள் என்னைப்பற்றி உன்னிடம் கேட்டால் நிச்சயமாக நான் சமீபமாகவே இருக்கிறேன். பிராத்தனை செய்பவனின் பிராத்தனைக்கு அவர் பிராத்தித்தால் விடையளிக்கிறோன். அவர்கள் என்னிடமே (பிராத்தித்துக் கேட்கட்டும். என்னையே நம்பட்டும் அப்பொழுது அவர்கள் நேர் வழியை அடைவார்கள் என்று கூறுவீராக. அல்குர்ஆன்: 2:186

நாம் அன்றாட செய்தித்தாள்களில் பார்க்கிறோம் சாமியார் பெண்களை கற்பழிப்பு, பாதிரியார் கன்னியாஸ்திரிகளை கற்பழிப்பு, மந்திரிப்பவர் பெண்களை ஏமாற்றி கற்பழிப்பு இப்படி பல செய்திகளை நாம் தினமும் படிக்கிறோம். ஆனாலும் நாம் பலவாராக ஏமாந்து செல்கிறோம். இன்னும் அல்லாஹ் கூறுகிறான். நீங்கள் மூஃமின்களாக இருந்தால் அல்லாஹ்விடம் தவக்கள் வையுங்கள் (அல்குர்ஆன்: 5 : 23)

நபி(ஸல்) ஒரு முறை சஹாப்பாக்களுடன் வந்து கொண்ருடிக்கும் போது ஒரு பெண் சுல்லிகளால் நெருப்பு எரிந்து கொண்டு தன் குழந்தையை மடியில் வைத்திருந்தாள். அப்போது நபி(ஸல்) அவர்கள் சஹாப்பாக்களை பார்த்து இந்த தாய் தன் குழந்தையை இந்த நெருப்பில் போடுவாளா என்று கேட்க அந்த சஹாபாக்கள் அல்லாஹ்வின் தூதரே எந்த தாயாவது தன் குழந்தை தீயில் போடுவாளா என்று கேட்டனர் அதற்கு நபி(ஸல்) அவர்கள் இப்படி தான் அல்லாஹ்வும் தன்னுடைய அடியார்களை நரகத்தில் தூக்கி போட கஷ்டப்படுவான் என்று கூறினார்.

நமக்கு யார் செய்த தொழுகையும் நமக்கு வராது நாம் செய்த நன்மை தீமைதான் நமக்கு வரும்.

ஒருவர் சுமையை ஒருவர் சுமக்கமாட்டார்கள். எந்த ஒரு ஆன்மாவும் அனுஅளவு நன்மை செய்தாலும் மறுமையில் அதற்குண்டான நன்மையை பெற்று தீரும் எந்த ஒரு ஆண்மாவும் அனு அளவு தீமை அது பெற்றே தீரும். இன்னும் மறைவான ஞானம் அல்லாஹ் ஒருவனுக்கே, இன்று பால் ம்தாபு, தாயத்து, கயிறு, தகடு எழுதி மாட்டுதல் என்று பல மார்கத்திற்கு முரணான செயல்களை நாம் செய்து கொண்டு

வருகிறோமே நாம் நல்ல நேரம், கெட்ட நேரம் எந்த தொழில் செய்தால் நஷ்டம் என்று ஜோசியகாரனை நம்பி ஏமாறுகிறோமே நாம் சிந்தித்து பார்க்க வேண்டாமா. ஜோசியகாரன நம் தலை எழுத்தை நிர்ணிப்பவன்.

தாயத்து, கயிறுகளை கட்டுகிறேமே அதில் குர்ஆன் எழுத்துதானே இருக்கிறது அதனால் என்ன என்று கேட்கிறோமே குர்ஆன் எழுத்தை எழுதி கழுத்தில் தொங்க விட்டால் நன்றாக ஆகிவிடுமா. இன்று நாம் டாக்டரிடம் செல்லுகிறோம். அவர் மருந்து சீட்டை எழுதி கொடுக்கிறார். அதை நாம் பாக்கெட்டில் வைத்தால் நன்றாக நோய் போய்விடுமா அல்லது அதை கான்பித்து மருந்து சாப்பிட்டால் குணம் ஆகுமா. ஜோசியகாரன் இந்க தொழிலை செய்தால், லட்ச, லட்சமாக லாகம் வயரம் என்று கூறுவதை கேட்டு செய்கிறோமே, ஏன் ஜோசியகாரன் லட்ச, லட்சமாக சம்பாதிக்க என்ன வழி என்று அறிந்து செய்யலாமே நம்மிடம் 50, 100 க்கு கை ஏந்த வேண்டாமே. நன்றாக சிந்தித்து செயல் பட வேண்டும். ஏனென்றால் அல்லாஹ் தரும் மறுமை வாழ்கைதான் நிரந்தரம். அந்த மறுமையில் சொர்க்கம் கிடைக்க வேண்டும் என்றால் அல்லாஹ்வை மட்டுமே வணங்க வேண்டும். அல்லாஹ்விடமே பிராத்தனை செய்ய வேணடும்.

அல்லாஹ்வின் படைப்பினங்களிடம் பிராத்தனை செய்யக் கூடாது. இன்னும் ஏகாத்துவம் பற்றி பல குர்ஆன் வசனங்களும் ஹதீஸ்களும் சிறுக்கை பற்றி எடுத்து கூறுகின்றன. இந்த சிறுக்கிலிருந்து அல்லாஹ் எல்லோரையும் காப்பாற்று வானாக.

அண்ணல் நபி(ஸல்) அவர்கள் நவின்றார்கள் ஒருவர் அல்லாஹ்வைதவிர வணக்கத்துக்குரியவன் வேறு யாருமில்லை என்று ஏற்றுக் கொள்கிறார். பிறகு அந்த நிலைலேயே அவர் மரணமடைகிறார் எனில் திண்ணமாக அவர் சுவனத்தில் நுழைவார்.

அறிவிப்பவர்: அபூதர்(ரலி) ஆதாரம், முஸ்லிம்

## உளூ செய்யும் முறை:

---

நாம் தொழுகைக்கு முன்பாக உளூ கண்டிப்பாக அவசியம். ஒளூ இல்லாதவனின் தொழுகை ஏற்று கொள்ள பட மாட்டாது என்று நபி(ஸல்) கூறினார். அந்த உளூ முறையாக நாம் எப்படி செய்ய வேண்டும் என்றால்.

உஸ்மான்(ரலி) அவர்கள் உளூ செய்வதற்குரிய தண்ணீரைக் கொண்டு வரச் சொல்லி மூன்று முறை இரு கைகளையும் கழுவி, பின் வாய் கொப்பளித்து நாசிக்கு தண்ணீர் செலுத்தி சிந்தினார்கள். பின்முகத்தை மூன்று முறை கழுவி, பின் வலது முழங்கை முழி உட்பட மூன்று முறை கழுவி,அவ்வாறே இடது கையையும் மூன்று முறை கழுவி பின் தலக்கு மஸஹ் செய்து பின் வலது காலை கரண்டை முழிவரை உட்பட மூன்று முறை கழுவி அதே போல் இடது காலை மூன்று முறை கழுவி பின்னர் சொன்னார்கள் நான் செய்த உளூவின் பிராகாரமே நபி(ஸல்) உளூ செய்யக்கண்டேன் எனக் கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஹிம்ரான் (ரலி)

நூற்கள்:புகாரி, முஸ்லிம்.

நபி(ஸல்) அவர்கள் உளூ செய்யும் போது தங்களின் தலைக்கு ஒரு முறை மஸஹ் செய்துள்ளார்கள்.

அறிவிப்பவர்: அலி(ரலி)

நூல் : அபூதாலுத்

இன்றைக்கு நம் மிடையே மஸஹ் முறை எப்படி இருக்கிறது என்றால் தலைக்கு மூன்று முறை என்று தலையின் முன் நுனிமுடியில் மூன்று நீரை எடுத்து தேய்க்கிறார்கள். நபி(ஸல்) எப்படி தலைக்கு மஸஹ் செய்துள்ளார் என்று பார்ப்போம்.

நபி(ஸல்) அவர்கள் தலைக்கு மஸஹ் செய்து தங்களின் இரு கலிமா விரலையும், காதின் துவாரத்தில் நுழைய வைத்தார்கள் தங்கள் இரு பெருவிரலையும் இரு காதின் வெளியோரத்தில் வைத்து மஸஹ் செய்தார்கள்.

அறிவிப்பவர்: அப்துல்லா இப்ளு உமர்(ரலி)

நூற்கள்: அபூதாவூது, நஸயீ

நபி(ஸல்) அவர்கள்(உளூ செய்யும் போது) தலைக்கு மஸஹ் செய்வார்கள் அவை எப்படி இருக்கும் என்றால் இரு கைகளின் விரல்களை பிடரி வரை கொண்டு வருவார்கள்.

அறிவிப்பவர்: அப்துல்லா இப்னு ஜெய்துப்னு ஆஸிம்(ரலி)

நூல்: புகாரி, முஸ்லிம்.

உளூவை பரிபுரணமாக செய்யுங்கள் விரல்களுக்கு மத்தியில் "கோதிக்கழுவுங்கள்" நோன்பாளி இல்லாவிட்டால் நாசிக்கு நன்றாக தண்ணீர் செலுத்துங்கள். என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்கள்: லக்திபினு ஸபிதா

நூற்கள்: நஸயீ, இப்னு மாஜா.

உளூ செய்த காரணத்தினால் என் சமுதாயத்தினர்கள் கியாம நாளையில் கை கால்கள் அதிகம் பிராகசமானவர்களாக வருவார்கள் யார் பிராகசம் அதிகரிக்க நாடுகிறார்களோ அவர்கள் அதனை பூரணமான முறையில் செய்து கொள்ளட்டும் என நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பாளர்கள்: அபூ ஹு ரைரா(ரலி)

நூற்கள்: புகாரி, முஸ்லிம்.

நபியவர்கள் செருப்பு அணிந்தாலும், தலை வாரிக் கொண்டாலும், மேலும் எல்லா காரியங்களையும் வலதுபுறம் இருந்து ஆரம்பம் செய்வார்கள்.

அறிவிப்பாளர்கள்: ஆயிஷா(ரலி)

நூற்கள்: புகாரி, முஸ்லிம்.

உளூ செய்வதற்கு மிகவும் சிறப்பு இருக்கிறது என்று நபி(ஸல்) பின்வருமாறு கூறுனார்.

எந்த முஸ்லிமோ அல்லது இறை நம்பிக்கையாளரோ உளூச்செய்யும் போது முகத்தை கழுவுவாரானால் அவர் முகத்திலிருந்து (அவர்) கண்ணால் கான்பதன் மூலம் செய்த அத்தனை பாவங்களும் தண்ணீருடனே அல்லது தண்ணீரின் கடைசி சொட்டுடனே கழிந்து விடும். அன்றி அவர் கைகளைக் கழுவுவாரானால் அவருடைய கைகளைக் கழுவுவாரானால் அவருடைய கைகளில்லிருந்து (அவர்) இரு கைகளாலும் செய்த பாவங்கள் அனைத்தும் தண்ணீர் உடனே கழிந்து விடும். மேலும் அவருடைய கால்களிருந்து (அவர்) இரு கால்களாலும் நடந்து செய்திருந்த எல்லாப்பாவங்களும் தண்ணீருடனோ அல்லது தண்ணீரின் கடைசி சொட்டுடனே கழிந்து விடும். இவ்வாறு அவருடைய எல்லாவிதமான பாவங்களும் கழிந்து அவர் தூய்மை பெற்றுவிடுகிறார் என்ற நபி(ஸல்) அவர்கள் கூறினார்.

அறிவிப்பவர் : அபூ ஹீரைரா (ரலி)

ஆதாரம் : முஸ்லிம், திர்மிதீ.

உளூ செய்து முடித்தவுடன் கீழ் வரும் துவாவை ஓதினால் சுவனத்தின் எட்டுவாயில் அவருக்காக திறந்து விடப்படுகின்றன என்று நபி (ஸல்) கூறினார்.

உங்களில் எவரும் உளூச்செய்து அந்த உளூவையும், பூரணமாகச் செய்த பின்னர், நிச்சயமாக வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வை தவிர வேறு நாயகன் இல்லை. அவன் தனித்தவன் அவனுக்கு யாதொரு இணையுமில்லை என்று நான் சான்று பகர்கிறேன். அன்றி நிச்சயமாக முகம்மது (ஸல்) அவர்கள் அவனுடைய அடியாரும் திருத்தூதருமாவார் என்றும் கூறினால் சுவனத்தின் எட்டுவாயில்களும் அவருக்கு திறந்து விடப்படுகின்றன அவர் எந்த வாயில் வழியாக செல்ல விரும்புகின்றரோ அந்த வாயில் வழியாக செல்வார் என்று நபி (ஸல்) கூறினார்.

அறிவிப்பவர்: உக்பதுப்னு ஆமீர் (ரலி)

நூற்கள்: முஸ்லிம் அபூதாவுத், தீர்மிதி

இன்று நம் இஸ்லாமிய பெண்கள் இடையே உளூ செய்யும் தண்ணீரை பற்றி பல தவறாக கருத்துகள் உள்ளன. உளூ செய்ய எடுக்கம் தண்ணீரில் கைப்படக்கூடாது. மாதவிடாய் பெண்கள் தொட்ட நீரில் உளூ செய்ய கூடாது. காப்பீர்கள் தொட்ட நீரில் உளூ செய்ய கூடாது என்று பல அய்பிராயங்கள் உள்ளன. நாம் இப்பொது எந்த எந்த தண்ணீரில் உளூ செய்யலாம் எந்த, எந்த தண்ணீரில் உளூ செய்யக்கூடாது என்று பார்போம்.

நிச்சயமாக தண்ணீர் சுத்தம் செய்யக்கூடியதாகும். அதனை எதும் அசுத்தம் ஆக்கி விடாது என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூ ஸயீத் அல்குத்ரீ (ரலி)

நூற்கள் : அபூதாவூத், திர்மிதீ, நஸாயீ

நிச்சயமாக தண்ணீரை அதனுடைய வாடை, நிறம். இவற்றை மிகைக்கக் கூடியவற்றைத் தவிர வேறு அசுத்தம் ஆகாது என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூ உளாமா அல்பாஹிலி (ரலி)

நூற்கள்: இப்னு மாஜா

“உங்களில் குளிப்புக் கடமையான எவரும் தேங்கி நிற்கும் தண்ணீரில் குளிக்க வேண்டாம் என்று நபி (ஸல்) கூறினார்“ என அபூஹு ரைரா (ரலி) அறிவிக்கிறார்.

நூல்: முஸ்லிம்.

உளூச் செய்யும் போது பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹிம் என்று கூறி செய்ய வேண்டும்.

எவர் உளூவின் தொடக்கத்தில் இறைவன் பெயரைக் கூறினாரோ அவருடைய உடல் முழுவதும் தூய்மை பெற்று விடும். எவர் இறைவனின் பெயரை கூறவில்லையோ அவர் உளூச் செய்த இடங்கள் மட்டும் தூய்மை பெறுகின்றன என்று நபி (ஸல்) கூறினார் என்று அபூஹு ரைரா அறிவிக்கிறார்.

இன்று நம் பெண்கள் மத்தியில் ஓளூவை நீக்கக் கூடியவை என்ற எதையெல்லாம் கூறுகிறார்கள் என்றால், ஓளூ செய்தவுடன் கணவனை தொடுவது உளூச் செய்தவுடன் தலையில் இருந்து மக்கனா எடுப்பது, காபிர்களிடம் இருந்து ஏதாவது பொருள் வாங்குவது உளூச் செய்தவுடன் எந்த பொருள்களையும் சாப்பிடக்கூடாது சாப்பிட்டால் உளூ முறிந்து விடும் என்று கூறுகிறார்கள். இனி நாம்

நபி(ஸல்) அவர்கள் எதையெல்லாம் உளூ முறியக் கூடியது என்று கூறியிருக்கிறார்கள் என்பதை பார்ப்போம்.

### மலம் ஜலம் கழித்தல்.

நபி(ஸல்) அவர்கள் (மலம்,ஜலம் கழிக்க) தமது தேவைகளுக்குக்காக வெளியே சென்றார்கள். பின்னர் உளூச் செய்தார்கள் என்று முக்ரா பின் ஷீஉபா(ரலி) அறிவிக்கிறார்.

நுல்: இப்னு மாஜா

### காற்று பிரிதல்

காற்று பிரிவதும் உளூவை நீக்கிக் கூடிய செயல்தான் உங்களில் எவருக்கேனும் ஹதஸ் ஏற்பட்டால் மீண்டும் உளூச் செய்யாதவரை அவரது தொழுகையை அல்லாஹ் ஏற்றுக் கொள்ளமாட்டான் என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹு ரைரா(ரலி) கூறிய போது ஹழ்ரமவ்த் என்ற ஊரை சேர்ந்த ஒரு மனிதர் அபூஹு ரைராவே ஹதஸ் என்றால் என்ன? என்று கேட்டார். அதற்கு அபூஹு ரைரா(ரலி) ஒசையுடனோ, ஒசையின்றியோ காற்று பிரிதல் எனப்பதிலளித்தார்கள்.

அறிவிப்பவர் : ஹம்மாம் பின் முனப்பஹ்

நுற்கள்: புகாரி, முஸ்லிம், அஹ்மத்.

இன்று பல போர் காற்று பிரிவது போல் உணர்வு ஏற்பட்டாலே மறுபடி உளூ செய்து தான் தொழவேண்டும் என்று கூறுகிறார்கள்.

தொழுது கொண்டிருக்கையில் காற்று வெளிப்படுவது போன்று உணர்வு ஏற்படுவது பற்றி ஒரு மனிதர் நபி(ஸல்) அவர்களிடம் கேட்டார். அதற்கு காற்று பிரியும் சப்தத்தை அல்லது அதன் நாற்றத்தை உணராதவரை தொழுகையை விட்டு செல்ல வேண்டாம் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என்று உப்பாதி பின் தமீம்(ரலி) அறிவிக்கிறார்

நூற்கள்: புகாரி, முஸ்லிம், அஹ்மத், அபூதாவுத், நஸயீ, இப்னு மாஜா.

### இச்சை நீர் வெளிப்பட்டால்

காம உணர்வு ஏற்பட்டு இச்சை நீர் வெளிபட்டால் உளூ நீங்கி விடும்.

நான் அதிகம் இச்சைநீர் வெளிப்படக்கூடியவனாக இருந்தேன். இது பற்றி நபி(ஸல்) அவர்களிடம் நேரடியாக கேட்க வெட்கப்பட்டு மிக்தாத்(ரலி) மூலம் வினவினேன் அதற்கு ஆணுறுப்பை கழுவிவிட்டு மீண்டும் உளு செய்யுமாறு நபி(ஸல்) கூறினார்.

அறிவிப்பவர்: அலி(ரலி)

நூல்: முஸ்லிம்.

### தூங்கினால்

ஆழ்ந்த உளுவை நீக்கும் காரியங்களில் ஒன்றாகும்.

நான் என் சிறிய தாயார் மைமூனா(ரலி) அவர்களின் வீட்டில் இரவு தங்கினேன். நபி(ஸல்) தொழுகைக்காக எழுந்து தொழுதார்கள். நான் அவர்களின் இடப்புறத்தில் நின்று கொண்டிருந்தோன். என் கையை பிடித்து தனது வலப்புறத்தில் என்னை நிறுத்தினார்கள். நான் (தொழுகையில் லேசாக தூங்கி விடும் போது எனது காது சோனையைப் பிடித்து என்னை விழிக்கச்செய்வார்கள்.

அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ்(ரலி)

நூல்: முஸ்லிம்

இஷா தொழுகைக்கு நபி(ஸல்) அவர்கள் வருவதை எதிர்பார்த்து காத்திருக்கும் நபித் தோழர்களின் தலைகள் (தூக்கத்தினால்) ஆடும் அவர்கள் மீண்டும் உளூ செய்யாமல் தொழுவார்கள்.

அறிவிப்பவர்: அலை(ரலி)

நூற்கள்: முஸ்லிம், திர்மிதீ, அபூதாவுத்.

மேலே கூறியுள்ள இரண்டு ஹதீஸ்களிலிருந்து தூங்குவதால் உளூ நீங்காது என்று நாம் அறிகிறோம்.

மலம், சிறுநீர், தூக்கம் போன்றவை ஏற்பட்டு விட்டால்அதன் மீது மஸஹ் செய்து கொள்ளலாம். என்று நபி(ஸல்) அனுமதி அளித்து இருக்கிறார்கள்.

அறிவிப்பவர்: ஸப்வான் பின் அஸ்ஸால்(ரலி)

நூற்கள்: அஹ்மத், நஸயீ, திர்மதி, இப்னுமாஜா

முதல் இரண்டு ஹதீஸ் தூக்கம் உளூவை நீக்காது என்றும் அடுத்த ஹதீஸ் படுத்து துங்கினால் உளூ நீக்கும் என்றும் முடிவு செய்யலாம்.

ஏனெனில் இரண்டு விதமான தூக்கங்களுக்கும் இடையே வித்தியாசம் இருப்பதை நாம் தெரிந்து கொள்ள முடிகிறது. நின்றே அமர்ந்தே தூங்கும் போது அரை குறை தூக்கமாகதான் அமையும். படுத்து தூங்கும் போது அது ஆழ்ந்த தூக்கமாக அமையும் அந்த சமயத்தில் காற்று வெளிப்படுவதற்கு அதிக வாய்ப்பு இருக்கிறது. இதற்கு நபித் தோழரின் கூற்றும் ஆதாரமாக இருக்கிறது.

உட்கார்ந்து உறங்கினாலும், நின்று உறங்கினாலும் உளூ நீங்காது படுத்து உறங்கிறால் உளூ நீங்கும்.

அறிவிப்பவர்: அபூ ஹு ரைரா(ரலி)

நூல்: பைஹகீ

இந்த ஹதீஸ்களின் அடிப்படையில் நின்றோ உட்கார்ந்தோ உறங்கும் சிறிய தூக்கம் உளூவை முறிக்கும் உன்றும் தெளிவாகின்றன.

### இன உறுப்பை (மர்மஸ்தானத்தை) தொடுதல்

யாரேனும் இன உறுப்பை தொட்டால் உளூ செய்யாமல் அவர் தொழக்கூடாது என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அறிவிப்பவர்: புஷ்ரா ரின்த் ஸப்வான்(ரலி)

நூற்கள்: அஹ்மத், அபூதாவுத், நஸயீ, திர்மிதீ, இப்னு மாஜா,

இப்னு குஸைமா, இப்னுஹிப்பான்,ஹாம்ம்.

ஒரு மனிதன் தமது இன உறுப்பை தொட்டால் உளூ செய்ய வேண்டுமா என்று நபி(ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்ட போது அதுவும் உங்கள் உறுப்புகளில் ஒன்று தானே என்று நபி(ஸல்) கூறினார்.

அறிவிப்பவர்: தல்க் பின் அலி(ரலி)

நூற்கள்: அபூதாவூத், திர்மிதீ, நஸயீ, இப்னு மாஜா

அஹ்மத், தாரகுத்னி, இப்னு ஹிப்பான், தப்ராணி.

இந்த இரண்டு ஹதீஸ்களும் ஒன்றுக்கொன்று முரண்பாடு உள்ளது போல் தெரிகிறது. மேலும் இரண்டு ஹதீஸ்களும், ஆதாரப்பூர்வமானதாக ஹதீஸ்களாக இருக்கின்றன. எனவே இரண்டையும் இணைத்து நாம் ஒரு முடிவுக்கு வரலாம். அதுவும் உமது உறுப்புகளில் ஒன்று தானே. என நபி(ஸல்) அவர்கள் கூறியதிலிருந்து தற்செயலாக தொட்டால் உளூ நீங்கிவிடும் என்றும், இச்சையுடன் தொட்டால் உளூ நீங்கிவிடும் என்றும் முடிவுக்கு வரலாம்.

### ஒட்டக மாமிசம் உண்டால்

ஒட்டக மாமிசம் உண்டால் உளூ நீங்கிவிடும்.

ஆட்டிறைச்சி உண்பதால் திரும்பவும் உளூ செய்ய வேண்டுமா? என்று கேட்கப்பட்ட போது நீ விரும்பினால் உளூ செய்யலாம். விரும்பினால் உளூ செய்யமலும் இருக்கலாம் என்றார்கள். ஒட்டகத்தின் இறைச்சியை சாப்பிட்டால் உளூ செய்ய வேண்டுமா என்று கேட்ட போது ஆம் ஒட்டகத்தின் இறைச்சியை சாப்பிட்டால் உளூ செய் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஜாபிர் இப்னு ஸமுரா(ரலி)

நூற்கள்: முஸ்லிம், அஹ்மத், திர்மிதீ

மேலே கூறப்பட்ட செயல்களாலே உளூ நீங்கும், இதை தவிர வாந்தி எடுத்தல், கணவர் தொட்டால், தலையில் மக்னா எடுத்தால் உளூ நீங்காது.

## கடமையான குளிப்பு.

---

தொழுகைக்கு உளூ எந்த அளவுக்கு முக்கியமோ. அந்த அளவுக்கு குளிப்பு கடமையானவர் குளிப்பதும் முக்கியமாகும். எந்த எந்த செயல்களால் குளிப்பு கட்டாயம் கடமையாகிறது என்பதை பார்க்கலாம்.

### விந்து வெளிப்பட்டால்

உடலுறவுன் மூலமே, உடலுறவு இன்றியோ விந்து வெளிப்பட்டால், உறக்கத்திலோ, விழிப்பிலோ ஆணுக்கோ, பெண்ணுக்கோ வெளிப்பட்டால் குளிப்பது கட்டாயமாகும்.

இச்சை நீர் வெளிப்பட்டால் உளூச் செய்ய வேண்டும். விந்து வெளிப்பட்டால் குளிக்க வேண்டும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அலி(ரலி)

நூற்கள்: அஹ்மத், இப்னுமாஜா, திர்மிதீ.

ஒரு பெண்ணுக்கு ஸ்கலிதம் ஏற்பட்டால் அவள் குளிப்பு அவசியமா? என நபி(ஸல்) அவர்களிடம் கேட்ட போது ஆம் என பதிலளித்தார்கள்.

அறிவிப்பவர்: உம் முஸ்லீம்(ரலி)

நூற்கள்: புகாரி, முஸ்லிம், திர்மிதீ, ஹஸயீ, இப்னுமாஜா, அஹ்மத்.

### உடலுறவு கொள்ளல்.

உடலுறவு கொண்டால் குளிப்பு கட்டாயமாகும். உடலுறவின் போது விந்து வெளிப்படாவிட்டாலும் சரியே . இஸ்லாத்தில் ஆரம்ப காலத்தில் விந்து வெளிப்படாவிட்டால் குளிக்க தேவையில்லை என்ற

நிலை இருந்து வந்தது. பின்பு உடலுறவு கொண்டு விட்டால் குளித்தாக வேண்டும். என நபி(ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள்.

அறிவிப்பவர்: உபைபின் கஃபு(ரலி)

நூற்கள்: அஹ்மத், அபூதாவூத், திர்மிதீ.

## மாதவிடாய் ஏற்பட்டால்.

பெண்கள் மாதவிடாய் காலங்களில் தொழக்கூடாது. அதிலிருந்து சுத்தமானதும் கட்டாயம் குளித்தாக வேண்டும். அதன் பிறகு தொழ வேண்டும்.

“மாதவிடாய் ஏற்படும் போது தொழுகையை விட்டு விடு, மாதவிடாய் நின்ற பின் தொழு, என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி)

நூற்கள்: புகாரி.

இன்று பெண்கள் இத்தனை வருடங்களாக தொழாமல் இருந்து இப்பொழுது தொழ ஆரம்பித்தால் இது வரை தொழததை தொழ வேண்டும் என்று கூறகிறார்கள். இது தவறானது என்பதை புரிய வேண்டும் தொழுகை என்பது உரிய நேரத்தில் கடமையாக்கி இருக்கிறான். மாதவிடாய் காலங்களில் விடுப்பட்ட தொழுகைகளை திருப்பி தொழ வேண்டியது இல்லை.

எங்களுக்கு மாதவிடாய் ஏற்படும் பொழுது தொழுகை நோன்பு தொழுகை, நோன்பு விட்டு விடுமாறும் மாதவிடாய் நின்ற பின் விடுபட்ட நோன்பு நோற்குமாறும், விடுபட்ட தொழுகைகளை தொழ வேண்டியது இல்லை என்றும் நபி(ஸல்) கட்டளை இட்டிருந்தார்கள்..

அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி)

நூற்கள்: புகாரி, முஸ்லிம், திர்மிதீ, நஸயீ, இப்னுமாஜா, அபூதாவூத்,அஹ்மத்.

## பிரசவத்தீட்டு ஏற்பட்டால்

குழந்தை பெற்றபின் இரத்தம் வெளிபட்டுக் கொண்டிருப்பதை நிஃபாஸ், பிரசவ இரத்தம் என்று கூறுவார்கள். இரத்தம் வந்து கொண்டிருக்கும் போது தொழக்கூடாது நின்ற பின் குளித்து விட்டுதான் தொழ வேண்டும். விடுபட்ட தொழுகைகளை தொழ வேண்டியது இல்லை.

பெண்கள் சிலர் மாதவிடாயின் போது மட்டுமின்றி எப்பொழுதும் உதிரப் போக்கு உள்ளவர்களாக இருப்பார்கள். இது ஒருவகை நோயாகும். இது காரணமாகத் தொழுகை மற்றும் இதர வணக்கங்களை விட்டு விடக்கூடாது. அவர்களின் வழமையான மாதவிடாய் நாட்கள் முடிந்தவுடன் குளித்துக் கொள்ள வேண்டும் பிறகு துணியால் கட்டிக்கொண்டு ஒவ்வொரு தொழுகைக்கும் உளூச் செய்து தொழ வேண்டும்.

ஃபாத்திமா பின்த் அபீஹுபைத்(ரலி) என்ற பெண் நபி(ஸல்) அவர்களிடம் வந்து நான் உதிரப் போக்குடையவராக இருக்கிறோன். தூய்மையாவதே இல்லை. எனவே தொழுகையை நான் விடதான் வேண்டுமா? என்று கேட்ட போது நபி(ஸல்) அவர்கள் நீ மாதவிடாய் நாட்களில் மட்டும் தொழுகையை விடுவாயாக, பிறகு குளித்துக் கொள்வாயாக, ஒவ்வொரு தொழுகைகும் உளூ செய்து கொள்வாயாக.

அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி)

நூற்கள்: புகாரி, முஸ்லிம், திர்மதீ

## குளிக்கும் முறை

கடமையான குளிப்பை நிறைவேற்றும் முன் மர்ம ஸ்தானத்தை கழுவி உளூ செய்து கொள்ள வேண்டும் குளிக்கும் போது உடல் முழுவதும் நன்றாக தண்ணீர் படுமாறு குளிக்க வேண்டும். சடை போட்டுள்ள பெண்கள் சடையை அவிழ்த்து விட்டு குளிக்க வேண்டும் என்ற கட்டாயமல்ல குளித்த பின் தொழ வேண்டிருந்தால் மீண்டும் உளூ செய்ய வேண்டிய அவசியமில்லை. குளிக்கும் போது செய்த உளூவே போதுமானது. நபி(ஸல்) அவர்கள் கடமையான குளிப்பை நிறை வேற்றும் போது தம் இரு கைகளையும் கழுவிவிட்டு தொழுகைகை செய்வது போன்று உளூ செய்வார்கள்.

அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி), மைமூனா(ரலி)

நூல்: புகாரி

அல்லாஹ்வின் தூதரே நான் எனது தலைமுடியை பின்னிக் கொண்டிருக்கிறோன். கடமையான குளிப்பின் போது சடையை அவிழ்த்து விட வேண்டுமா? என்று நான் கேட்டேன். அதற்கு நபி(ஸல்) அவர்கள் வேண்டியதில்லை. உனது தலையில் மூன்று தடவை தண்ணீர் ஊற்றி தூய்மைப்படுத்திக் கொள் என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: உம்முஸலமா(ரலி)

நுற்கள்: முஸ்லிம், அஹ்மத், நஸயீ, அபூதாவூத், திர்மிதீ, இப்னு மாஜா.

நபி(ஸல்) குளித்தவுடன் உளூ செய்ய மாட்டார்கள்.

அறிவிப்பவர்: அஹ்மத், அபூதாவுத், நஸயீ. இப்னுமாஜா.

## தயம்மும்

சில நேரங்களில் உளூவையோ, குளிப்பையோ நிறைவேற்ற தண்ணீர் கிடைக்காமல் இருக்கலாம் அல்லது நோயின் காரணமாக தண்ணீர் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படலாம். இந்த சந்தர்ப்பங்களில், உளூவுக்கும், குளிப்பிற்கும் மாற்று பரிகாரம் தான் தயம்மும்.

தயம்மும் என்பது தண்ணீருக்கு பதிலாக சுத்தமான மண்ணை பயன் படுத்துவதாகும். இச்சலுகை உள்ளூரில் இருந்தாலும் பயணம் செய்தாலும் பொதுவானது ஆகும்.

கைகளில் படிந்துள்ள மண்ணை ஊதிவிட்டு முகத்தை தடவிக் கொள்ள வேண்டும். பிறகு இடது உள்ளங்கையை வலது முன்னங்கையின் மேற்புறத்திலும் முன்னங்கையின் மேற்புறத்திலும் தடவ வேண்டும். இப்படி செய்வதற்க்கே தயம்மும் என்று சொல்லப்படும்.

தயம்மும் செய்து தொழுதபின் தண்ணீர் கிடைத்தால் மறுபடி தொழ வேண்டியதில்லை.

தயம்மும் என்பது மண்ணை கொண்டு முகத்தையும் கைகளையும் தடவிவதாகும். என்றும் அல்லாஹ் கூறுகிறான். (5:6)

நபி(ஸல்) அவர்கள் தயமம் என்பது முகத்தில் தடவுவதற்காகவும், கையில் தடவுவகற்காகவும் ஒரு தடவை கைகளை தரையில் அடிப்பதாகும் என்று கூறியுள்ளார்கள்.

அறிவிப்பவர்: அம்மார்பின் யாஸீர்(ரலி)

நூற்கள்: அஹ்மத், அபூதாவூத்.

நீங்கள் நோயாளியாகவோ, பயணத்திலோ இருந்தால் நீங்கள் எவரேனும் மலங்கழித்து விட்டு வந்தாலும் அல்லது பெண்களை தீண்டினாலும் (அந்நேரத்தில்) தண்ணீர் கிடைக்காவிட்டால் தூய மண்ணில் தயம்மும் செய்யுங்கள். (5:6)

## தொழுகை

இஸ்லாம் என்பது ஐந்து பெரிய தூண்கள் கலிமா, தொழுகை, நோன்பு, ஜக்காத், ஹஜ் இந்த ஐந்தும் சேர்ந்தது தான் இஸ்லாம். இன்றைய பெரும்பாலோனோர். நாம் முஸ்லிம் தாய் தந்தையருக்கு பிறந்தால் சுவனம் சென்று விடலாம் என்று நினைத்து தொழாமலேயே இருக்கின்றனர். எந்த ஒரு மனிதரும் லாயிலாஹகா இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூல்லுல்லாஹ் என்ற கலிமா மொழிந்து ஏற்றுக் கொள்கிறார்களோ அவர்கள் மேல் மற்ற நான்கும் அடுத்த கணமோ கடமை ஆகிறது. ஆனால் இன்று பெரும்பாலான பெண்களும், ஆண்களும் தொழுவது கிடையாது. அதிலும் குறிப்பாக பெண்கள் தொழுவது கிடையாது. அவர்கள் என்னென்ன சாக்கு கூறுகிறார்கள் என்று பார்ப்போம். ஒரு சில பெண்கள் நாங்கள் என்ன பாவம் செய்தவர்களா தொழுவதற்கு என்று கேட்கிறார்கள். அல்லாஹ் திருமறையில் கூறுகிறான். மனித வர்க்கங்களையும் ஜின் வர்க்கங்களையும் என்னை வணங்குவதற்காகவே அன்றி நான் படைக்கவில்லை. (51:56)

இறைவனை வணங்குவதால் அவனுடைய கஜாகு நிரம்பி விடுவதில்லை. அவனுடைய அந்தஸ்தும் கூடுவதில்லை.

நபி(ஸல்) அவர்கள் கால் வீங்கும் அளவு இரவில் நின்று தொழுது கொண்டிருந்தார். அப்பொழுது

நபி(ஸல்) அவர்களிடம் , ஆயிஷா(ரலி) கேட்கிறார். அல்லாஹ்வின் தூதரே, அல்லாஹ் உங்களுக்கு முன் பாவங்களையும், பின் செய்கின்ற பாவத்தையும் அல்லாஹ் மன்னிப்பதாக கூறியுள்ளானே. பின் ஏன் நீங்கள் கால்வீங்கும் அளவு தொழுகிறீர்கள் என்று கேட்டதற்கு நபி(ஸல்) அவர்கள். ஆயிஷாவே அல்லாஹ்வுக்கு நான் நன்றியுடையவனாக இருக்கிறேன் என்று நபி(ஸல்) கூறினார்கள்.

இன்னும் மரணவேளையில் கூட நபி(ஸல்) அவர்கள் தொழுகையை விட்டதில்லை. அவர் மரண வேலையில் தொழுகைக்காக உளூ செய்வதற்கு தண்ணீர் எடுத்து வைக்குமாறு ஆயிஷா(ரலி) அவர்களிடம் நபி(ஸல்) உளூ செய்தவுடன் மயக்கம் போட்டு விழுகிறார். மறுபடியும் மயக்கம் நீங்கியவுடன் உளூ செய்கிறார். மறுபடியும் மயக்கம் போட்டு விழுகிறார். இப்படியாக இரண்டு பிறகு மூன்று முறை மயக்கம் போட்டு விழுகிறார். பிறகு இரண்டு சகாபிகளின் தோழில் கை போட்டு தொழுகைக்கு செல்கிறார் என்பதை விட இழுத்து செல்கிறார். அவர்களின் இரண்டு பெருவிரல்களும் மண்ணில் கோடு போட்டுக் கொண்டு செல்கிறதாம். இந்த ஹதீஸை படிக்கும் போது கலங்காத கண்களெல்லாம் கலங்கிவிடும். அப்பெண் நபி(ஸல்) பாவம் செய்தவர்களா.

இன்றைக்கு நம் பெண்கள் இன்றும் என்ன கூறுகிறார்கள். நம் கேட்பதை எல்லாம் அல்லாஹ் கொடுக்கிறானா என்று கூறுகிறார்கள்.

அல்லாஹ் கூறுகிறான்,

“பொறுமையை கொண்டும், தொழுகையை கொண்டும் என்னிடம் உதவி தேடுங்கள் எனினும் நிச்சயமாக இது உள்ளச்சம் உடையோர்கன்றி மற்றவர்களுக்கு பெரும் பாரமாகவே இருக்கும்“. (2:45)

நம்பிக்கை கொண்டோரே, பொறுமையுடனும், தொழுகையுடனும், (இறைவனிடம்) உதவி தேடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையுடையவர்களுடன் இருக்கின்றான். (2:153)

நாம் பொறுமையை இழந்து நாம் கேட்டதை எல்லாம் இறைவன் தரவில்லை என்று தொழாமல் இருக்கிறோம்.

அல்லாஹ் மூன்று வகையாக துவாக்களை அங்கீகரிப்பான் என்று நபி(ஸல்) கூறியுள்ளார்கள்.

1. கேட்டதை எல்லாம் அப்படியே அல்லாஹ் கொடுப்பானாம்

2. கேட்டதை விட அதிகமாக கொடுப்பதாகும்.

3. கேட்டதில் ஏதாவது தீங்கு இருந்தால் அதில் இருந்து காப்பாற்றுவானாம்.

நாம் தான் அவசரப்பட்டு இறைவன் கொடுக்கவில்லையே கொடுக்கவில்லையே என்று புலம்புகிறோம்.

நாம் சாதரணமாக 3 மாத குழந்தை நம் வீட்டில் இருந்து அது அழும் போது ஹார்லிக்ஸ் கலந்து கொடுப்போமா? கொடுக்கமாட்டோம். இதே 4 வயது குழந்தைக்கு ஹார்லிக்ஸ் கலந்து கொடுப்போம். ஏனென்றால் 3 மாத குழந்தைக்கு ஜீரணமாகாது என்பதும் நமக்குத் தெரியும். நாம் பெற்ற பிள்ளைகளுக்கே எது செய்தால் நல்லது என்று நமக்கு தெரியும் போது அனைத்து சக்தியும் பெற்று இந்த உலகையே பரிபாலிக்கும் அல்லாஹ்வுக்கு நமக்கு எது செய்தால் நன்மை எது செய்தால் தீமை என்று தெரியாதா?

உங்கள் குழந்தை 7வயது அடைந்தால் தொழ வையுங்கள். 10 வயது ஆகியம் தொழவில்லை என்றால் அடித்து தொழவையுங்கள் என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

நாம் நம் குழந்தைகளுக்கு 7வயது ஆகும் போது தொழ கற்றுத் தந்துள்ளோமா என்பதை சகோதரிகளே நன்றாக சிந்தித்து பாருங்கள் அல்லாஹ் என்ன 24 மணிநேரமும் நம்மை தொழச் சொல்கிறான். 1 நேர தொழுகைக்கு 5 நிமிடம், 5 நேர தொழுகைக்கு 25 நிமிடம் நம்மால் ஒதுக்க முடியாதா.

நிச்சயமாக நான்தான் அல்லாஹ் என்னை தவிர வேறு நாயகன் இல்லை ஆகவே என்னை நீர் வணங்கும். என்னை தியானிக்கும் பொருட்டு தொழுகையை நிலைநிறுத்துவீராக. (20:14)

அல்லாஹ் என்ன செய்துவிட்டான். நான் கஷ்டப்பட்டு கொண்டே இருக்கிறேன் அல்லாஹ் எனக்கு எல்லா சௌகரியங்களையும் கொடுக்கட்டும் என்று கூறும் பெண்களும் நிறைய உண்டு. இவர்கள் நன்றாக சிந்தித்து பார்க்க வேண்டும்.

இன்று எத்தனையோ பேர் கை இல்லாமல் கால் இல்லாமல் இருக்கிறார்கள். உங்களுக்கு அழகான கணவன், அழகான வீடு, அழகான குழந்தைகள், நிறைய சொத்துகளை அல்லாஹ் கொடுத்து விட்டு அதற்கு பதிலாக உங்களுடைய கண்களை எடுத்துக் கொள்கிறோன் என்று கூறினால் நாம் ஏற்றுக்கொள்வோமா மாட்டோம். இவை அனைத்தையும் விட சிறந்ததான கண்ணை அல்லாஹ் நமக்கு கொடுத்துள்ளான். இன்னும் நம்முன்னே பழவகை, உணவுவகைகள், இனிப்புவகைகள், எல்லாம் வைத்து நாம் நாக்குக்கு சுவையை அறியக்கூடிய சக்தியை அல்லாஹ் எடுத்துவிட்டால் நாம் சந்தோஷப்படுவோமா? மாட்டோம். அப்பொழுது இவை அனைத்தையும் விட சிறந்ததான நாக்கின் சுவை அறியக் கூடிய சக்தியை தந்துள்ளான். இதற்காகவாவது நாம் அல்லாஹ்வுக்கு நன்றி உடையவராக இருக்க வேண்டாமா.

நாம் அல்லாஹ்வை வணங்கி அவனிடம் துஆ கேட்டால் அல்லாஹ் எந்த அளவுக்கு சந்தோசப்படுகிறான் என்று நபி(ஸல்) ஒரு ஹதீஸின் மூலம் நமக்கு விளக்குகிறார். ஒரு மனிதன்

பாலைவனத்தில் ஒட்டகத்தின் மீது தனக்கு தேவையான உணவு, உடை, நீர் அனைத்தும் எடுத்துக் கொண்டு பிராயணம் செய்கிறார். அப்போது சற்று ஓய்வு எடுக்கிறார். அவர் ஓய்வு எடுத்து விட்டு பிரயாணம் செய்வதற்காக ஒட்டகத்தை பார்க்கிறார் ஒட்டகம் காணமால் போய் விடுகிறது உடனே அவர் இனி நாம் அவ்வளவு தான். இனி நாம் வந்த இடத்திற்கும் திரும்பி போக முடியாது போக வேண்டிய இடத்திற்கும் போக முடியாது நமக்கு வேண்டிய உணவு, உடை நீர் எல்லாம் போய் விட்டதே என்று கவலையாக அமர்ந்து கொண்டிருக்கின்றார். அப்பொழுது போன ஒட்டகம் திரும்பி வந்து கொண்டிருக்கிறது உடனே இவருக்கு பெரும் மம்ழ்ச்சி உடனே இறைவனிடம் பிராத்தனை செய்கிறார் மிகவும் மம்ழ்ச்சியில் இறைவனிடம், இறைவா! நீ எனக்கு அடிமை நான் உனக்கு எசமான் என்று கூறுகிறான் சந்தோசத்தில் நாம் எதை பேசுகிறோம் என்றெ தெரியாது அல்லவா அதைபோல், நாம் இறைவனிடம் பிராத்தனை செய்தால் அல்லாஹ் அந்த அளவிற்கு சந்தோசப்படுகிறான்.

இன்னும் அல்லாஹ் குர்ஆனில் கூறிகிறான்.

“(நபியே) உம் குடும்பத்தினரை தொழுது வருமாறு ஏவுவீராக (தொழுகையின் மீது) நீர் பொறுமையும் உறுதியும் கொண்டிருப்பீராக நாம் உம்மிடம் உணவு கேட்க வில்லை. ஆனால் உமக்கு உணவை நாம் கொடுக்கிறோம். இறுதியாகச் சிறந்த நிலை பயபக்தி(யுடை யோருக்கு) தான்“. (20:132)

நாம் நன்றாக சிந்தித்து பார்க்க வேண்டும் பிற மதங்களை போல இஸ்லாமிய மார்கம் என்ன தீ மிதிக்க கூறுகிறதா அல்லது மாலை, தேங்காய், பழம் , பூ , ஊதுபத்தி, சாம்பிராணி, சர்க்கரை, பொங்கல், பால் அபிஷேகம், நெய் அபிஷேகம் என்று செலவு செய்யக்கூறுகிறதா, ஒரு பைசாவும் செலவு கிடையாது. மிகவும் எளிமையான இறைவழிபாடு தான் இறைவன் மூஃமின்களுக்கு கட்டளை இட்டிருக்கிறான். அதை கூட நாம் நிறைவேற்றுவது கிடையாது.

நபி(ஸல்) அவர்களிடத்தில் அடிமை ஒருவர் கேட்கிறார். அல்லாஹ்வின் தூதரே இப்பொழுது நான் நினைத்த நேரத்தில் வந்து பார்க்கிறேன். உங்களுடன் நெருக்கமாக இருக்கிறேன். நாளை மறுமையில் உங்களுடன் நெருக்கமாக இருக்க நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டதற்கு நபி(ஸல்) அதற்கு தொழுகையை நிலை நிறுத்துவீராக என்று கூறினார்.

மறுமையில் கேட்கப்படும் முதல் கேள்வி தொழுகையை பற்றிதான். மறுமையில் அல்லாஹ்வின் நிழலை தவிர வேறு நிழலே இருக்காது. சூரியன் தலைக்கு மேல் கொண்டு வந்து நிற்க வைப்பானாம் இறைவன். நம் வியர்வை காது வரை ஆறு போல இருக்குமாம். அந்த நேரத்தில் அல்லாஹ்வின் அர்சின் நிழலில் ஏழுவகையானவர்களுக்கு அல்லாஹ் நிழல் தருவானாம்.

1. தொழுகையை நிலை நாட்டியவர்கள்.
2. நேர்மையான தலைவர்.
3. இளம் வயதில் பள்ளியுடன் அதிக தொடர்புவைத்தவர்.
4. வலக்கை தருவது இடக்கைக்கு தெரியாமல் இருப்பது.
5. தனிமையில் அல்லாஹ்வை நினைத்து அழுவது.
6. அல்லாஹ்வுக்கு வேண்டிய ஒருவரை நேசித்து அல்லாஹ்வுக்கு வேண்டி வெறுப்பவர்.
7. அழகிய பெண்கள் விபச்சாரத்திற்கு அழைத்தும் விபச்சாரத்திற்கு செல்லாதவர்.

தொழதவனின் தான தர்மங்கள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது. என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்.

தொழக் கூடியவர்கள் நாளை மறுமையில் நபிமார்களுடனும் உண்மையாளர்களுடனும், உயிர் தியாம்களுடனும் இருப்பார்கள்.

“அல்லாஹ்விடம் உதவி தோடுங்கள் எனினும் நிச்சயமாக இது உள்ளச்சம் உடையோர்க்கேயன்றி மற்றவர்களுக்கு இது பாரமாகவே இருக்கும்.“ (2:45)

தொழுகையின் அழைப்பை கேட்டு வராதவன் பாவி, நயவஞ்சகன்.

“ஈமான் கொண்டவர்கள் நிச்சயமாக வெற்றி பெற்று விட்டனர்“. (23:1)

“அவர்கள் எத்தகையோரென்றால், தங்கள் தொழுகையில் உள்ளச்சத்தோடு இருப்பார்கள்“. (23:2)

முஸ்லீமுக்கும் காபீருக்கும் உள்ள வேறுபாடு தொழுகை தான்.

நபி(ஸல்) அவர்களின் சகாபாக்கள் தொழுகையை விட்டவர்களை தவிர காபீர் என்று யாரையும் கூற மாட்டார்கள்.

ஒரு முறை நபி(ஸல்) அவர்கள் பள்ளியில் தொழுது விட்டு வரும் போது ஓரு நபி(ஸல்) அவர்களின் தோழர் பள்ளி வாயிலின் முன்பு அமர்ந்து இருந்தார். அப்போது அவரை பார்த்து கேட்டார். அதற்க்கு அந்த தோழர்அல்லாஹ்வின் ஏன் இப்படி கேட்கிறேன். நான் நிறைய தர்மம் செய்கிறோன். உங்களுடன் போரில் பங்கு பெறுகிறேன். இப்படி இருந்தும் முஸ்லீமா, காபீரா என்று கேட்கிறீர்களே என்று கேட்க அதற்க்கு நபி(ஸல்) அவர்கள் இங்கே, தொழுகை நடக்கும் போது நீர் அமர்ந்துள்ளீர்களே அதனால் கேட்டேன் என்று நபி(ஸல்) கூறினார். அதற்க்கு அந்த தோழர் நான் ஏற்கனவே தொழுது விட்டேன் என்று கூறினார். அதற்கு நபி(ஸல்) தொழுது இருந்தாலும் ஜமாத்தாக தொழுதால் அல்லாஹ் அதை நஃபில் வணக்கங்களில் எழுதுவான் என்று இறை தூதர் முகம்மது நபி(ஸல்) கூறினார்.

தொழுது முடித்தவரையே நபி(ஸல்) இவ்வாறு கேட்டார் என்றால், இன்று தொழாமல் இருக்கிறோமே அவர்களுடைய நிலலையை சிந்தித்து பாருங்கள்.

தொழாதவரின் வீட்டை தீ வைக்குமாறு நபி(ஸல்) அவர்கள் கூறினார்.

மேலும் பொறுமையை கொண்டும், தொழுகையை கொண்டும் (அல்லாஹ்விடம்) உதவி தேடுங்கள் எனினும், நிச்சயமாக இது உள்ளச்சம் உடையோர்க்கின்றி மற்றவர்களுக்கு பெரும் பாரமாகவே இருக்கும். (2:45)

இன்றும் அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான். “அவர்கள் சுவர்க்க சேலையில் இருப்பார்கள் எனினும், விசாரித்துக் கொள்வர்கள் குற்றவாளிகளை குறித்து உங்களை (ஸகர்) நரகத்தில் நுழைய வைத்து எது என்று கேட்பார்கள். அவர்கள் பதில் கூறுவார்கள். தொழுபவர்களில் நின்றும் நாங்கள் இருக்கவில்லை. அன்றியும் ஏழைகளுக்கு நாங்கள் உணவும் அளிக்கவில்லை. (வீணானவற்றில்) மூழ்ம் ம்டந்தோருடன் நாங்களும் மூழ்ம் ம்டந்தோம்.“ (74:40 மூழ்மூ 045).

தொழாதவர்கள் மறுமையில் நரகத்தில் பிர்ஹவுன் ஹாமான், ஹாரூன் போன்ற இறைநிராகரிப்பாளர்களுடன் இருப்பார்கள்.

இது வரை தொழக் கூடியவர்களிம் நிலையும் தொழதவர்களிம் நிலையும் நாம் பார்த்தோம். இனி சுன்னத்தான தொழுகை தொழுவதால் என்ன நன்மைகள் என்று பார்போம். கடமையல்லாத உபரியான வணக்கங்களில் நாம் நடை முறையில் சுன்னத் என்கிறோம்.

### ஃபஜ்ருடைய முன் சுன்னத்.

ஃபஜ்ருடைய முன் சுன்னத் இரண்டு ரக் அத்துகளாகும்.

யார் இரவிலும், பகலிலும், பன்னிரன்டு ரக்அத்துகள் தொழுகின்றாரோ அவருக்காக சுவனத்தில் ஒரு வீடு கட்டப்படுகிறது என நபி(ஸல்) அவர்கள் கூற நான் செவியுற்றேன்.

அறிவிப்பவர்: உம்மு ஹபிபா(ரலி)

நூல்: முஸ்லிம்.

லுஹருக்கு முன் நான்கு ரக்அத்துகளும், லுஹருக்கு பின் இரண்டு ரக்அத்துகளும், மக்ரிப்புக்குப் பின் இரண்டு ரக்அத்துகளும், இஷாவுக்கு பின் இரண்டு ரக்அத்துகளும், பஜ்ருக்கு முன் இரண்டு ரக்அத்துகளும், இஷாவுக்குபின் இரண்டு ரக்அத்துகளும், பஜ்ருக்கு முன் இரண்டு ரக்அத்துகள் ஆகிய சுன்னத்தான பன்னிரெண்டு ரக்அத்துகளை யார் தொழுகின்றாரோ அவருக்காக சுவனத்தில் ஒரு வீடு கட்டப்படுகின்றது என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி)

நூற்கள்: திர்மிதீ, நஸயீ, இப்னுமாஜா

நாம் அடுத்தவர்களை பார்த்து பொறாமை படுகிறோம். வீடு, பங்களா, கார் வைத்துள்ளார்கள் என்று இதை அனைத்தை விட சிறந்தது என்று நபி(ஸல்) கூறுவதை பாருங்கள்.

எவர் ஒருவர் பஜ்ருடைய இரண்டு ரக் அத்துகளை தொழகிறார்களோ அவர்களுக்கு உலகத்தில் உள்ள அனைத்து பொருளை விட சிறந்தது என்று நபி(ஸல்) கூறியுள்ளார்.

பஜ்ருடைய இரண்டு ரக் அத்துகள்

இந்த உலகம் இன்னும் அதில் உள்ளவை அனைத்தை விடவும் மிகச் சிறந்ததாகும் என்று நபி(ஸல்) கூறியுள்ளார்.

அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி)

நூல்: முஸ்லிம்.

நபி(ஸல்) அவர்கள் பஜ்ருடைய சுன்னத் அளவிற்கு வேறு எந்த உபரியான தொழுகைக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்ததில்லை.

அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி)

நூல்: புகாரி.

யார் பஜ்ருடைய (சுன்னத்) இரண்டு ரக்அத்துகளை சூரியன் உதித்த பின்பு தொழுவராக என்று நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூ ஹு ரைரா(ரலி)

நூல்: திர்மிதீ.

பஜ்ருக்கு பிறகு சூரியம் உதிக்கும் வரை தொழுவதையும், அஸருக்குப்பின் சூரியன் மறையும் வரை தொழுவதையும் நபி(ஸல்) அவர்கள் தடுத்தார்கள் என நம்பிக்கைகுரிய பலர் என்னிடம் கூறியுள்ளார்கள். அவர்களில் எனக்கு மிகவும் விருப்பமானவர் உமர்(ரலி) ஆவார்.

அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ்(ரலி)

நூல் : புகாரி.

### லுஹருக்கு முன்

நான் நபி(ஸல்) அவர்களுடன் லுஹருக்கு முன் இரண்டு ரக்அத்துகளையும், இஷாவுக்கு பின் இரண்டு ரக்அத்துகளையும், ஜிம்மாவுக்க பின் இரண்டு ரக்அத்துகளையும் தொழுது இருக்கிறேன். மக்ரிப், இஷா (தொழுகையினுடைய சுன்னத்) தொழுகைகளை நபி(ஸல்) அவர்கள் வீட்டில் தொழுது இருக்கிறேன்.

அறிவிப்பவர் : இப்னு உமர்(ரலி)

நூல் : புகாரி.

நான் ஆயிஷா(ரலி) அவர்களிடம் நபி(ஸல்) அவர்களின் உபரியான வணக்கத்தை பற்றி வினாவினேன். அதற்கு அவர் நபி(ஸல்) அவர்கள் என்னுடைய வீட்டில் லுஹருக்கு முன் நான்கு ரக்அத்துகளும், பிறகு பள்ளிக்கு புறப்பட்டு சென்று மக்களுக்கு தொழுவிப்பார்கள். பிறகு வீட்டிற்கு வந்து இரு ரக்அத்துகள் தொழுவார்கள் என்று விளக்கமளித்தார்கள்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் திக்கீர்

நூல் : முஸ்லிம்.

மேலே உள்ள இரண்டு ஹதீஸையும் முரன்பாடாக கருதக்கூடாது. ஒரு சில நேரங்களில் இரண்டு ரக்அத்தாகவும், ஒரு சில நேரங்களில் நான்கு ரக்அத்தாகவும் தொழுது இருக்கிறார்.

இதே போல் லுஹர் உடைய பின் சுன்னத்தும் இரண்டு அல்லது நான்காக தொழலாம். யார் லுஹருக்கு முன்பாக நான்கு ரக்அத்துகளும் லுஹருக்கு பின்பாக நான்கு ரக்அத்துகளும் தொழுகிறார்களோ அவருக்கு நரகத்தை அல்லாஹ் தடுத்து விடுகிறான் என்று நபி(ஸல்) கூறியுள்ளார்.

அறிவிப்பவர் : உம்மு ஹபியா(ரலி)

நூல் : திர்மிதீ.

### அஸருக்கு முன்

அஸருக்கு பிறகு அல்லாஹ்வின் தூதர் நபி(ஸல்) அவர்கள் தொழுது கொண்டிருந்த இரண்டு ரக்அத்துகளை பற்றி ஆயிஷா(ரலி)யிடம் அபூஸலாமா வினாவிய போது அல்லாஹ்வின் தூதர் நபி(ஸல்) அவர்கள் அவ்விரு ரக்அத்துகளையும் அஸருக்கு முன் தொழுது கொண்டிருந்தார்கள். பிறகு அவ்விரு ரக்அத்துகளையும் தொழமுடியாமல் வேறு அலுவலாக ஈடுபட்டிருந்த காரணமாகவோ அல்லது அவ்விரு ரக்அத்துகளை மறந்து விட்டதின் காரணமாகவோ அவ்விரண்டையும் அஸருக்கு பின் தொழுதார்கள். பிறகு அவ்விரண்டையும் உறுதி செய்துவிட்டார்கள். அவர்கள் ஒரு தொழுகையை தொழுதால் அதை நிரந்தரமாக தொழுவார்கள்.

அறிவிப்பவர் : முஹம்மது

நூல்: முஸ்லிம், நஸயீ.

நபி(ஸல்) அவர்கள் அஸருக்கு முன்னர் தொழுது கொண்டிருந்த இரண்டு ரக்அத்துகள் விடுபட்ட காரணத்தினால் அதை அஸருக்கு பின்னால் நிறைவேற்றினார்கள் என இந்த ஹதீஸ் கூறப்படுவதிலிருந்து அஸருடைய முன் சுன்னத் இரண்டு ரக்அத்துகள் என்பதை அறியமுடிகிறது அஸருக்கு முன் நான்கு ரக்அத்துகள் தொழலாம் என்பதற்கு கீழ்கண்ட ஹதீஸ் ஆதாரமாக உள்ளது.

அஸருக்கு முன் நான்கு ரக்அத்துகள் தொழும் மனிதருக்கு அருள் செய்வான் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : இப்னு உமர்(ரலி)

நூற்கள் : அஹ்மத், திர்மிதீ, அபூதாவுத், இப்னுமாஜா

பஜ்ரிலிருந்து சூரியன் உதிக்கும் வரை தொழுவதையும், அஸருக்கு பிறகிலிருந்து சூரியன் மறையும் வரை தொழுவதையும் நபி(ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள் என நம்பிக்கைக்குரிய பலர் என்னிடம் கூறியுள்ளார்கள். அவர்களில் எனக்கு மிகவும் விருப்பமானவர் உமர்(ரலி) ஆவார்.

அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ்(ரலி)

நூல் : புகாரி

இந்த ஹதீஸில் அஸருக்கு பின் தொழுவதை நபி(ஸல்) அவர்கள் தடை செய்துள்ளதாக தெரிகிறது. இதே போல் பல

ஹதீஸ்களில் உள்ளன. அவை அனைத்தும் மிக ஆதாரபூர்வமானவையாக அமைந்துன்னதால் பெரும்பாலான அறிஞர்கள் அஸருக்கு பின் தொழுகை இல்லை என்றே கூறுகிறார்கள்.

அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் அஸர் தொழுதார்கள். பிறகு என்னுடைய வீட்டிற்கு வந்து இரண்டு ரக்அத்துகள் தொழுதார்கள். அப்போது நான் அவர்களிடம், அல்லாஹ்வின் தூதரே (இதுவரை) நீங்கள் தொழத தொழுகையை தொழுதீர்களே, என்று நான் வினவினேன். அதற்கு நபி(ஸல்) அவர்கள் என்னிடத்தில் பொருள் வந்து சேர்ந்தது அது நான் லுஹருக்கு பிறகு தொழும் இரு ரக்அத்துகளை தொழவிடாமல் தடுத்து விட்டது. எனவே அவ்விரு ரக்அத்துகளையும் இப்போது நான் தொழுதேன் என கூறினார்கள். அந்த ரக்அத்துகள் தவறிவிட்டால் நாங்கள் அவ்விரண்டையும் களா செய்யலாமா? என்று நான் கேட்டேன் அதற்கு வேண்டாம் என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பவர் : உம்முஸலமா(ரலி)

நூல் : அஹ்மது

நபி(ஸல்) அஸருக்கு பின் தொழுவதை தடை செய்துள்ளார் என்பதை நாம் அறியலாம்.

மகரிப்புக்கு முன் இரண்டு ரக்அத்துகள் தொழுவது நபி(ஸல்) வழியாகும்.

மக்ரிபுக்கு முன் நீங்கள் தொழுங்கள். மக்ரிபுக்கு முன் தொழுங்கள் மக்ரிபுக்கு முன் விரும்பியவர்கள் தொழுங்கள் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். மக்கள் அதை ஒரு சுன்னத்தாக கருதக்கூடாது என்பதற்காகவே இவ்வாறு குறிப்பிட்டார்கள்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் அல்முஸ்னி(ரலி)

நூல் : புகாரி

நான் உக்பா பிம் ஆமீர்(ரலி)யிடம் சென்று அபூதமீம் மக்ரிபுக்கு முன் இரண்டு ரக்அத் தொழுகிறார்களே இது உங்களுக்கு ஆச்சரியமாக இல்லையா? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் நபி(ஸல்) அவர்களின் காலத்தில் நாங்கள் இவ்வாறு செய்து வந்தோம் என்று விடையளித்தார்கள் இப்பொழுது ஏன் விட்டு விட்டீர்கள் என்று நான் கேட்க அதற்கு அவர்கள் அலுவல்களே காரணம் என்றார்கள்.

அறிவிப்பவர்: மர்ஸத்பின் அப்துல்லாஹ்

நூல்: புகாரி

இந்த இரண்டு ஹதீஸ்களை வைத்து பார்க்கும் போது நபி(ஸல்) அவர்கள் மக்ரிபுமுன் சுன்னத் தொழுவதை வலியுறுத்தி கூறவில்லை என்றாலும் விரும்பியவர்கள் தொழுமாறு கட்டளை இட்டுள்ளார்கள். ஆனால் பல பகுதிகளில் மக்ரிப்புக்கு முன்னால் சுன்னத் தொழுவதை நடைமுறை படுத்துவதில்லை.

மக்ரிபுக்குப் பின்.

அல்லாஹ்வின் தூதர் நபி(ஸல்) நீ சந்தித்தது எப்போது என்று என்னிடம் எனது தாயார் கேட்டார். இவ்வளவு நாட்களாக நபி(ஸல்)அவர்களை நான் சந்திக்கவில்லை என்று கூறினேன்.

உடனே எனது தாயார் என் மீது கோபம் கொண்டுவிட்டார்கள். அதற்கு நான் என்னை நபி(ஸல்) அவர்களிடம் செல்ல விடுங்கள். அவர்களுடன் நான் மக்ரிப் தொழுது விட்டு எனக்காகவும் உங்களுக்காகவும் அவர்களை பாவமன்னிப்பு கேட்கும் படி கோருகிறேன் என்று சொல்லிவிட்டு நபி(ஸல்) அவர்களிடம் வந்தேன். அவர்களுடன் மம்ரிப் தொழுதேன் அவர்கள் இஷா தொழும் வரையிலும் தொழுதார்கள். பிறகு திரும்பிச் சென்ற போது அவர்களை தொடர்ந்து நான் சென்றோன் என்னுடைய சப்தத்தைச் செவியுற்று "யார் ஹீதைபவர்?" என்று கேட்டார்கள். நான் ஆம் உன்னுடைய தேவை என்ன அல்லாஹ் உன்னையும், உன்னுடைய தாயையும் மன்னித்து விட்டான். இந்த இரவுக்கு முன்னால் பூமிக்கு இது வரை இறங்கிடாத ஒரு வானவர் எனக்கு சலாம் உரைத்து ஃபாத்திமா சுவன வாசிகளான பெண்களின் தலைவி எனவும் ஹஸன், உஸைன் சுவனவாசிகளின் தலைவர் எனவும் அர்ச் செய்தி சொல்வதற்காக (அல்லாஹ்வின் அனுமதி பெற்றிருக்கின்றார் என்று அல்லாஹ்வின் தூதர் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஹு தைபா(ரழி)

நூல்: திர்மிதீ

நான் நபி(ஸல்) அவர்களுடன் லுகருக்கு முன் இரண்டு ரக்அத்து களையும். லுகருக்கு பின் இரண்டு ரக்அத்துகளையும் மகரிப்புக்கு பின் இரண்டு ரக்அத்துகளையும், இஷாவுக்கு பின் இரண்டு ரக்அத்து களையும், ஜிம்ஆவுக்கு பின் இரண்டு ரக்அத்துகளையும் தொழுது இருக்கிறேன். மக்ரிப், இஷா (தெழுகையுடைய சுன்னத்) தொழுகைகளை நபி(ஸல்) அவர்கள் வீட்டில் தொழுது இருக்கிறேன்.

அறிவிப்பவர் : இப்னுஉமர்(ரலி)

நூல் : புகாரி

மேலே கூறப்பட்டுள்ள இரண்டு ஹகீஸ்களில் இருந்து நபி(ஸல்) மக்ரிபுக் பின் இரண்டு ரக்அத்துகளும், மக்ரிப் முதல் இஷாவரை தொழுதுள்ளார்கள் என்றும் விளங்கி கொள்ளலாம்

### இஷாவிற்கு முன்

இஷாவுக்கு முன் சுன்னத் உள்ளதா என்பதற்கு நேரடியாக எந்த ஆதாரத்தையும் நம்மால் காண முடியவில்லை. ஆயினும் ஒவ்வொரு தொழுகைக்கும் முன் சுன்னத் இருக்கிறது என்ற பொதுவான ஹதீஸ் உள்ளது நாம் இஷாவுக்கு முன் சுன்னத் தொழலாம்.

ஒவ்வொரு பாங்குக்கும் இகாமத்துக்கும் இடையில் ஒரு தொழுகை உண்டு. விரும்பியவர்கள் தொழலாம் என்று நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் முகப்பல்(ரலி)

நூற்கள் : புகாரி, முஸ்லிம், திர்மிதீ, நஸயீ.

### இஷாவுக்குப் பின்

இஷாவுக்குப்பின், நபி(ஸல்) மூன்று விதமாக தொழுதுள்ளார்கள்.

நான் நபி(ஸல்) அவர்களுடன் லுஹருக்கு முன் இரண்டு ரக் அத்துகள், மக்ரிபுக்கு பின் இரண்டு ரக்அத்துகள் ஜிம்மாவுக்குப் பின் இரண்டு ரக் அத்துகள் தொழுது இருக்கிறேன். மக்ரிப், இஷா

(தொழுகைகளுடைய சுன்னத்) தொழுகைகளை நபி(ஸல்) அவர்களின் வீட்டில் தொழுது இருக்கிறேன்.

அறிவிப்பவர் : இப்னுஉமர்(ரலி)

நூல் : புகாரி.

எனது சிறிய தாயாரும் நபி(ஸல்)அவர்களுடைய மனைவியுமான மைமூனா பின்த் அல் ஹாரிஸ்(ரழி) அவர்களின் வீட்டில் நபி(ஸல்) அவர்கள் தங்கியிருந்த இரவில் நானும் தங்கி இருந்தேன். நபி(ஸல்) அவர்கள்(பள்ளியில்) இஷா தொழுகை நடத்தி விட்டுப் பின்னர் தமது வீட்டிற்கு வந்து நான்கு ரக்அத்துகள் தொழுது விட்டு உறங்கினார்கள்.

அறிவிப்பவர் : இப்னுஅப்பாஸ்(ரலி)

நூல் : புகாரி

நபி(ஸல்) அவர்கள் இஷா தொழுது விட்டு என்னிடம் வந்து நான்கு அல்லது ஆறு ரக்அத்துகள் ஒரு போதும் தொழமல் இருந்ததில்லை.

அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி)

நூற்கள்: அஹ்மத், அபூதாவுத்

மேற்கண்ட ஹதீஸ்களின் அடிப்படையில் இஷாவுக்கு பின் 2,4,6 ரக்அத்துகள் தொழுவது நபிவழியாகும்.

ஜிம்ஆவின் சுன்னத்

இப்னு உமர்(ரலி) ஜிம்ஆ தொழுகையை நீட்டி தொழுவார்கள் ஜிம்ஆவிற்கு பின் இரண்டு ரக்அத்கள் தன் வீட்டில் தொழுவார்கள். அல்லாஹ்வின் தூதர் நபி(ஸல்) அவர்கள் இதை செய்தார்கள் என்றும் கூறுவார்கள்.

அறிவிப்பவர்: நாபிஃ

நூல்: அபூதாவுத்

உங்களில் ஒருவர் ஜு ம்ஆ தொழுதால் அதன் பின்பு நான்கு ரக்அத்துகள் தொழுவாராக என்று நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹு ரைரா(ரலி)

நூற்கள்: முஸ்லீம், திர்மிதீ, நஸயீ, இப்னுமாஜா, அபூதாவுத்.

மேற்கண்ட ஹதீஸ்களில் ஜிம்ஆவுக்குப் பின் அல்லாஹ் இரண்டு விதமாக கூறப்பட்டுள்ளது. எனினும் முதலாவது ஹதீஸில் நபி(ஸல்) அவர்கள் தமது வீட்டிற்கு சென்று இரண்டு ரக்அத்துகள் தொழுவார்கள் என்றும், பள்ளியில் தொழுவதால் இரண்டு ரக்அத்துகள் என்றும், பள்ளியில் தொழுதால் நான்கு ரக்அத்துகள் என்றும் கூறுவதே சரியான கருத்தாகும். இதை வலியுறுத்தும் விதமான பின்வரும் ஹதீஸ் அமைந்துள்ளது.

இப்னு உமர்(ரலி) மக்காவில் இரண்டு ரக்அத் ஜு ம்ஆ தொழுதார்கள். பின்னர் முன்னே சென்று நான்கு ரக் அத்துகள் தொழுவார்கள் பள்ளியில் தொழ மாட்டார்கள். ஏன் இவ்வாறு செய்கிறார்கள் என்று இப்னு உமர்(ரலி) கூறினார்கள்.

அறிவிப்பவர்: அதாஃ

நூல்: அபூதாவுத், நஸயீ

உங்கள் இல்லங்களில் சில தொழுகைகளை தொழுங்கள் அவற்றை அடக்கஸ்தலங்களாக ஆக்கிவிடாதீர்கள் என நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர் : இப்னு உமர்(ரலி)

நூல் : புகாரி.

## தஹிய்யத்துல் உளூ

உளூ செய்தபின் அதன் காணிக்கையாக இரண்டு ரக் அத்துகள் தொழுவது காணிக்கை என்று பெயர். இதற்கு பின் வரும் ஹதீஸ்கள் ஆதாரமாக உள்ளன.

ஒரு பஜ்ர் தொழுகையின் போது பிலால்(ரலி)யிடம், பிலாலே இஸ்லாத்தில் இனைந்த பின்னர் நீர் செய்த சிறந்த அமலப்பற்றி கூறுவராக. ஏனெனில் உமது செருப்பு ஒசையை சுவர்கத்தில் நான் கேட்டேன் என்று நபி(ஸல்) கேட்டார்கள் அதற்கு பிலால்(ரலி) இரவிலோ, பகலிலோ நான் உளூ செய்தால் அவ்வுலுவின் மூலம் நான் தொழ வேண்டும் என்று நாடியதைத் தொழமல் நான் இருப்பதில்லை. இது தான் நான் செய்த செயல்களில் சிறந்த செயல் என்று பதில் அளித்தார்கள்.

அறிவிப்பவர்: அபூஹு ரைரா(ரலி)

நூல்: புகாரி.

## தஹிய்யத்துல் மஸ்ஜித்.

ஒருவர் பள்ளிவாசலுக்குச் சென்றால் அங்கே உட்காருவதற்கு முன்னால் இரண்டு ரக்அத்கள் தொழுவது சுன்னத்தாகும். இதற்கு பள்ளியின் காணிக்கை என்று பெயர்.

மக்களுக்கு மத்தியில் அல்லாஹ்வின் தூதர் நபி(ஸல்) அவர்கள் அமர்ந்திருக்கும் போது நான் பள்ளிக்குள் நுழைந்து உட்கார்ந்து விட்டேன். அப்போது நபி(ஸல்) அவர்கள் நீ உட்காருவதற்கு முன்பாக இரண்டு ரக்அத்துகள் தொழாமல் இருக்க எது தடையாக அமைந்தது என்று கேட்டார். அதற்கு நான் அல்லாஹ்வின் தூதரே

நீங்கள் உட்கார்ந்து இருப்பதை கண்டேன். மக்களும் உட்கார்ந்து இருக்கின்றார்கள் (அதனால் நான் உட்கார்ந்து விட்டேன்) என்று பதில் சொன்னேன். உங்களில் ஒருவர் பள்ளிக்குள் நுழைந்தும் இரண்டு ரக்அத்துகள் தொழாமல் இருக்க வேண்டாம் என்று நபி(ஸல்) அவர்கள் சொன்னர்கள்.

அறிவிப்பவர்: அபூகதாதா(ரலி)

நூற்கள்: முஸ்லிம், திர்மிதீ, அபூதாவூத், நஸயீ.

## லுஹர் தொழுகை

உங்களிடல் ஒருவர் தனது எழும்பு மூட்டுகளுக்காக தர்மம் வழங்க வேண்டும் (நீங்கள் கூறுகின்ற) ஒவ்வொரு அபுஹாலைலாஹ்வும் தர்மமாகும். ஒவ்வொரு அல்ஹம்துலில்லாஹ்வும் தர்மமாகும். ஒவ்வொரு லாயிலாஹ் இல்லல்லாஹ்வும் தர்மமாகும். ஓவ்வொரு தக்பீரும் தர்மமாகும். நன்மை ஏவுவதம் தர்மமாகும். தீமையை தடுப்பதும் தர்மமாகும் முற்பகல் நேரத்தில் இரண்டு ரக்அத்துகள் தொழுவது இவை அனைத்திற்கும் போதுமானதாகும் என்று நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூதர்(ரலி)

நூல்கள்: முஸ்லீம், அபூதாவூத்.

யார் உளூச் செய்தவராக கடுமையான தொழுகைக்கு புறப்பட்டு வருகின்றரோ அவரது கூலி இஹ்ராமுடன் ஹஜ் செய்தவரின் கூலியை போன்றதாகும். யார் லுஹர் தொழுகையை தவிர வேறு

எதற்காகவும் தன்னை சிரமப்படுத்திக் கொள்ளாமல் லுஹர் தொழுகைக்கு புறப்பட்டு வருகிறாரோ அவரது கூலி உம்ரா செய்தவரின் கூலியை போன்றதாகும். இரு தொழுகைகளுக்கிடையே தீமையான காரியமும் இல்லாமல் ஒரு தொழுகைக்கு பின் இன்னொரு தொழுகையை தொழுபவரின் தொழுகையானது இல்லியீன்களில் பதிவு செய்யப்படுகிறது என்று நபி(ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.

அறிவிப்பவர் : அபூஉலாமா(ரலி)

நூல் : அபூதாவூத்.

## லுஹர் தொழுகையின் நேரம்.

அரபு மொழியில் லுஹர் (முற்பகல்) என்பது சூரியன் உதித்த முதல் உச்சியை அடையும் வரை உள்ள நேரமாகும்.

ஆதமின் மகனே நான்கு ரக்அத்துகளை பகலின் ஆரம்பத்தில் நீ தொழுவதின் மூலம் எனக்கு நீ போதுமாகிக் கொள். பகலின் கடைசியில் அந்நான்கு ரக்அத்துகளுக்காக உனக்கு நான் போதுமாகி விடுகிறேன் என்று அல்லாஹ் கூறுவதாக நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர் : உக்பாபின் ஆயிர் அல்ஜீனஹனி(ரலி)

நூல் : அஹ்மத்

நபி(ஸல்) அவர்கள் லுஹர் தொழுதாக உம்முஹானி(ரழி) யைத் தவிர வேறு எவரும் அறிவித்ததில்லை. நபி(ஸல்) அவர்கள் மக்கா வெற்றியின் போது எனது இல்லத்தில் குளித்து விட்டு எட்டு ரக்அத்துகள் தொழுதார்கள். அதை விடச் சுருக்கமாக வேறு எந்த தொழுகைகளையும் அவர்கள் தொழுது நான் பார்த்ததில்லை. ஆயினும் ருகூவையும், ஸஜ்தாவையும், முழுமையாக செய்தார்கள் என்று உம்முஹானி(ரழி) கூறினார்கள்.

அறிவிப்பவர் : இப்னு சுபி லைலா

நூல் : புகாரி

யார் பன்னிரண்டு ரக்அத்துகள் லுஹர் தொழுகின்றரோ அவருக்காக அல்லாஹ் சொர்க்கத்தில் தங்க மாளிகை கட்டுகிறான் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்.

அறிவிப்பவர்: அனஸ் பின்க் மாலிக்(ரலி)

நூற்கள் : திர்மிதீ, இப்னுமாஜா.

லுஹர் தொழுகை 4,8,12 ரக்அத்துகள் தொழலாம் என்று மேற் சொன்ன ஹதீஸ்கள் ஆதரமாக உள்ளது.

## நோன்பு.

---

நோன்பு நோற்பது முஃமீன்கள் மீது கட்டாய கடமையாகும்.

புனித ரமளான் மாதத்தில் நோன்பு நோற்பது சக்தி பெற்ற அனைத்து முஸ்லிம்கள் மீதும் கட்டாய கடமையாகும். இதைத் குர்ஆன் வசனம் உண்மைப்படுத்துகிறது. நம்பிக்கையாளர்களே நீங்கள் இறையச்சமுடையோராக ஆவதற்காக உங்களுக்கு முன் சென்றவர்கள் மீது கடமையாக்கப்பட்டது போல் உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது. (2:183)

ரமளான் மாதம் எத்தகையது என்றால் அம்மாதத்தில் மனிதர்களுக்கு வழிகாட்டக் கூடியதும் தெளிவான சான்றுகளை கொண்டதும் (நன்மை தீமைகளை) வேறுபடுத்திக் காட்டக் கூடியதும் தெளிவான சான்றுகளை கொண்டதும் (நன்மை தீமைகளை) வேறு படுத்திக்காட்டக் கூடியதுமான திருக்குர்ஆன் அருளப்பட்டது ஆகவே உங்களில் யார் அம்மாதத்தை அடைகிறாரோ அவர் அம்மாதத்தில் நோன்பு நோற்க வேண்டும். (2:185)

நபி(ஸல்) அவர்களின் சமுதாயத்திற்கு மட்டுமின்றி அவர்களுக்கும் நோன்பு கட்டாய கடமை ஆக்கப்பட்டிருந்ததை இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம்.

ரமளான் மாதத்தில் மட்டும் நோன்பு வைக்க ஏன் கட்டளை இட வேண்டும் என்று நாம் கேட்டால் மேலே கூறிய வசனத்தில் இந்த கேள்விக்கு இறைவன் பதில் கூறுகிறான்.

## நோன்பின் நோக்கம்.

எதற்காக நோன்பு நோற்க வேண்டும்? இக்கேள்விக்கு பல விதமாக பதில்கள் கூறுகின்றனர்.

பசியின் கொடுமையை பணம் படைத்தவர்கள் உணரவேண்டும் என்பதற்காதான் அல்லாஹ் நோன்பை கடமை ஆக்கினான் என்று கூறுவர் சிலர்.

பசியை உணருவது தான் காரணம் என்று அல்லாஹ்வும் அவன் தூதரும் கூறவில்லை. இது இவர்களின் கற்பனை தான்.

உடல் ஆரோக்கியம் பேணப்படும் என்பது தான் நோன்பின் நோக்கம் என்று கூறுவர் வேறு சிலர்.

நோன்பு நோற்பதால் உடல் ஆரோக்கியம் பேணப்படும் என்று அல்லாஹ்வும், அவன் தூதரும் கூற வில்லை. உடல் ஆரோக்கியம் நோன்பு வைப்பதால் ஏற்படும் என்றால் நோயாளிகள் வேறு நாட்களில் நோற்றுக் கொள்ளுங்கள் என்று இறைவன் கூறுவான.

நோன்பு கடமையாக்கப் பட்டதற்குரிய காரணத்தை அல்லாஹ் வசனத்தில் “நீங்கள் இறை அச்சமுடையோராக ஆவதற்காக“ என்று இறைவன் குறிப்பிடுகிறான். நோன்பு நோற்பதால் இறையச்சம் ஏற்படும். ஏற்படவேண்டும் என்பது தான் அல்லாஹ் கூறுகின்ற காரணம்.

ரமலான் மாதத்தில் நமக்கு சொந்தமான உணவையேயாகும் இல்லாமல் தனியாக இருக்கும் போது நாம் உண்ண மாட்டோம். ஏனெனில் யாரும் பார்க்க வில்லை என்றாலும் இறைவன் பார்க்கிறான் என்று சாப்பிடமாட்டோம். ரமளான் மாதத்தில் மட்டும் அல்ல எல்லா நாட்களிலும் எல்லா மாதங்களிலும் அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற இறையச்சம் நம் அனைவருக்கும் வரவேண்டும். ரமளான் மாதத்தில் பகலில் அல்லாஹ் நம் உணவை ஹராமாக்கி இருக்கிறான் என்று நாம் சாப்பிட்டால் இருக்கும் போது எல்லா நாட்களிலும் பிறர் பொருளை அபகரிப்பது, திருடுவது எல்லாம் அல்லாஹ் நமக்கு ஹராமாக்கி இருக்கிறானே. இதை நாம் செய்யலாம என்று இறையச்சத்துடன் நாம் வாழ வேண்டும். இந்த ஆன்மீக பயிற்சி தான் நோன்பு கடமையாக்கப்பட்டதற்கு ஒரே காரணம். இதை நபி(ஸல்) அவர்களும் விளக்கியள்ளார். யார் பொய்யான பேச்சுகளையும், பொய்யான நடவடிக்கைகளையும் விடவில்லையோ, அவர் பசித்திருப்பதோ, தாம்த்து இருப்பதோ, அல்லாஹ்வுக்கு தேவையில்லை என்று நபி(ஸல்) கூறினார்கள்.

அறிப்பவர் : அபூஹு ரைரா(ரலி)

நூற்கள் : புகாரி, அஹ்மத், திர்மிதீ, அபூதாவூத், இப்னுமாஜா.

நாம் நோன்பு நோற்றிருக்கும் நிலையில் நம்மிடம் யாராவது வீண்வம்புக்கு வந்தால் கூட சரிக்கு சரியாக அவர்களுடன் வம்புக்கு போகக் கூடாது எனவும் நபி(ஸல்) அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

உங்களில் ஒருவர் நோன்பு நோற்றிருக்கும் போது யாரேனும் முட்டாள் தனமாக நடந்து கொண்டால் நான் நோன்பாளி என்று கூறிவிடுங்கள் என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி)

நூற்கள் : புகாரி, திர்மிதீ.

நோன்பின் மூலம் இவ்வுலகில் பயிற்சி எடுக்கிறோம். இதனால் அல்லாஹ்விடம் நமக்கு என்ன கிடைக்கும்.

வேறு எந்த நல்லறத்துக்கும் கிடைக்காத மகத்தான பரிசுகள் இறைவனிடமிருந்து கிடைக்கும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். ஒவ்வொரு நன்மையான காரியத்திற்கும் பத்து முதல் எழுநூறு மடங்குவரை பரிசு வழங்கப்படுகிறது. ஆனால் நோன்பு எனக்கே உரியது எனவே அதற்கு நானே பரிசளிப்பேன் என்று அல்லாஹ் கூறுவதாக நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி)

நூல் : புகாரி

மற்ற எந்த வணக்கத்தை விட நோன்பு அம்தமான பரிசுகளை பெற்றுதரும் கேடயமாகும் நோன்பு நரகத்திலிருந்து காக்கும் கேடயமாகும் நோன்பாளியின் வாய் நாற்றம் அல்லாஹ்விடம் கஸ்தூரியை விடச்சிறந்ததாகும் என நபி(ஸல்) கூறியுள்ளார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி)

நூல் : புகாரி

### நோன்பிலிருந்து விலக்கப்பட்டவர்:

தள்ளாத வயதினர்.

நோயாளிகள்.

நோயில் இரண்டு வகையுண்டு நோய் சிறிது நாட்களில் தீர்ந்து விடும். இப்படிப்பட்டவர் நோய் குணம் அடைந்ததும் நோன்பு (விடுபட்ட) வைக்க வேண்டும், தீராத நோய் உடையவர்கள் திரும்ப வைக்க வேண்டியதில்லை.

உங்களில் யாரேனும் பயணத்திலோ நோயாளிகளாகவோ இருந்தால் வேறு நாட்களில் அதை நோற்கட்டும். (2:184)

பயணிகள்:

நான் பயணத்தில் நோன்பு நோற்கலாமா? என்று நபி(ஸல்) அவர்களிடம் ஹம்ஸ பின் அம்ர் (ரலி) கேட்டார். அதற்கு நபி(ஸல்) அவர்கள் நீ விரும்பினால் நோன்பு நோற்று கொள் விரும்பினால் விட்டு விடு என விடையளித்தார்கள்.

அறிவிப்பவர் : ஆயிஷா (ரலி)

நூல் : புகாரி

மாதவிடாய் ஏற்பட்ட பெண்கள்

மாதவிடாய் காலத்தில் பெண்கள் நோன்பை விட்டு விட சலுகை பெற்றுள்ளனர். சலுகை மட்டுமின்றி மாதவிடாய் நேரத்தில் நோன்பை கண்டிப்பாக விட்டுவிட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

மாதவிடாய் நாட்களில் விடும் நோன்பை வேறு நாட்களில் வைக்க வேண்டும்.

நாங்கள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுடன் இருந்த காலத்தில் மாதவிடாய் ஏற்பட்டு தூய்மை அடைவோம். அப்போது விடுபட்ட நோன்பை களாச் செய்யுமாறு நபி(ஸல்) கட்டளை இட்டார்கள். ஆனால் விடுபட்ட தொழுகையை களா செய்யுமாறு கட்டளை இடமாட்டார்கள்.

அறிவிப்பவர் : ஆயிஷா(ரலி)

நூற்கள் : புகாரி,முஸ்லிம், இப்னுமாஜா, அபூதாவூத், திர்மிதீ

சில பெண்களுக்கு ஓரிரு நாட்களி லேயே மாதவிடாய் நின்று விடும். இவர்கள் நின்றவுடன் நோன்பு நோற்க வேண்டும். இன்னும் ஒரு வாரம் ஆகவில்லையே என்று நினைக்க கூடாது. அது போல் சில பெண்களுக்கு பதினைந்து நாட்கள் கூட மாதவிடாய் நீடிக்கலாம். அவர்கள் அந்த பதினைந்து நாட்களும் நோன்பை விட வேண்டும் என அறியாமையில் உள்ளனர். மேலும் இன்னொரு அறியாமையும் பெண்களிடையே உள்ளன. புனித மிக்க ரமளான் மாதத்தில் நோன்பை விட கூடிய நிலைமை ஏற்படுகிறது என்று எண்ணி மாதவிடாய் தள்ளி போடும் மாத்திரைகள் உட்கொள்கின்றன. ஹஜ்ஜின் போதும் இது போல் நடந்து கொள்கின்றனர். அல்லாஹ் பெண்களுக்கு இயற்கையாகவே வழங்கிய தன்மையை மாற்றுவது அல்லாஹ்வின் திருப்தியை பெற்று தராது என்பதை இவர்கள் உணர வேண்டும். மாதவிடாய் என்பது அல்லாஹ் செய்த ஏற்படாகும். ரகிலானின் சில நாட்கள் தவறவிட்டால் பெண்களுக்கு நன்மை எங்கே குறைந்து விடுமோ என்று நினைத்து மாத்திரைகளை சாப்பிடுகிறார்கள். இது தவறாகும். விடுபட்ட நோன்பை வேறுநாட்களில் களாச் செய்யும்போது புனித ரமளானில் நோன்பு நோற்ற அதே நன்மையே கிடைக்கும்.

அல்லாஹ் எந்த மனிதருக்கும் சிறிதளவும் அநீதி இழைக்கமாட்டான்.

குர்ஆன் (10:44,4:40,18:49,9:70,30:9)

கர்ப்பினிகளுக்கும் பாலூட்டும் அன்னையருக்கும் சலுகை உண்டு. இப்பெண்கள் தற்காலிகமாக நோன்பை விட்டுவிட்டு பின்பு நோற்றுக் கொள்ளலாம்.

கர்ப்பினிகளுக்கும் பாலூட்டும் அன்னையருக்கும் நோன்பிலிருந்து நபி(ஸல்) அவர்கள் சலுகை அளித்துள்ளார்கள்.

அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் (ரலி)

நூற்கள் : திர்மிதீ, அபூதாவூத், நஸயீ, அஹ்மத், இப்னுமாஜா

ரமளான் மாதத்தில் விடுபட்ட நோன்பை நோற்க எந்த கால கெடும் வைக்கவில்லை. வேறு நாட்களில் நோற்று விடவேண்டும் என்று மட்டும் குர்ஆன் கூறுகிறது.

ரமளான் மாதத்தின் சில நோன்புகள் தவறிவிடும் அதை ஷஃபான் மாதத்தில் தான் என்னால் களாச் செய்ய முடியும். நபி(ஸல்) அவர்களுக்கு நான் செய்ய வேண்டிய கடமைகளே இதற்கு காரணம் என்று அன்னை ஆயிஷா(ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

நூற்கள் : புகாரி, முஸ்லீம், அபூதாவூத், திர்மிதீ, இப்னுமாஜா.

### நோன்பை முறிக்கும் செயல்கள்

சுபுஹ் முதல் மஃரிப் வரை உண்ணாமல் இருப்பது, பருகாமல் இருப்பது இல்லறத்தில் ஈடுபடாமல் இருப்பது இம்மூன்றையும் தவிர வேறு எதையும் செய்யக் கூடாது என்று தடை இல்லை.

இவை தவிர நோன்பாளிகள் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள் உள்ளன. அவற்றையும் கடைபிடிக்க வேண்டும்.

பொய்யான பேச்சையும், பொய்யான (தீய) நடவடிக்கையும் யார் கைவிடவில்லையோ அவர் பசித்திருப்பதும் தாகமாக இருப்பதும் அல்லாஹ்வுக்குத் தேவையில்லாத ஒன்று என்று நபி(ஸல்) கூறியுள்ளார்கள்.

அறிவிப்பவர்: அபூஹு ரைரா (ரலி)

நூல்: புகாரி

நோன்பை முறிக்கும் செயலை மறதியாக செய்தால் மறதியாக சாப்பிட்டால், அல்லது குழித்து விட்டால் எப்போது நினைவு வருகிறதோ, உடனே அதை நிறுத்திக் கொண்டு விட்டால் அவரது நோன்புக்கு எள்ளவும் குறைவு ஏற்படாது நோன்பாளியாகவே அவர் தனது நிலையை தொடரலாம்.

ஒருவர் நோன்பு நோற்றிருக்கும் போது மறதியாக சாப்பிட்டாலோ, பருகினாலோ அவர் தனது நோன்பை முழுமையாக்கட்டும், ஏனெனில் அவருக்கு அல்லாஹ்வே உண்ணவும், பருகவும், அளித்துள்ளான் என்று நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஆயிஷா (ரலி)

நூற்கள் : புகாரி, முஸ்லிம், அஹ்மத்,அபூதாவூத், திர்மிதீ, நஸயீ, இப்னுமாஜா.

குளிப்பு கடமையான நிலையில் நோன்பு நோற்கலாம்.

இல்லறத்தில் ஈடுபட்டு குளிப்பு நிலையில் ஸஹர் செய்வதற்காக எழக் கூடியவர்கள் குளித்து விட்டுதான் ஸகர் செய்ய வேண்டுமா. குளிப்பதற்கு முன் நாம் உணவு உண்டால் நம் வயிற்றில் போகும் உணவு முழுவதும் புழுவாகும் என்று மூட பழக்கம் நம்மிடையே உள்ளது. நபி(ஸல்) காட்டிய முறை என்ன என்பதை நாம் ஆதரபூர்வமான ஹதீஸ்லிருந்து நாம் பார்ப்போம்.

ரம்லான் மாதத்தில் நபி(ஸல்) அவர்கள் குளிப்பு கடமையானவர்களாக சுப்ஹு நேரத்தை அடைந்தார்கள். (அந்த நிலையில்) நோன்பு நோற்பார்கள்.

அறிவிப்பவர் : ஆயிஷா (ரலி), உம்முஸலமா (ரலி)

நூற்கள் : புகாரி, முஸ்லிம், அஹ்மத்

தொழுகை நிறைவேற்ற தான் குளிப்பு கடமை நோன்பு நோற்பதற்கு குளிக்க வேண்டியது இல்லை, குளிப்பு கடமையான நிலையில் நோன்பு நோற்றுவிட்டு சுப்ஹு தொழுகைக்கு குளிக்கலாம்.

### கடமை அல்லாத நோன்புகள்:

புனித ரம்ளான் மாதத்திடல் நோற்பது கட்டாயக் கடமையாகும். வேறு பல நோன்புகள் கட்டாயமாக்கப்படாவிட்டாலும் நபி(ஸல்) அவர்களால் ஆர்வமுட்டப் பட்டன. அவற்றையும் கடைபிடித்து நன்மைகளை அல்லாஹ்விடம் பெற வேண்டும்.

### ஆஷீரா நோன்பு

முஹர்ரம் மாதம் பத்தாம் நாள் நோற்கப்படும் நோன்பு ஆஷீரா நோன்பு.

ரமளான் நோன்பு கடமையாக்கப்படுவதற்கு முன் இந்த நோன்பு கட்டாயக்கடமையாக இருந்தது. இந்த நோன்பு கடமையாக்கப்பட்டு இருந்தது. ரம்ஸான் நோன்பு கடமையாக்கப்பட்ட பின் விரும்பியவர் நோற்கலாம் என்ற நிலைக்கு வந்தது.

அறிவிப்பவர் : ஆயிஷா (ரலி)

நூற்கள் : புகாரி, முஸ்லிம்

கட்டாய கடமையாக இல்லாவிட்டாலும் நபி(ஸல்) அவர்கள் இந்த நோன்பு நோற்க்குமாறு ஆர்வமூட்டினார்கள்.

நபி(ஸல்) அவர்கள் ஆஷூ ரா நாளில் நோன்பு நோற்று மற்றவர்களுக்கும் கட்டளையிட்டார்கள். அப்பொழுது நபி தோழர்கள் அல்லாஹ்வின் தூதரே இந்த நாளை யூதர்களும் கிறித்தவர்களும் மகத்துவப்படுத்துகின்றனரே? என்று கேட்டனர். அதற்கு நபி(ஸல்) அவர்கள் அடுத்த வருடம் அல்லாஹ் நாடினால் ஒன்பதாம் நாளும் நோன்பு நோற்பேன் எனக் கூறினார்கள். ஆனால் அடுத்த வருடம் வருவதற்குள் மரணித்து விட்டார்கள்.

அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி)

நூற்கள் : முஸ்லிம், அபூதாவூத்

எனவே நபி(ஸல்) அவர்கள் ஆசைப்பட்டவாறு 9,10 இரண்டு நாள் நோன்பு நோற்க வேண்டும்.

### ஆறு நோன்புகள்:

ரமளான் மாதத்தின் அடுத்த மாதமான ஷவ்வால் மாதத்தில் ஆறு நோன்புகள் நோற்பதற்கு நபி(ஸல்) அவர்கள் ஆர்வ மூட்டினார்கள்.

யார் ரமளான் மாதம் நோன்பு நோற்று அதைத் தொடர்ந்து ஷவ்வால் மாதம் ஆறு நாட்கள் நோன்பு நோற்கிறாரோ அவர் காலமெல்லாம் நோன்பு நோற்றவறாவார் என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அறிவிப்பவர் : அபூ அய்யூப் (ரழி)

நூற்கள்: முஸ்லிம், அபூதாவூத், திர்மிதீ

### அர.ஃபா நாள் நோன்பு:

துல்ஹஜ் மாதம் பிறை ஒன்பது அன்று ஹாஜிகள் அரபா பெருவெளியில் தங்குவார்கள். அதனால் அந்த நாளுக்கு அரபா நாள் என்று குறிப்பிடுவர். அரபா நாளில் ஹாஜிகள் நோன்பு நோற்க தடை உள்ளது. ஆனால் ஹாஜிகள் அல்லாதவர்கள் அரபா நாளில் நோன்பு நோற்க நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹு ரைரா (ரலி)

நூற்கள் : அஹ்மத், இப்னுமாஜா.

அரபாவில் தங்கியிருப்போர் அரபா நாளில் நோன்பு நோற்பதை நபி(ஸல்) அவர்கள் தடை செய்தார்கள்.

அறிவிப்பவர் : அபூஹு ரைரா (ரலி)

நூற்கள் : அஹ்மத்,இப்னுமாஜா.

### வியாழன் மற்றும் திங்கள் தோறும் நோன்பு நோற்பது.

நபி(ஸல்) அவர்கள் திங்கள், வியாழன் ஆகிய நாட்களை தேர்தெடுத்து நோன்பு நோற்று வந்தார்கள்.

அறிவிப்பவர் : ஆயிஷா (ரலி)

நூற்கள் : அஹ்மத், திர்மிதீ, நஸயீ, இப்னுமாஜா.

ஒவ்வொரு வியாழன் மற்றும் திங்கள் ம்ழமைகளில் அமல்கள் (இறைவனிடம்) சமர்பிக்கப் படுகின்றன. எனவே நான் நோன்பு நோற்றுள்ள நிலையில் எனது அமல்களை சமர்பிக்கப்படுவதை நான் விரும்புகிறேன் என்று நபி(ஸல்) கூறியுள்ளார்கள்.

அறிவிப்பவர் : அபூஹு ரைரா (ரழி)

நூற்கள் : அஹ்மத், திர்மிதீ, இப்னுமாஜா

## மாதம் மூன்று நோன்பு நோன்புகள்:

வாரம் இரண்டு நாள் நோன்பு நோற்க முடியாதவர்கள் மாதம் மூன்று நோன்புகள் நோற்கலாம். இதை நபி(ஸல்) கூறியுள்ளார்.

மாதம் தோறும் மூன்று நாட்கள் நோன்பு நோற்பதும் ரமளான் மாதத்தில் நோன்பு நோற்பதும் காலமெல்லாம் நோன்பு நோற்றதாக அமையும் என நபி(ஸல்) அவர்கள் கூறுயுள்ளார்.

அறிவிப்பவர்: அபூகதாதா (ரலி)

நூற்கள் : முஸ்லிம், அஹ்மத், அபூதாவூத்.

மாதம் மூன்று நோன்பு நோற்பதென்றால் 13,14,15 ஆகிய நாட்களில் நோற்பீராக எனவும் நபி(ஸல்) கூறியுள்ளார்கள்.

அறிவிப்பவர் : அபூதர் (ரலி)

நூற்கள் : அஹ்மத், நஸயீ, திர்மிதீ.

மாதம் தோறும் மூன்று நாட்கள் நோன்பு நோற்றால் வருடம் முழுவதும் நோன்பு நோற்றதுக்கு நன்மை கிடைக்கும் என்று நபி(ஸல்) கூறியுள்ளதால் 13,14,15 ஆகிய நாட்களை தேர்வு செய்து நோன்பு நோற்பது சிறப்பானது.

## வெள்ளிகிழமை நோன்பு நோற்கலாகாது.

வெள்ளி கிழமை நாட்களில் மிகச் சிறந்தது என்றாலும் அன்றைய தினம் நோன்பு நோற்பது கூடாது.

வெள்ளிகிழமை நோன்பு நோற்க நபி(ஸல்) அவர்கள் தடைவிதித்தார்களா? என்று ஜாபர் (ரழி) அவர்களிடம் கேட்டேன் . அதற்கவர்கள் ஆம் என்றார்கள்.

அறிவிப்பவர் : முஹம்மத் பின் அப்பாத் (ரழி)

நூற்கள் : புகாரி, முஸ்லிம், அஹ்மத்.

வெள்ளிகிழமைக்கு முன்பு ஓரு நாள் அல்லது இதை அடுத்து ஒரு நாள் சேர்த்தே தவிர வெள்ளிக்கிழமை நோன்பு நோற்கலாகாது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹு ரைரா (ரலி)

நூற்கள்: திர்மிதீ, இப்னு மாஜா.

வெள்ளிகிழமை நான் நோன்பு நோற்றிருந்த போது நபி(ஸல்) அவர்கள் என்னிடம் வந்தார்கள் நேற்று நோன்பு நோற்றாயா? என்று கேட்டார்கள். நான் இல்லை என்றேன். நாளை நோன்பு நோற்கும் என்னம் உள்ளதா? என்று கேட்டார்கள் இல்லை என்றேன். அப்படியானல் நோன்பை விட்டு விடு என்று நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஜு வைரியா (ரலி).

நூல் : புகாரி

## ரமளான் இரவு வணக்கங்கள்.

புனித ரமளானில் நின்று வணங்குவதை நபி(ஸல்) அவர்கள் ஆர்வ மூட்டியுள்ளார்கள். இதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. ஆயினும் ரமளானில் தொழுவதற்கு என்று நபி(ஸல்) அவர்கள் பிரத்தியோகமாக எந்த வணக்கத்தையும் செய்யவில்லை.

ரமளானில் நபி(ஸல்) அவர்களின் இரவு தொழுகை எவ்வாறு இருந்தது என்று அபூஸலாமா அவர்கள் அன்னை ஆயிஷா(ரலி) அவர்களிடம் கேட்ட போது ரமளானில் ரமளான் அல்லாத மாதத்திலும், நபி(ஸல்) அவர்கள் பதினொரு ரக்அத்துகளுக்கு மேல் தொழுதது இல்லை என்று கூறினார்கள்.

நூற்கள்:புகாரி, முஸ்லிம், திர்மிதீ.

## ஹஜ்

இஸ்லாத்தில் முக்கிய கடமைகளில் ஹஜ்சும் ஒன்று. ஆனால் இன்று நம்மக்களிடையே ஹஜ்ஜை புனிதமாக கருதாமல் அதை சுற்றுலா மாதிரி கருதுகிறார்கள். இன்னும் ஹஜ்ஜை நிறை வேற்றுவது பெரும் செல்வந்தர்களுக்கு மட்டும் என்று நினைக்கிறார்கள். இன்று நம் பெண்கள் திருமண விழாக்களுக்கு பல லட்ச ரூபாய்கள் செலவு செய்வார்கள். வளைகாப்பு, சீர், கத்னா என்று மார்கம் காட்டிதராத செயல்களுக்கு பல லட்சம் செலவு செய்யும் பெண்கள் கடமையான ஹஜ்ஜை நிறை வேற்ற முன்வராமல் இருக்கின்றனர். முக்கிய கடமைகளில் ஒன்று என்று கூறினால் அதற்கு வசதிகள் உடையவர்கள் தான் செல்ல வேண்டும் என்று கூறிகிறார்கள்

இவர்கள் வசதி என்பதை எல்லா ஆடம்பர செலவுகளை எல்லாம் செய்து விட்டு தான் வாழ வசதியான கார் பங்களா என்று வாழ்ந்தாள் வசதி என்று நாம் நினைத்து கொண்டு இருக்கிறோம். நாம் அன்றாட 100, 200, அனாவிஷயமாக செலவு செய்கிறோம். அதை சேமித்து வைத்தாலே நாம் ஹஜ்ஜை நிறை வேற்றி விடலாம். ஹஜ் செய்வதால் எவ்வளவு நன்மைகள் என்பதை குர்ஆனும் ஹதீஸு ம் என்ன கூறுகின்றது என்பதை பார்ப்போம்.

அல்லாஹ்வின் தூதர் அவர்களே பெண்கள் மீது ஜிகாத் உண்டா? என்று நான் கேட்டதற்கு ஆம் பெண்கள் மீது ஜிகாத் உண்டு போர் இல்லை. அது ஹஜ் மற்றும் உம்ரவாகும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரழி) அறிவிக்கிறார்.

நூற்கள் : அஹ்மத்,இப்னு மாஜா.

அல்லாஹ்வுக்காக அவ்வீட்டை ஹஜ் செய்வது மனிதர்கள் மீது அதனளவில் செல்ல சக்தி பெற்றவர்கள் மீது கடமையாக உள்ளது. யார் இதனை நிராகரிக்கிறாரோ நிச்சயமாக அல்லாஹ் அகிலத்தாரை விட்டு தேவையற்றவனாக உள்ளான். (3:97)

ஆகவே பெண்கள் அவர்கள் தங்கள் வாழ்நாளில் ஒரு முறையேனும் ஹஜ் செல்லாத கடமையாக உள்ளது பெண்கள் ஹஜ் விஷயத்தில் மிகவும் பின் தங்கியள்ளார்கள்.

மகளாக இஸ்லாத்தில் ஆண்களும், பெண்களும் சமம் இருவரும் சமஅந்தஸ்து உடையவர்கள்தான். நான் உயர்ந்தவன் நீ தாழ்ந்தவன் என்ற பாகுபாடு இல்லை.

பெண்கள் தன் தாய்க்கு சிறந்த மகளாக இருந்து பணிவிடைகள் செய்ய வேண்டும். பெற்றோர் நலம் பேண வேண்டுமென்று நாம் மனிதனுக்கு அறிவுறுத்தி உள்ளோம். நாம் மனிதனுக்கு அறிவுறுத்தி உள்ளோம். அவனை தாய் அவனை நலிவுக்கு மேல் நலிவை ஏற்று அவனை சுமந்துள்ளாள். (31:14)

### நாம் உபகாரம் செய்வதில் முண்னுரிமை பெற்றோர்களுக்கே.

(நபியே யாருக்கு) செலவு செய்வது என்பது பற்றி உம்மிடம் கேட்கின்றனர். நல்லதை செலவு செய்யுங்கள் (அதனை) பெற்றோருக்கும் நெருங்கிய உறவினருக்கும், அநாதைகளுக்கும் ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும் செலவழியுங்கள் என்று கூறுவீராக (2:215)

இன்னும் நாம் நட்புறவு வைத்துக்கொள்ள அதிகம் தகுதியுடையவள் தாய் என்று கூறியுள்ளார்கள்.

நட்புறவு வைத்துக் கொள்ள அதிக தகுதியுடையவர் யார் என நபி(ஸல்) அவர்களிடம் கேட்டார். உன் தாய் என்று கூறினார்கள். பின்பு யார் என்று கேட்டார்கள் உன் தாய் என்று கூறினார்கள். பின்பு யார் என்று கேட்டார்கள் உன் தாய் என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரழி)

நூற்கள்: புகாரி, முஸ்லிம்.

அவனை தவிர வேறொன்றையும் நீங்கள் வணங்கக் கூடாது எனவும் பெற்றோருக்கு நன்மை செய்யும் படியும் உமதிறைவன் தீர்ப்பு செய்து விட்டான். (17:23)

அல்லாஹ்வையே வணங்குகள் அவனுக்கு யாதொன்றையும் இணை வைக்காதீர்கள் பெற்றோரிடம் நல்ல விதமாக நடந்து கொள்ளுங்கள். (4:36)

அல்லாஹ்விக்கு மிக விருப்பமான வணக்கம் அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான காரியம் எது என்று நபி(ஸல்) அவர்களிடம் கேட்டேன். தொழுகையை அதற்குரிய நேரத்தில் தொழவது என்றார்கள். பின்பு எது? என்று கேட்டேன் பெற்றோரிடம் நல்ல முறையில் நடந்து கொள்வது என்றார்கள். பின்பு எது என்று கேட்டேன் இறைவழியில் போர்புரிவது என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : இப்னு மாஜா

நூற்கள் : புகாரி,முஸ்லிம்

### பெற்றேரை நோவினை செய்தால்.

உங்களுக்கு பாவங்களில் மிகப்பெரும் பாவத்தை அறிவித்து தரட்டுமா? என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். ஆம் என தோழர்கள் கூறினார்கள்.

அல்லாஹ்வுக்கு இனை வைப்பதும் பெற்றேருக்கு நோவினை தருவதும் என நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபீபக்ரா(ரலி)

நூல் : புகாரி

நாசமாகிவிட்டான், நாசமாகிவிட்டான், நாசமாகிவிட்டான் என்று நபி(ஸல்) அவர்கள் கூறிய போது அல்லாஹ்வின் தூதரே அவன் யார்? என கேட்கப்பட்டது.

எவன் வயது முதிர்ந்த தனது பெற்றோர்களில் ஒருவரையோ அல்லது இருவரையோ பெற்றுக்கொண்டு(அவர்களிடம் நல்ல முறையில் நடந்து) அவர்கள் இருவரினால் சுவனம் செல்லாதவன் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்

அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி)

நூற்கள் : முஸ்லிம், அஹ்மத்.

அல்லாஹ் தன் திரு மறையில் கூறுகிறான். பெற்றோரில் ஒருவரோ (அல்லது) இருவருமோ வயதானவர்களாக உம்மிடம் இருந்தால் அவர்களை சீ என்றும் கூறாதீர். மேலும் அவர்களை கடிந்து பேசாதீர். அவர்களிடம் கன்னியமாக பேசுவீராக. மேலும் கருணையுடனும், பணிவுடனும் அவர்களிடம் நடந்து கொள்வீராக. (17:23)

### தாயின் காலடியில் சொர்க்கம்

அல்லாஹ்வின் தூதரே நான் போரில் கலந்து கொள்ள விரும்புகிறேன். உங்களிடம் ஆலோசனை கேட்க வந்துள்ளேன் என்று ஒருவர் நபி(ஸல்) அவர்களிடம் கேட்பார் உமக்கு தாய் இருக்கிறாரா? என நபி(ஸல்) கேட்டார்கள் ஆம் என அவர் கூறினார் அப்படியானால் அவருக்கு நீர் உதவி செய்வதை அவசியமாக்கி கொள்வாயாக. ஏனெனில் அவளின் காலடியில் சுவனம் உள்ளது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : மு ஆவியா பின் ஜாஹிமா

நூற்கள் : இப்னு மாஜா, நஸயீ.

### பெற்றோரின் மம்ழ்ச்சியில் அல்லாஹ்வின் மகிழ்ச்சி

இறைவனின் பொருத்தம் தந்தையின் திருப்தியிலும் இறைவனின் கோபம் தந்தையின் கோபத்திலும் இருக்கிறது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் அம்ரு (ரலி)

நூல் : திர்மிதீ.

### தமது பெற்றோரை சபித்தவன் அல்லாஹ் சபிக்கிறான் என நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர் : அலி (ரலி)

நூற்கள் : முஸ்லிம், நஸயீ, அஹ்மத்.

பாவங்களில் மிகப்பெரிய பாவம் தம் பெற்றேரை ஏசுவது தான் என நபி(ஸல்) அவர்கள் கூறிய போது அல்லாஹ்வின் தூதரே, எவனாவது தன் பெற்றோரை? ஏசுவானா? என்று தோழர்கள் கேட்டார்கள். ஓருவன் இன்னெருவனின் தந்தையை ஏசுவான் என நபி(ஸல்) அவர்கள் விளக்கம் அளித்தார்கள்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் (ரலி)

நூற்கள் : முஸ்லிம்,புகாரி.

பெற்றோர்களுக்கு துவா செய்ய வேண்டும் என் இறைவனே, சிறுவயதில் என்னை இவர்கள் கருனையுடனும், பாசத்துடனும் வளர்த்தமா போல் நீ அவர்களுக்கு கருணை புரிவாயாக என்று பிராத்திப்பீராக. (17:24)

மனிதன் இறந்து விட்டால் மூன்றை தவிர அனைத்து தொடர்புகளிலும் நின்று விடும்.

1. நிறைந்த தர்மம்.

2. உபயோகமான கல்வி.

3. அவனுக்காக பிராத்திக்கும் நல்ல மகன் இவற்றில் மட்டுமே ஒருவர் இறந்த பின்னும் ஒருவன் பயன் பெற முடியும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹு ரைரா(ரலி)

நூற்கள் : முஸ்லிம்,நஸயீ, அஹ்மத், புகாரி.

## மனைவியின் கடமைகள்:

---

ஒரு பெண் ஒருவனுக்கு திருமணம் செய்து கொடுத்தவுடன் அவள் மனைவி என்ற தகுதியை அடைகிறாள் இந்த மனைவி தன் கணவனுக்கு கட்டுப்பட்டு நல்ல நிலைமையில் வாழ இஸ்லாம் கூறுகிறது இன்று மேலை நாடுகளில் நினைத்த நேரம் ஒருவனை திருமணம் செய்யலாம். சில நாட்களோ, சில ஆண்டுகளோ வாழலாம், விருப்பம் இல்லை என்றால் பிரிந்து விடலாம். அவள் வேறொருவருடனும் அவன் வேறொருவளுடனும் இல்லறத்தில் ஈடுபடலாம் என்று முன்னேறி இருக்கிறார்கள். ஆனால் கீழை நாடுகளிலோ கல்லானலும் கணவன், புல் ஆனாலும் புருஷன் திருமணம் என்பது சொர்க்கத்தில் நிச்சயம் செய்யப்படுகிறது என்று கூறுகிறார்கள்.

ஆனால் இஸ்லாமிய மார்க்கமோ நடுநிலையில் கூறுகிறது மனைவி கணவனுடன் எப்படி வாழ வேண்டும் எப்படி வாழ்ந்தால் சுவனம் கிடைக்கும் என்றெல்லாம் இஸ்லாம் நமக்கு போதிக்கிறது. அது என்னென்ன என்பதை அறிந்து நாமும் செயல் படுவோமாக.

தன் மீது விருப்பம் கொண்டு, உறவு கொள்ள கணவன் அழைக்கும் போது மறுத்து விடக்கூடாது, மீறி மறுத்து விட்டால் இறைவனின் கடும் கோபத்தை பெற்றுதரும்.

கணவன் தன் மனைவியை தேவைக்காக அழைக்கும் பொழுது அவள் அடுப்படியில் இருந்தாலும் அவனிடம் செல்ல வேண்டும் என்று நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர் : தல்க் இப்னு அலி(ரலி)

நூல் : திர்மிதீ.

தன் கணவனின் படுக்கையைப் புறக்கணித்தவளாக ஒரு பெண் இரவை கழித்தால் அவளை மலக்குகள் விடியும் வரையில் சபிக்கின்றனர் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹு ரைரா(ரலி)

நூற்கள் : முஸ்லிம், நஸயீ, அஹ்மத்,புகாரி,தாரமி, பைஹகீ.

உடலுறவை புறக்கணிக்கக் கூடாது மட்டுமின்றி நபிலான நோன்பை கணவனின் அனுமதியின்றி வைக்க கூடாது என்றும் கூறுகிறது.

தன் கணவன் ஊரிலிருக்கும் போது அவன் அனுமதியின்றி (நபிலான) நோன்பை நோற்க ஒரு பெண்ணுக்கு அனுமதி இல்லை என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹு ரைரா(ரலி)

நுல்கள் : புகாரி, திர்மிதீ.

இன்று பெண்கள் நிறைய பேர் தாம்பத்திய உறவை பற்றி வெளியில் பேசுகிறார்கள் தன் தோழிகளிடம் அண்டை வீட்டாரிடம் பேசுகிறார்கள். இதை பற்றி வெளியில் பேசுவது எவ்வளவு மோசமானது என்பதை கீழ்வரும் ஹதீஸில் பார்க்கலாம்.

ஒருவன் தன் மனைவியிடம் உடலுறவுக்காக வந்து, அவளும் அவனிடம் வந்து, பிறகு அவளை பற்றிய ரகசியங்களை பிறரிடம் கூறுபவன் தான் மறுமையில் அல்லாஹ்விடம் அந்தஸ்தால் மிகவும் கெட்டவன் என்று நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஸயீத்(ரழி) நூல் : முஸ்லிம்

இன்னும் பெண்கள் தங்கள் வீடுகளில் கணவனுக்கு பிடிக்காதவர்கள் வீட்டினுள் அனுமதிக்க கூடாது. அன்றிய ஆண்களும் படுக்கையை பம்ர்ந்து கொள்ளகூடாது.

உங்கள் மீது உங்கள் மனைவியருக்கும் கடமை உண்டு, உங்கள் மனைவியர் மீது உங்களுக்கும் கடமை உண்டு, உங்கள் மனைவியர் உங்களுக்கு செய்ய வேண்டிய கடமையானது. உங்களுக்கு பிடிக்காதவன் உங்கள் இல்லங்களில் அவர்கள் அனுமதிக்காமல் இருப்பதும், எவருக்கும் உங்கள் படுக்கையை பம்ர்ந்து கொள்ளாமல் இருப்பது என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அம்ரு இப்னுல் அ:வஸ்(ரழி)

நூல்கள் : இப்னுமாஜா, திர்மிதீ

கணவனின் அனுமதியின்றி பெண்கள் வெளியே செல்லக்கூடாது. அப்படி சென்றால் வீட்டை விட்டு வெளியே சென்று திரும்பி வரும் வரை மலக்குகளின் சாபம் உண்டாகும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பள்ளிக்கு சென்று தொழுவதற்கு கூட கணவனின் அனுமதியை பெண்கள் பெற வேண்டும்.

பெண்கள் பள்ளிக்கு செல்ல உங்களிடம் அனுமதி கேட்டால், பள்ளிக்கு வருவதை தடை செய்யாதீர்கள். என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : இப்னு உமர்(ரழி)

நூல் : முஸ்லிம்

உங்கள் பெண்கள் உங்களிடம் (தொழுவதற்காக) இரவில் பள்ளி செல்ல அனுமதி கேட்டால் அவர்களுக்கு அனுமதியுங்கள் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : இப்னு உமர்(ரழி)

நூல்கள் : புகாரீ, அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, அஹ்மத்

பள்ளிக்கு செல்லவே கணவனிடம் கேட்கவேண்டும். அன்று நபி(ஸல்) கூறியிருக்கும் போது இன்று நாம் பெண்கள் கணவனின் அனுமதி இல்லாமல் எத்தனை இடங்களுக்கு செல்கிறோம். கணவனுக்கு கட்டுபட்டு நடந்தால் சுவனத்தின் எட்டு வாசல் வழியாகவும் செல்லலாம்.

ஒரு பெண் ஐவேளைத் தொழுது, ரமளான் மாதத்தில் நோன்பு நோற்று வருகிறால் மேலும் தன் வெட்கத்தலத்தை பாதுகாத்து கொண்டு, தன் கணவருக்கு கீழ்படிந்து நடக்கிறால் எனில், அவள் சொர்க்கத்தில் எந்த வாயில் விரும்புகிறாலோ, அதன் வழியாக சுவனத்தில் நுழையட்டும் என நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர் : அனஸ்(ரழி)

நூல் : மிஷ்காத்

இன்னும் எந்த பெண் சிறந்தவள் என்று நபி(ஸல்) கேட்டபோது அவர் கூறுவதை சிந்தித்து பார்க்க பெண்களாகிய நாம் கடமைப்பட்டு இருக்கின்றோம்.

எந்த பெண் (மனைவி) அனைவரை விடவும் சிறந்தவள்? என்று நபி(ஸல்) அவர்களிடம் கேட்டபோது எந்த பெண் கணவர் தன்னை பார்க்கும் போது அவனை மம்ழ்விக்கிறாலோ, அவன் கட்டளையிட்டால் அவனுக்கு கீழ்படிந்து நடப்பாளோ, தன் விஷயத்திலும் தன்னுடைய பொருளிலும், தன் கணவனுக்கு விருப்பமில்லாத எந்த போக்கையும் மேற்கொள்ள மாட்டாளோ, அத்தகையவளே அனைவரையும் விடச் சிறந்தவள்.

அறிவிப்பவர் : அபூஹு ரைரா (ரழி)

நூல் : நஸயீ

கணவனின் திருப்தியில் தான், இறைவனில் திருப்தி இருக்கிறது என்று பெண்கள் கவனத்தில் கொண்டு நாம் நடக்கவேண்டும்.

கணவன் தன் மீது திருப்தியுடன் இருக்கும்போது எந்த பெண்ணாவது மரணித்து விட்டால் அவள் சொர்கம் செல்வால் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : உம்முசல்பா (ரழி)

நூல்கள் : திர்மிதீ, இப்னுமாஜா,

மக்களில் எவரையும் எவருக்காவது ஸஜ்தா (சாஷ்டங்கம்) செய்யும்படி நான் ஏவுபவனாக இருந்தால், மனைவியை அவள் கணவனுக்கு ஸஜ்தா செய்யும்படி ஏவி இருப்பேன் என்று நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹு ரைரா (ரழி)

நூல் : நஸயீ, திர்மிதீ

## தாயாக

நம் சமுதாயத்தில் பிள்ளைகளை நல்ல முறையில் மார்க்க அடிப்படையில் தாய் வளர்ப்பது இல்லை. மனம் போன போக்கில் வளர்கிறார்கள். இப்படி வளர்ப்பதால் குழந்தைகள் வளர்ந்து ஆளானதும் அவர்கள் விருப்பம் தான் தோன்றி தனமாக நடக்கிறார்கள். நாம் மார்க்கத்தின் அடிப்படையில் வளர்த்தால் தான், குழந்தைகள் வளர்ந்து ஆளாம் நமக்கும், மார்க்கத்திற்கும் பயன் பெறுவார்கள். இன்னும் தாய்மார்கள் குழந்தைகளுக்கு தாய்பால் கொடுக்காமல் புட்டிபால் கொடுக்கிறார்கள். எங்கே பால் கொடுத்தால் தன் அழகு கெட்டு விடுமோ என்று தாய்பால் கொடுக்காமல் இருக்கிறார்கள்.

நாம் மனிதனுக்கு தன் பெற்றோர் (இருவருக்கும்) நலம் செய்ய வேண்டியது பற்றி வஸியத் செய்(து போதித்) தோம் அவனுடைய தாய் பலவீனத்தின் மேல் பலவீனம் கொண்டவளாக (கர்பத்தில்) அவளை சுமந்து இன்னும் அவனுக்கு பால்குடி மறத்த(லி)ல் இரண்டு வருடங்கள் ஆகின்றன. ஆகவே நீ எனக்கும் உன் பெற்றோருக்கும் நன்றி செலுத்துவாயாக என்னிடமே உன் மீளுதல் உள்ளது.

(31:14)

தன் குழந்தைக்கு, பாலூட்டி கொண்டிருக்கும் நிலையில் உள்ள மனைவியை ஒருவன் தலாக் விட்டால் அக்குழந்தைக்கு அவள் பாலூட்டுவதை நிறுத்தக் கூடாது. அதே சமயம் அவன் அப்பெண்ணுக்கு

உணவு, உடை போன்றவற்றை வழங்க வேண்டும். அல்லது பிரியும் தம்பதிகள் இருவரும் பேசி பாலூட்டும் காலத்தை விட்டு விட்டால் அதில் தவறு இல்லை. (2:233)

ஒரு மனிதன் அவனது குடும்பத்தின் பொறுப்பாளன். அவனது பொறுப்பு பற்றி மறுமையில் கேள்வி கேட்கப்படுவான். ஒரு பெண் அவளது கணவனின் வீட்டிற்கும் அவனின் குழந்தைகளுக்கும் பொருப்பாளியாவள். அவளது பொறுப்பு பற்றி (மறுமையில்) கேள்வி கேட்கப்படுவாள் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : இப்னு உமர்(ரழி)

நூற்கள் : புகாரி, முஸ்லிம்

உங்களின் பொருள்களும், உங்களின் குழந்தைகளும் உங்களுக்கு சோதனையே (இந்த சோதனையில் வெற்றி பெற்றால் உங்களுக்கு) அல்லாஹ்விடம் மிகப்பெரிய மகத்தான கூலி இருக்கிறது. (64:15)

விசுவாசிகளே, உங்கள் மனைவிகளிலும் உங்கள் குழந்தைகளிலும் உங்களுக்கு விரோதிகள் உள்ளன. அவர்களிடம் கவனமாக இருந்து கொள்ளுங்கள்.

(64:14)

இறை மொழியிலும், நபிமொழியிலும் குழந்தைகள் நமக்கு தரப்படும் சோதனைகளில் ஒன்று என்பதை தெரிந்து கொண்டோம். ஆகவே குழந்தைகளை முறையாக வளர்க்கவில்லை எனில் இறைவனிடம் பதில் சொல்லியே ஆக வேண்டும்.

பெற்றோர்கள் சிறு குழந்தைகள் மீது அன்பு செலுத்துவது அவசியமாகும். கடினமான பேச்சு இல்லாமல் அன்பாக பாசமாக பேசவேண்டும். முத்தம் கொடுத்தல், கொஞ்சுதல், அரவணைத்தல் போன்ற செய்கைகள் மூலம் அரவணைக்க வேண்டும் என்பதை பின்வரும் ஹதீஸ்களின் மூலம் அறியலாம்.

ஹஸன் இப்னுஅலி(ரழி) அவர்கள் நபி(ஸல்) அவர்கள் முத்தமிட்டார்கள். அப்போது அருகிலிருந்து அக்ரஉபின் ஹாபிஸ்(ரழி) அவர்கள் எனக்கு பத்து குழந்தைகள் உண்டு யாரையும் நான் முத்தமிடுவது இல்லை எனக் கூறினார்கள். உடனே நபி(ஸல்) அவர்கள் குழந்தைகள் மீது அன்பு காட்டாதவன் (இறைவனால்) அன்பு காட்டப்படமாட்டான் என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹு ரைரா(ரழி)

நூல் : புகாரி

குழந்தை வளர்ப்பில் மிக முக்கியமான அம்சம் அவர்களுக்கு கல்வி கற்றுக் கொடுப்பதாகும். பெற்றோர்கள் மற்ற செல்வங்கள் சேர்த்து வைப்பவளை காட்டிலும் குழந்தைகளை கல்விமான்களாக ஆக்கி விட்டு செல்வதே மிக உயர்ந்ததாகும்.

தந்தை தன் மக்களுக்கு அளிக்கும் அன்பளிப்புகளில் மிகச் சிறந்தது அவர்களுக்கு அளித்திடும் நல்ல கல்வியும் நல்லெழுகப் பயிற்சியுமேயாகும்.

அறிவிப்பவர்: ஸயீதுப்னுல் ஆஸ்(ரழி)

நூல்: மிஷ்காத்

உங்களின் குழந்தை ஏழு வயதை அடைந்தால் தொழும்படி கட்டளை இடுங்கள். அவர்கள் பத்து வயது ஆகும் போது தொழ மறுத்தால் அவர்களை அடியுங்கள் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அம்ருஇப்னுஷு ஐபு(ரழி)

நூல்: அபூதாவூத்

குழந்தைகளுக்கு இறைவனை பற்றிய விபரங்களை புரிய வைக்க வேண்டும். அதோடு மற்ற ஒழுக்க முறைகளையும், பண்புகளையும், இஸ்லாமிய சட்ட திட்டங்களையும் நாம் கூறி வளர்ப்பது பெற்றோரின் கடமையாகும். இஸ்லாமிய பண்புகளில் ஒன்றான சலாமை பிறருக்கு கூற கற்று தரவேண்டும். பிறரை சந்திக்கும் போது சலாம் கூறும் பழக்கத்தை கொண்டு வரவேண்டும்.

மனிதன் இறந்ததும் அவனது செயல் முடிவடைந்து விடுகிறது. மூன்றை தவிர

1. நிலையான தர்மம்.

2. பயனுள்ள கல்வி.

3. அவனுக்காக துவாச் செய்யும் நல்ல குழந்தை.

அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி)

நூல் : முஸ்லிம்

இந்த நபிமூலம், மனிதன் இறந்து விட்டாலும் அவனுக்கு மூன்று விஷயங்களால் நன்மைகள் கிடைக்கின்றன. அதில் ஒன்று அவனுக்காக பிரார்த்தனை செய்யும் நல்ல குழந்தை என்று அறிகிறோம்.

அனைத்து குழந்தைகளும் இஸ்லாத்தின் அடிப்படையில் தான் பிறக்கின்றன. ஆனால் (அக்குழந்தையின்) பெற்றோர்தான் அதை யூதனாகவும், கிறிஸ்தவனாகவும், நெருப்பை வணங்குபவனாகவும், வளர்புமூலம் மாற்றுகிறார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி)

நூல்: புகாரி, முஸ்லிம்

இந்த நபிமொழியை பெற்றோர்கள் நன்றாக சிந்திக்க வேண்டும். பெற்ற மகனோ மகளோ நரகவாதியாக மாறிவிடக்கூடாது. அவர்களை நல்லொழுக்கமுள்ள பிள்ளையாக நல்ல பண்புள்ள பிள்ளையாக, அல்லாஹ்வுக்கு முற்றிலும் அடிபணிந்த பிள்ளையாக பெற்றோர்கள் வளர்க வேண்டும். இதில் முக்கிய பங்கு பெண்களுக்கு உண்டு.

## சமூக சேவை

இன்று பெண்களாகிய நாம் என்ன நினைக்கிறோம் என்றால் வீட்டு வேலைகள் செய்தால் போதும் மற்ற சமூக சேவையில் நாம் செய்ய வேண்டியது இல்லை என்று நினைக்கிறோம். அந்த காலத்து ஸஹாபா பெண்கள் எந்த அளவிற்கு சமூக சேவை செய்துள்ளார்கள் என்பதை நாம் பார்ப்போம்.

கைபர் பள்ளத்தாக்கில் வசித்து வந்த பனா நூளைர் கோத்திரத்தை சேர்ந்த யூதர்கள் இஸ்லாத்திற்கு எதிரான நீண்ட சதித் திட்டங்களை உருவாக்கி வந்தார்கள். அதனை கேள்விபட்டதும் முற்றவிடாமல் முன்கூட்டியே அதனை தகர்த்து விடுவதற்காக அந்த யூதர்களுடன் நபி (ஸல்) போர் புரிந்தார் அந்த போர் தான் கைபர் போர் இந்த போரில் ஸப்பியா (ரழி) அவர்கள் கலந்து கொண்டு போர்கால சேவைகளை ஆற்றியுள்ளார்கள். என்பது குறிப்பிடத்தக்கது. முஸ்லீம் பெண்கள் சிலருடன் குறிப்பாக அஸ்லம் கோத்திராத்தைச் சார்ந்து குஅய்பா பின்த் ஸஃத் (ரழி) எனும் நபித் தோழியருடன் சேர்ந்து போர்களத்தின் அதன் அருகில் ஒரு கூடாரம் அடித்துக் கொண்டு போரில் காயப்பட்ட வீரர்களும் மருத்துவ உதவி அளித்தார்கள்.

போர் முடிந்த பிறகு போரில் கைப்பற்றப்பட்ட பொருள்களை நபி(ஸல்) முஸ்லிம் வீரர்களுக்கு பம்ர்ந்து கொடுத்தார்கள். மருத்துவ சேவை செய்த பெண்களுக்கும் அவற்றை வழங்கினார்கள். அதில் அன்னை ஸஃபியா(ரழி) அவர்களுக்கும் அதிக பங்கை அளித்து கௌரவித்தார்கள்.

மற்றும் ஒரு வீரம் மிக்க பெண்மணியை பற்றி பார்ப்போம். இவர் பல போர்களில் பங்கு கொண்டு உள்ளார். ஒரு முறை போரில் கைப்பற்றப்பட்ட பொருள்களை மதினாவுக்கு கொண்டு வரப்பட்டன. விலை உயர்ந்த சேலைகள் இருந்தன அவற்றில் பொன்னிலைகள் கலந்து நெய்யப்பட்ட மிகமிக விலையுயர்ந்த இரு பட்டுபுடவைகளும் அடங்கும். வந்த பொருள்களை பங்கிடும் போது கலீஃபா உமர்(ரழி) அவர்கள் அவை போரை நோக்கி கேட்டார்கள். இந்த இருபட்டு சேலைகளுக்கும் உரியவர் யார். சிலர் கூறினார்கள் உங்கள் மகனார் அப்துல்லாஹ்வின் மனைவிக்கு கொடுங்கள் (அப்துல்லாஹ்(ரழி) கலிபாவின் மகள் என்று கூறவில்லை. அவர் பல போர்களில் பங்கு பெற்ற நபி தோழர் இறையச்சம் உடையவர் என்பதால் இவ்வாறு கூறப்பட்டதை கவனத்தில் கொள்ளவும் உமர்(ரழி) கூறினார்கள் இல்லை இல்லை இவற்றை உம்மு உமாராவுக்குத்தான் கொடுப்பேன். அவர் தான் இதற்கு அதிக தகுதி ஆனவர். ஏனெனில் உஹதுப் போருக்குப் பிறகு நபி(ஸல்) அவர்கள் உம்மு உமராவின் வீரம் குறித்து இவ்வாறு கூற கேட்டுள்ளேன். உஹதுப் போரில் வலது பக்கம் இடது பக்கம் எங்கு நோக்கிலும் உம்மு உமாராவே போரிட்டுக் கொண்டிருப்பதை நான் கண்டேன். இவ்வாறு பல பெண்கள் சமூக சேவையில் ஈடுபட்டு உள்ளார்கள். ஆகவே நாமும் சமூக சேவையில் பங்கு கொள்ளவேண்டும்.

## ஒழுக்க மேம்பாட்டில்

### பர்தா (ஹிஜாப்)

பர்தா பெண்களுக்கு முக்கியமானதில் ஒன்று இதை கண்டிபப்பாக பெண்கள் அணிய வேண்டும். இன்றைக்கு நிறைய பெண்கள், உள்ளே இருக்கும் துணியின் அழகை வெளியே காட்ட முடியாதே என்பதற்காக பர்தா அணியாமல் இருக்கின்றனர். அல்லாஹ் அருள்மறையிடம் திருமறையில் கூறுகிறான்.

மேலும் (நபியே!) மூனான பெண்களுக்கு நீர் கூறுவீராக அவர்கள் தங்கள் பார்வைகளை தாழ்த்தி கொள்ளுதல் வேண்டும். தங்கள் வெட்க தலங்களை பேணிக் காத்துக் கொள்ளவேண்டும். தங்களின் அலங்காரத்தை அதனின்று சாதாரணமாக வெளியில் தெரியக்கூடிய (முன்னக முகத்)தை தவிர வேறு எதையும் வெளிக்காட்டலாகாது. இன்னும் நீங்கள் முற்றானைகளால் அவர்கள் தங்கள் மார்புகளை மறைத்துக் கொள்ளவேண்டும். (24:31)

சேலை அணிவதோ, சுடிதார் அணிவதோ, நைட்டி அணிவதோ எதுவானாலும் உடல் அங்கம் அதன் பரிமாணங்கள், உடலின் அழகு இவை அனைத்தும் தெரியாத வண்ணம் உடை அணிவது தான் பர்தா முறையாகும். நாம் மோசமாக ஆடைகளை அணிந்து கொண்டால் ஆண்களின் மனதை கவரும். அவர்களின் இச்சையை தூண்டும் விதமாக நாம் உடை அணிய கூடாது.

இரண்டு பேர்கள் நரகத்திற்கு உரியவர்கள் ஆவார்கள். அவர்களால் சொர்க்கத்தின் வாடை கூட நுகர முடியாது (அவர்கள்) மக்களைச் சாட்டையால் அடிப்பவர்கள். மேலும் ஆடை அணிந்தும் நிர்வாணமாக திரியும் பெண்கள் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹு ரைரா(ரழி)

நூல்கள்: முஸ்லிம், அபூதாவூத்

மேலும் அல்லாஹ் கூறுகிறான் (நபியே!) உம் மனைவிகளுக்கும், உம் பெண் மக்களுக்கும், ஈமான் கொண்டவர்களின் பெண்களுக்கும், அவர்கள் தங்கள் தலை முற்றானைகளால் தாழ்த்தி கொள்ளுமாறு கூறுவீராக அவர்கள் (கன்னியமானவர்கள் என) அறியபட்டு நோவினை செய்யப்படாமலிருந்து இது சுலபமான வழியாகும். (33:59)

ஒரு பெண் பருவமடைந்து விட்டால் அவளுடைய இந்த , இந்த பாகங்களை தவிர மற்றவை வெளியில் தெரிவது நல்லதல்ல என்று கூறி முகத்தையும், மணிகட்டு வரையிலான கைகளையும் நபி(ஸல்) அவர்கள் காட்டினார்கள்.

தங்கள் உடலை முழுமையாக மூடிக் கொள்ளாமல், என் பின்னேவா, என்று அழைக்குமாறு, வைரத்தை விட அதிகமாக விலை மதிக்க முடியாது நம் உடல் அங்கங்களை (இடுப்பு, கழுத்து) திறந்து போட்டு காட்டி பின்பு அவன் பின்னே வந்தான். என்னை சீண்டினான் என்று கூப்பாடு போடுவது தவறு நாம் மறைக்க வேண்டியதை மறைக்காமல் இருந்தால் கண்டிப்பாக கயவர்களின பார்வையிருந்தும் சீண்டுதலிருந்தும் நாம் தப்பிக்க முடியாது. நம் கற்பை பேணி காக்க மட்டும் அல்லாமல், ஒழுக்கமான வாழ்வு வாழ இன்றைய காலத்திற்கு மட்டுமல்லாமல் எல்லா காலங்களிலும் பர்தா அவசியம்.

அடுத்தபடியாக நம் பெண்களை பெரிதும் பாதிப்பது டி.வீ எல்லா சைத்தான்களும் நாம் வீட்டில் இருந்தபடியே பார்க்கும் ஒரு பொக்கிசகமாகவே நம் பெண்கள் கருதுகிறார்கள். இது உண்மையில் நடந்த சம்பவம். ஒரு பெண் டி.வீயை பார்க்க அண்டை வீட்டிற்கு சென்றால், 2,3 மணிநேரம் கழித்து வந்து பார்க்கும் போது அந்த குழந்தை விழித்து தண்ணீர் தொட்டியில் விழுந்து இறந்து விட்டது. எந்த அளவுக்கு நம் பெண்கள் மோசமாக உள்ளார்கள் பார்த்தீர்களா. தாயும், மகளும் சேர்ந்து டீ.வியை பார்க்க முடியுமா, மகனும் தாயும் சேர்ந்து டீ.வியை பார்க்க முடியும் இப்படி வித்தியாசம் இல்லாமல் அத்தனைக்கு மேல் இறையச்சம் இல்லாத காரணத்தினால், இரவு நெடுநேரம் டீ.வியை பார்த்து விட்டு பஜ்ர் தொழுகைக்கு எழுவதில்லை.

எவர் ஒருவர் பஜ்ர்ருடைய முன் சுன்னத் இரண்டு ரக்அத் தொழுகிறார்களோ அவர்களுக்கு இந்த உலகமும் உலகத்தை விடச் சிறந்தது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஆகவே நாம் மோசமான நிகழ்ச்சிகள் பார்க்காமல் இம்மையிலும் மறுமையிலும் வெற்றி பெறுவோமாக

## புறம் பேசுதல்

நாம் இந்த நாவல் மிகப்பெரிய கூட்டத்தை ஒன்று திரட்டலாம். மிகப்பெரிய கூட்டகத்தை பிளவுபடுத்தலாம். சேர்ந்து இருக்கும் சகோதரர்களை பிரிக்கலாம். பிரிந்து இருக்கும் சகோதரர்களை ஒன்று சேர்க்கலாம். சேர்ந்து உள்ள கணவன், மனைவியை பிரிக்கலாம். பிரிந்துள்ள கணவன், மனைவியை ஒன்று சேர்க்கலாம். இந்த நாவை முறையோடு பயன்படுத்தினால் சுவனம் செல்லாம் முறைகேடான பயன்படுத்தினால் நரகம் தான் செல்வோம்.

தன் இருதாடைகளுக்கு மத்தியில் உள்ளதையும் தன் இரு தொடைகளுக்கு மத்தியில் உள்ளதையும் (தவறான வழியில் பயன்படுத்தாமல் இருக்க) எனக்காக எவர் பொறுப்பேற்கின்றாரோ அவருக்காக சொர்க்கம் கிடைக்க பொறுப்பேற்பேன் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அஹ்லுபின் அஸ்அத்(ரழி)

நூல்: புகாரி

ஒருவர் தன் நாவையும் மர்மஸ்தானத்தையும், முறையாக பயன்படுத்தினால் அதாவது தவறான பேச்சு, விபச்சாரம் போன்றவற்றில் இருந்து தன்னை தவிர்த்துக் கொண்டால் அவருக்கு சொர்க்கம் கிடைக்கும் என நபி(ஸல்) அவர்களே பொறுப்பும் ஏற்றுள்ளார்கள்.

ஒருவன் தன் நாவினாலோ கைகளினாலோ மற்ற முஸ்லிம்கள் எவருக்கும் நோவினை தரக்கூடாது. இது தான் உண்மையான முஸ்லிமுக்கு அடையாளமாகும்.

எவரின் நாவாலும், கைகளாலும் முஸ்லிம்கள் பாதுகாப்புடன் இருக்கின்றாரோ அவரே உண்மையான முஸ்லிம் ஆவார். என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அப்துல்லா பின் அம்ர்(ரழி)

நூல்கள்: புகாரி, முஸ்லிம், அபூதாவூத்

தவறுகளின் பிறப்பிடமே இந்த நாக்குதான். எனவே நாம் உறுப்புகளில் மிகவும் அஞ்ச வேண்டிய உறுப்பு நாக்கு தான் ஆகையால் இந்த நாக்கு விஷயத்தில் நாம் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

அல்லாஹ்வின் தூதரே, என் மீது தாங்கள் மிகவும் பயப்படுவது ஏன்? என்று நான் நபி(ஸல்) அவர்களிடம் கேட்டேன். தன் நாவை பிடித்துக் கொண்டு இது தான் (அதிகமாக அஞ்சுவது) என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: சுஃப்யான் பின் அப்துல்லாஹ் தகபிஃ(ரழி)

நூல்: திர்மிதி

நரகத்திற்கு செல்வதற்கு பல காரணங்கள் உண்டு. அதில் அதிகமாக சாபமிடுதலும் கணவனுக்கு மாறு செய்வதும் ஆகும். இவ்விரண்டு குற்றங்களும் பெண்கள் தான் செய்கிறார்கள். எனவே பெண்கள் தான் நரகில் காணப்படுகிறார்கள் என நபி(ஸல்) அவர்கள் கீழ்வரும் ஹதீஸ்களில் நமக்கு தெரியப்படுத்துகிறார்கள். எனவே பிறரை சபிப்பதும், கணவனுக்கு மாறு செய்வதும் பெண்களை நரகில் கொண்டு போய் சேர்க்கும். எனவே பெண்கள் நாவிற்கு பயப்பட்டு கவனமாக பயன்படுத்தவேண்டும்.

ஒரு நபி(ஸல்) அவர்கள் நஜ் அல்லது நோன்பு பெருநாளன்று தொழும் இடத்திற்கு வந்து பெண்கள் அமர்ந்திருக்கும் பகுதிக்கு சென்றார்கள். அப்போது தர்மம் செய்யுங்கள். பெண்கள் சமுதாயமே, உங்களை நரகவாதிகளில் மிக அதிகமானவர்களாக பார்க்கிறேன். என்று நபி(ஸல்) கூறினார்கள். அல்லாஹ்வின் தூதரே அது எப்படி என்று கேட்டார்கள். நீங்கள் சாப வார்த்தைகளை அதிகமாக பயன்படுத்துகிறீர்கள். கணவனுக்கு மாறு செய்கிறீர்க்ள என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஸயீத்அல்குத்ரீ(ரழி)

நூல்கள்: புகாரி, முஸ்லிம்

தன் சகோதரனிடம் உள்ள குறைகளை பிறரிடத்தில் சொல்வதால் அவன் மனது கஷ்டத்திற்கு ஆளாகிறது. காரணம் இவனை பற்றி நல்ல மதிப்பு கொண்டவன் இக்குறையை கேட்பதால் மதிப்பிழந்து பார்க்கிறேன். எனவே இவை புறம் பேசுவது ஆகும். அதே நேரத்தில் அவனிடம் இல்லாத ஒன்றை நாம் பேசும் போது அவதூறு பேசுவது ஆகும். இது போன்றவை சர்வ சாதாரணமாக நம்மிடையே நடக்கிறது. எனவே இது விஷயமாக நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

புறம் என்றால் என்ன என்பதைபற்றி நபி(ஸல்) அவர்கள் நீங்கள் அறிவீர்களாக என கேட்டபோது, அல்லாஹ்வும், அவன் தூதருமோ தவிர மிகவும் அறிந்தவர் என தோழர்கள் கூறினார்கள். (புறம் என்பது) உன் சகோதரன் வெறுப்பதை நீ பேசுவதற்கும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் அவ்வாறு நான் கூறுவது என் சகோதரனிடம் இருந்தால் என்ன கருதுகிறீர்கள்? எனக் கேட்டதற்கு,

நீ சொல்வது அவரிடம் இருந்தால் புறம் பேசி விட்டாய். அவ்வாறு அவரிடம் இல்லை என்றால் அவர் மேல் இட்டு கட்டிவிட்டாய் என நபி(ஸல்) அவர்கள் விளக்கம் தந்தார்கள்.

அறிவிப்பவர்: அபூஹு ரைரா (ரழி)

நூல்: முஸ்லிம்

புறம் பேசுதல் தனது இறந்த சகோதரனின் மாமிசத்தை உண்பது போன்றது என்று திருக்குர்ஆன் கடுமையாக நமக்கு எச்சரிக்கை செய்கிறது.

மூஃமின்களே (சந்தேகமான) பல எண்ணங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். ஏனெனில் நிச்சயமாக எண்ணங்களில் சில பாலங்கள் இருக்கும் (பிறர் குறைகளை) நீங்கள் துருவி, துருவி ஆராய்ந்து கொண்டிராதீர்கள். மேலும் உங்களில் சிலர் சிலரை பற்றி புறம் பேச வேண்டாம். உங்களில் எவராவது இறந்த தம்முடைய சகோதரனின் மாமிசத்தை புசிக்க விரும்புவாரா? (இல்லை) அதனை நீங்கள் வெறுப்பீர்கள். இன்னும் நீங்கள் அல்லாஹ்வை அஞ்சுங்கள். நிச்சயமாக பாவத்திலிருந்து மீள்வதை அல்லாஹ் ஏற்றுக் கொள்பவன். மிக்க மருபை செய்பவன். (49:12)

ஒருவர் எவ்வளவு தான் தொழுதாலும், நோன்பு நோற்றாலும், தர்மம் செய்தாலும் தன் நாவின் கெட்ட வார்த்தைகளால் நரகத்திற்கு போய் விடுகிறால், தொழுகை, நோன்பு, தர்மம் இவைகளை குறைத்துக் கொண்டாலும் தன் நாவை கெட்ட பேச்சுகளில் இருந்து தவிர்த்து கொள்வதால் சுவனம் செல்ல காரணமாக இருக்கிறது என்று பின்வரும் ஹதீஸ்களிலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம்.

ஒருவர் நபி(ஸல்) அவர்களிடம் அல்லாஹ்வின் தூதரே, இன்னவன் அதிகமாக நோன்பு பிடிக்கிறால், அதிகமாக தானதர்மங்கள் செய்கிறால். ஆனால் அப்பெண் பக்கத்து வீட்டினருக்கு தன் நாவால் துன்பம் தருகிறாள். என கேட்டபோது அவள் நரகத்தில் இருப்பாள் என நபி(ஸல்) கூறினார்கள். அல்லாஹ்வின் தூதரே இன்னவள் குறைவாக நோன்பு நோற்பால் தர்மங்கள் செய்கிறால் தொழுகிறாள். இக்த் என்ற இடத்தில் உள்ள காளை மாடுகளை தர்மம் செய்கிறால் - ஆனால் தன் நாவால் பக்கத்து வீட்டாருக்கு துன்பம் தருவதில்லையே என கேட்ட போது இந்த பெண் சுவனத்தில் இருப்பாள் என நபி(ஸல்) விளக்கம் அளித்தார்கள்.

அறிவிப்பவர்: அபூஹு ரைரா (ரழி)

நூல்கள்: அஹ்மத், பைஹகீ

புறம் பேசுபவர்கள் மறுமை நாளில் கடுமையான வேதனை செய்யப்படுவார்கள் தமது கரங்களினாலே அவர்கள் வேதனை செய்யப்படுவார்கள் என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

மிஃராஜின் போது நான் ஒரு கூட்டத்தில் கடந்து சென்றேன். அக்கூட்டத்தினருக்கு இரும்பிலான நகங்கள் இருந்தன. அதன் மூலம் அவர்கள் தங்கள் முகங்களையும் நெஞ்சங்களையும் காயப்படுத்திக் கொண்டிருந்தனர். அப்போது ஜிப்ரீலே இவர்கள் யார் என்று கேட்டேன். இவர்கள் மனிதனின் மாமிசத்தை சாப்பிட்டவர்கள் (அதாவது புறம் பேசியவர்கள்) மனிதர்களின் கண்ணியத்தில் கை வைத்தவர்கள் என்று விளக்க மளித்தார்கள்.

அறிவிப்பவர்: அனஸ் (ரழி)

நூல்கள்: அபூதாவூத், அஹ்மத்

இதுவரையில் புறம் பேசுவதால் ஏற்படும் தீமைகளை, குர்ஆன் மூலமும், ஹதீஸ்களின் மூலமும அறிந்து கொண்டோம். இன்னும் நிறைய ஹதீஸ்களும், குர்ஆன் வசனங்களும் உள்ளன. நாம் நம் நாவை பேணி காத்து சுவனம் செல்வோமாக.

இன்று மற்றொரு விஷயம் நம் பெண்களிடையே மிகவும் மோசமான நிலையை மற்றொன்று, அதுதான் அவதூறு பிறர் மணம் நோகும் என்று சிறிது கூட சிந்தித்து பார்ககாமல் அபாண்டமாக அவதூறு பேவிவிடுகிறார்கள். எதையும் ஆதாரம் இல்லாமல் பேசக்கூடாது.

அல்லாஹ் உங்கள் மீது தாய்மார்களை கொடுமைபடுத்துவத்தையும் பெண் மக்களை உயிரோடு புதைப்பதையும் அனுமதித்தவற்றையும் தடை செய்வதையும் தடை செய்து விட்டான். மேலும் இவர் கூறினார். இவ்வாறு கூறப்பட்டது என்று கூறுவதையும், அதிகம் கேள்வி கேட்பதையும் பொருளை வீணடிப்பதையும் வெறுக்கிறேன். என்று நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: முகீரா (ரழி)

நூல்கள்: புகாரி, முஸ்லிம்

ஒரு பெண் விஷயத்தில் சொல்லப்படும் அவதூறு அவளின் வாழ்க்கை நிரந்தரமாக பாழ் ஆகிவிடும். நல்ல பெண் என்று பேசப்படும் பெண்களுக்கே மாப்பிள்ளை கிடைப்பது. மிகவும் கடினமாக இருக்கிறது. இன்னும் பெண் மீது அபாண்டமாக அவதூறு கூறினால் அவளுடைய நிலைமைய சொல்லி தான் தெரியவேண்டுமா?

இதன் கடுமையை அறிந்த அல்லாஹ் இதை மாபெரும் குற்றமாக கூறியுள்ளான். அவதூறு கூறுபவர்கள் அதற்கு நான்கு சாட்சிகளை கொண்டு வரவில்லையானால், அவர்களுக்கு என்பது ஆசையடி கொடுப்பதோடு இனிமேல் எப்பிரச்சினையாலும் இவரின் சாட்சியத்தை ஏற்றுக் கொள்ள கூடாது என்று அல்லாஹ் கட்டளையிடுகிறான். இவர்கள் இம்மையிலும், மறுமையிலும் சபிக்கப்படவர்கள். மறுமை நாளில் படுபயங்கர வேதனை இவர்களுக்குண்டு. ஆகவே இந்த மோசமான செயலை கனவில் கூட நாம் எண்ணி பார்க்ககூடாது.

எவர்கள் கற்புள்ள பெண்கள் மீது அவதூறு கூறி (அதை நிரூபிக்க) நான்கு சாட்சிகளை கொண்டு வரவில்லையோ, அவர்களை நீங்கள் என்பது கசையடி, அடியுங்கள். பின்னர் அவர்களது சாட்சியத்தை எக்காலத்திலும் ஏற்றுக் கொள்ளாதீர்கள். நிச்சயமாக அவர் தான் பாவிகள் (24:4)

எவர்கள் மூஃமினான ஒழுக்கமுள்ள பேதைப் பெண்கள் மீது அவதூறு கூறுகிறார்களோ, அவர்கள் நிச்சயமாக இம்மையிலும், மறுமையிலும் சபிக்கப்பட்டவர்கள். இன்னும் அவர்களுக்கும் கடுமையான வேதனையும் உண்டு. (24:23)

அழிக்கக்கூடிய ஏழு விசயங்களை தவிர்த்து கொள்ளுங்கள். என்று நபி(ஸல்) கூறினார்கள். நாங்கள் அவை என்னென்ன என்று கேட்டோம். அதற்கு நபி(ஸல்) அவர்கள் அல்லாஹ்வுக்கு இணைவைத்தல் சூனியம் செய்தல் நியாயமாகவே அன்றி அல்லாஹ் ஹராம் செய்து உயிர்களை கொலை செய்தல். வட்டியின் மூலம் சாப்பிதல் அனாதையின் பொருட்களை சாப்பிடுதல் போர்களத்தில் புறமுதுக காட்டி ஓடுதல் கற்புள்ள பேதை பெண்கள் மீது அவதூறு கூறுதல்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி)

நூல்கள்: புகாரி, முஸ்லிம்

இதுவரை அவதூறு பேசினால் என்னென்ன தீமைகள் ஏற்படும் என்று குர்ஆன் மூலமும் ஹதீஸின் மூலமும் தெரிந்து கொண்டோம். ஆகவே அவதூறு பேசாமல் நாம் சுவனத்திற்கு செல்ல வழி தேடுவோமாக.

## உண்மையே பேசவேண்டும்.

ஒருவர் உண்மையை தான் பேசவேண்டும். ஏனெனில் உண்மை இறுதியில் சொர்க்கத்திற்கு கொண்டு போய் விடுகிறது. அதோடு அல்லாஹ்விடம் உண்மையாளன் என்று எழுதப்படுகிறான். இதை போல் ஒருவர் பொய் கூறினால். பொய்யானது நரகத்திற்கு கொண்டு போய்விடும். அதோடு அவன் அல்லாஹ்விடத்தில் நரகவாசி என்றும் எழுதப்பட்டு விடுவான்.

உண்மையை பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் நிச்சயமாக உண்மையோ, நன்மையின் பால் கொண்டு செல்லும், நன்மையோ சொர்க்கத்திற்கு கொண்டு போகும். ஒருவர் உண்மையையே பேசிக் கொண்டே உண்மையை (வெளியாக்குவதற்கு) முயற்சி செய்து கொண்டு இருந்தால் (அவரைப்பற்றி) அல்லாஹ்விடத்தில் உண்மையாளன் என்று எழுதப்படும். (அதே போன்று) பொய்யையும் விட்டுவிடுமாறு உங்களை எச்சரிக்கிறேன். ஏனென்றால் நிச்சயமாக பொய் பாவங்களின் பக்கம் சேர்ந்து விடும். நிச்சயமாக பாவங்களோ மனிதனை நரகத்தில் சேர்த்து விடும். ஒரு மனிதன் பொய்யுரைத்துக் கொண்டே பொய்யை (வெளியீடுவதற்கு முயற்சித்தால்) அவரை பற்றி அல்லாஹ்விடம் பொய்யன் என்று எழுதபடும் என்று நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் மஸ்வூத்(ரழி)

நூல்: புகாரி, முஸ்லிம்

மனிதனின் பண்பிற்கு மிகவும் எதிரானது மோசடியும் பொய்யும் தான். குறிப்பாக மூஃமின்களுக்கு இந்த இரு குணங்கள் அறவே கூடாது.

மோசடி பொய்யை தவிர ஏனைய அனைத்து இயல்பான குணத்தோடு ஒரு மூஃமீன் படைக்கப்பட்டுள்ளான். என நபி(ஸல்) அவர்கள் கனவின் மூலம் கண்டுள்ளனர்.

இரு மலக்குகள் என்னிடம் கனவில் வந்து எவரது நெற்றிப் பொட்டு உடைக்கப்பட்டதாக கண்டீரோ அவர் பொய்யராகும். அவர் வான முகட்டளவிற்கு பொய் பேசுவார். மறுமையில் இப்பொய்யின் காரணமாகவே தண்டிக்கப்படுவார் என நபி(ஸல்) நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஸம்ரத் பின் ஜீன்துப்

நூல்: புகாரி

ஒருவன் ஒரு செய்தியை கேட்கிறான் அது நல்லதா, சரியா, தவறா என்று அறியாமல் அதை அப்படியே பிறரிடமும் கூறுகிறான். இவ்வாறு கூறுபவன் பொய் கூறுபவனை போன்றவனே பொய் கூறுபவன் எதை பற்றியும் கவலைபடுவதில்லை. எனவே இருவரும் சமமானவர்களே.

தான் கேட்டது அனைத்தையும் அப்படியே பேசுவது ஒருவன் பொய்யன் என்பதற்கு போதுமானதாகும். என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹு ரைரா(ரழி)

நூல்: முஸ்லிம்

நபி(ஸல்) ஒரு வீட்டிற்கு சென்றிருந்தார் அந்த வீட்டு பெண்மணி தன் குழந்தையை கைமூடி பேரிச்சம்பழம் இருக்கிறது வா என்று அழைத்தார். அதற்கு நபி(ஸல்) உங்கள் கையில் உண்மையிலேயே பேரிச்சம்பழம் இருந்தால் கூப்பிடுங்கள் இல்லை என்றால் இதையும் அல்லாஹ் பொய் என்று எழுதி விடுவான் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

## தலாக்

---

ஒரு ஆண் மகன் தன் மனைவியை தலாக், தலாக், தலாக் என்றோ, முத்தலாக் என்றோ ஒரே சமயத்தில் கூறி விவாகரத்துச் செய்தால் ஆத்துடன் எல்லாமே முடிந்து விட்டது என்ற தவறான எண்ணம் நடைமுறைபடுத்தப்பட்டு வருகின்றது. இது சரியா என்பதை எல்லா முஸ்லிம்களும் அறிந்திட கடமைப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு தலாக் கூறிய பின்னும் ஏற்படும் நிலைமையை அறிவது அவசியம்.

### முதல் தலால் கூறிய உடன்

தன் மனைவியை ஒருவன் ஒரு தலாக் கூறினால் கணவன் மனைவி என்ற உறவு தற்காலிகமாக நீங்கி விடுகிறது. இவ்வாறு ஒரு தலாக் கூறப்பட்ட பெண்கள் தலாக் கூறப்படும் போது கர்ப்பினியாக இருந்தால் அவளது கணவன் அவளை திரும்பவும் அழைத்துக் கொள்ள உரிமை வழுங்கப்பட்டிருக்கிறான் ஒரு தலாக் கூறப்பட்ட அவள் மாதவிடாய் நின்று போய்விட்ட பருவத்தில் இருந்தால் மூன்று மாதங்களுக்குள் கணவன் அவளை திரும்பவும் அழைத்துக் கொள்ளலாம்.

எந்த காலகெடுவுக்குள் தலாக்கை வாபஸ் பெறலாம் என்று இஸ்லாம் கூறுகிறதோ அந்த கால கெடுவுக்குள் கணவன் தன் மனைவியுடன் சேர விரும்பும் போது அதை மறுக்கக் கூடிய உரிமை மனைவிக்கு அறவே கிடையாது.

எந்தெந்த பெண்களை எந்தெந்த காலக்கெடுவுக்குள் திரும்ப அழைத்து கொள்ளலாம் என்று கூறப்பட்டதோ அந்த கால கெடுவுக்குள் தன் மனைவியை ஒருவன் மீட்டுக் கொள்ள தவறினால் அவ்விருவருக்குமிடையே இருந்த திருமண உறவு நீங்கி விடுகின்றன. அதன் பிறகு அவளை திரும்ப அழைக்கும் உரிமை கணவனுக்கு இல்லை. ஆயினும் அவ்விருவரும் மீண்டும் திருமணம் செய்து கொண்டு இல்வாழ்வை தொடரலாம். மீண்டும் திருமணம் செய்ய கணவன் விரும்பும் போது அதை ஏற்பதும் மறுப்பதும் அந்த பெண்ணின் உரிமையை பொறுத்தது. அந்த கால கெடுவுக்குள் அழைத்துக் கொள்ள கணவனுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதோ அந்தக் காலகெடு முடிவதற்கு முன் அப்பெண் மற்றொருவனை திருமணம் செய்ய முடியாது. தலாக் விட்ட கணவன் திரும்ப அழைப்பான் என்று காத்திருக்க வேண்டும். அவனுக்காக அவள் காத்திருக்கும் காலங்களில் அவளது உணவு, உடை, தங்குமிடம் வசதியாகவும் கணவனையே சார்ந்தது. அந்த கால கெடு முடிந்த பின்னும் கணவன் அழைக்காவிட்டால் அவள் வேறொருவரின் திருமணம் செய்யவோ அல்லது முதல் கணவன் விரும்பினால் அவனையே திருமணம் செய்யவோ உரிமை பெறுகிறால். இது ஒரு தலாக் கூறிய பிறகு ஏற்படக்கூடிய நிலை.

### இரண்டாவது தலாக்.

முதல் தலாக் கூறிய பின் அதை வாபஸ் பெற்று அவளுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் போது அவர்களிடையே மீண்டும் பிணக்கு ஏற்பட்டு அடுத்து ஒரு தலாக் கூறினால் முதல் தலாக் கூறியபோது ஏற்பட்ட அதே நிலைமைகள் இப்போது உள்ளன.

இரண்டாவது தடவையாக தலாக் கூறிய பின் முன்னர் குறிப்பிட்டுள்ள காலக் கெடுவுக்குள் அவளை திரும்ப அலைத்துக் கொள்ளலாம். அந்த காலகெடுவுக்குள் வேறு ஒருவனை திருமணம் செய்ய முடியாது. அவளது உணவு, உடை, தங்குமிடம் அவனை சார்ந்த அந்த காலகெடு முடிந்ததும் அவள் சம்மதித்தாள் அவளை திருமணம் செய்து கொள்ளலாம். மீண்டும் அவளை அழைத்துக் கொண்டாலோ, அவளுக்கு வழங்கப்பட்டிருந்த மூன்று வாய்ப்புகளில் இரண்டு தலாக் முடிந்து விடுகின்றன. இன்னும் ஒன்று தான் (தலாக்) பாக்கி இந்த இடத்தில் ஒரு விஷயத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு தலாக் அல்லது இரண்டு தலாக் கூறி குறிப்பிட்ட அந்த கால கெடுவுக்குள், அவளை திரும்ப

அழைத்துக் கொள்ள தவறினால் அவளது சம்மத்துடன் அவளையே மீண்டும் திருமணம் செய்து கொள்ளலாம். இவ்வாறு அவளையே திருமணம் செய்து கொள்வதற்கு கால வரம்பு எதுவும் கிடையாது. எத்தனை மாதங்கள் அல்லது ஆண்டுகள் கழிந்த பின்னரும் அவளை திருமணம் செய்து கொள்ளலாம்.

மூன்றாவது தலாக்கூறிய பின்

மீண்டும் அவர்களிடையே பிணக்கு ஏற்பட்டு மூன்றாவது தடவையும் அவன் தலாக் கூறி விட்டால் அத்துடன் அவர்களது திருமண உறவு முறிந்து விட்டது. மற்ற இரண்டு தலாக் கூறியபின் அழைத்துக் கொண்ட மாதிரி இப்போது அழைத்துக் கொள்ள முடியாது. மீண்டும் இருவரும் சேரலாம் என்ற எண்ணம் இருந்தால் அதற்கு ஒரே வழி.

அவள் மற்றொருவரின் திருமணம் செய்ய வேண்டும். அவனுடன் அவள் வாழ வேண்டும் அந்த கணவனுக்கு அவனை பிடிக்காமல் போய் எவரது நிர்பந்தத்திற்காகவும் இல்லாமல் சொந்தமாக தலாக் கூற வேண்டும்.

முதல் தலாக் கூறி, அதற்குரிய கெடுவுக்குள் அவளை திரும்ப அழைக்காதிருக்க வேண்டும் அல்லது, இரண்டாவது, மூன்றாவது தலாக் கூறி திருமண உறவை முறித்திருக்க வேண்டும். அதன் பிறகு தான் மூன்று தலாக்கை கூறிய முதல் கணவன் திருமணம் செய்ய முடியும்.

இது கூறியவற்றிற்கு ஆதாரங்கள். தலாக் விடப்பட்ட பெண்கள் மூன்று மாத விடாயிலிருந்து தூய்மை அடையும் காலம் வரை(மறுமணம் செய்து கொள்ளாமல்) முந்திய கணவனுக்கு வேண்டிய காத்திருப்பார்கள். அல்லாஹ்வையும் இறுதி நாளையும் அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால் தங்கள் கர்ப்ப அறைகளில் அல்லாஹ் படைத்திருக்கின்றதை (குழந்தை உருவான விஷயத்தை) மறைப்பது அவர்களுக்கு (அனுமதி) இல்லை, அவர்களின் கணவர்கள், நல்லிணக்கத்தை விரும்பினால் (இந்த கெடுவுக்குள்) அவர்களை திரும்பவும் அழைத்துக் கொள்ளத் தகுதி படைத்தவர்கள். (2:228)

(திரும்பவும் அழைத்துக் கொள்ளதக்க) இத்தகைய தலாக் இரண்டு முறைதான். அதன் பின் அழம் முறையில் அவளுடன் வாழவேண்டும். அல்லது அழகிய முறையில் அவளை விட்டு விட வேண்டும். (இரண்டு தலாக் கூறி அவளை திரும்பவும் அழைத்துக் கொண்டு) அதன் பிறகும் அவளை மீண்டும் தலாக் கூறினால், அவள் அவனல்லா மற்றொரு கணவனைத் திருமணம் செய்து கொள்ளாத வரை அவள் அவனுக்கு ஹலாலாக மாட்டாள். (அதன் பின்) இரண்டாம் கணவன் அவளை தலாக்கூறி விட்டால் அல்லாஹ்வின் வரம்புகளை அவ்விருவரும் நிலை நாட்டுபவர்கள் என்று அவர்கள் கருதினால் அவ்விருவரும் ஒருவரோடு ஒருவர் (திருமணத்தின்மூலம்) சேர்ந்து கொள்வது குற்றமில்லை. 2:230)

கர்ப்பிணிகள் காத்திருக்கும் காலம் அவர்கள் பிரசவிக்கும் வரையில் ஆகும். (65:4)

முத்தலாக் என்று கூறினால் ஒரு தலாக் கூறியதற்கு சமம் என பின்வரும் நதீஸிலிருந்து தெரிந்து கொள்ளலாம் அபூருகானா என்பவர், தன் மனைவி உம்முகாருனாவை தலாக் கூறிவிட்டார். (இதனை அறிந்து) நபி(ஸல்) அவர்கள் உன் மனைவியை திரும்ப அழைத்துக் கொள் என்றனர். அதற்கு அவர் நான் மூன்று தலாக் கூறிவிட்டேனே என்றனர். அதற்கு நபி(ஸல்) அவர்கள் அதனை அறிவேன் நீ உன் மனைவியைத் திரும்ப அழைத்துக் கொள் என்றார்கள்.

அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ்(ரழி)

நூல்கள்: அபூதாவூத், அஹ்மத், ஹாம்ம்.

ஒரு மனிதர் தன் மனைவியை ஒரே சமயத்தில் மூன்று தலாக் என்று கூறிய செய்தியை கேள்விபட்டு நபி(ஸல்) அவர்கள் கடும் கோபமுற்று. நான் உங்கள் மத்தியில் வாழும்பொழுதே அல்லாஹ்வின்

வேதத்துடன் அவர் விளையாடுகிறாரா? என்று கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதரே நான் அவரை கொலை செய்து விடவா என்று ஒருவர் கேட்டார். (அந்த அளவுக்கு கோபம் கொண்டார்) என்று.

அறிவிப்பவர்: மஹ்மூத் இப்னு லபீத்(ரழி)

நூல்: நஸயீ

மூன்று தலாக்கை ஒன்று சேர்ந்து கூறுவது எவ்வளவு கடுமையான குற்றம் என்பதை இதன் மூலம் அறியலாம்.

## குலஃ

கணவனை பிடிக்காத நிலையில் ஒரு மனைவி அவனிடமிருந்து மறுவாழ்வை அமைத்து கொள்ள இஸ்லாம் பல உரிமைகளை வழங்கியள்ளது. அதில் ஒன்று குலஃ உரிமை.

ஸாபித் இப்னு கைஸ்(ரழி) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதர் அவர்களே ஸாபித் இப்னு கைஸ்(ரழி) அவர்களை, அவர்களது ஒழுகத்திலோ மார்க்கத்திலோ நான் குறை ஏதும் கூறவில்லை. ஆனால் இஸ்லாத்தில் இருந்து கொண்டு இறை நிராகரிப்பை இறைவனுக்கு மாறு செய்வதை வெறுக்கிறேன். அப்படியானால் அவர் உனக்கு அளித்த தோட்டத்தை திரும்ப கொடுக்கிறாயா, என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். அவரும் கொடுக்கிறேன் என்றார். அப்போது நபி(ஸல்) அவர்கள் ஸாயித்இப்னு கைஸ்(ரழி)யிடம் உன்னுடைய தோட்டத்தை பெற்றுக் கொண்டு இவரை நட்டுமொத்தமாக விட்டு விடு என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ்(ரழி)

நூல்கள்: புகாரி, நஸயீ

இந்த நதீஸிலிருந்து கணவனை பிடிக்காது பிரிந்து செல்ல விரும்பும் மனைவி தெளிவான காரணம் எதையும் கூற வேண்டியதில்லை. எனக்கு பிடிக்கவில்லை என்பதைக் கூறினாலே போதுமானதாகும் என்று புரிந்து கொள்ளலாம். வாங்கிய மஹரை திருப்ப கொடுக்க வேண்டும் என்பதற்கு இந்த ஹதீஸ் சான்றாக உள்ளது.

## பெண்களுக்கு சொத்துரிமை

பெற்றோர்களும், நெருங்கிய உறவினர்களும் சம்பாதித்தவற்றில் ஆண்களுக்கும் பங்கு உண்டு, பெண்களுக்கும் பங்கு உண்டு. அதிகமான சொத்தாக இருந்தாலும் குறைவான சொத்தாக இருந்தாலும் கட்டாயமாக பங்கு உண்டு.

பெற்றோர்களோ, நெருங்கிய உறவினர்களோ விட்டுச் சென்ற (சொத்)தில் ஆண்களுக்கு பாகமுண்டு, அவ்வாறே பெற்றோரோ, நெருங்கிய உறவினரோ விட்டு சென்ற (சொத்)தில் பெண்களுக்கும் பாகமுண்டு. அதிலிருந்துள்ள சொத்து) குறைவாக இருந்தாலும் சரி, அதிகமாக இருந்தாலும் சரியே (இது அல்லாஹ்வினால்) விதிக்கப்பட்ட பாகமாகும். (4:7)

நபி(ஸல்) அவர்கள் ஸஅதுப்னு ரமீஃ அவர்களின் மனைவி தனக்குரிய இரண்டு பெண்மக்களையும் அழைத்துக் கொண்டு வந்து அல்லாஹ்வின் தூதரே இவர்கள் இருவரும் ஸஃதுடைய குழந்தைகள் இவர்களின் தந்தை (ஸஅது) உங்களுடன் உஹது போரில் கலந்து கொண்டபோது கொல்லப்பட்டு

விட்டார். இவர்களின் பொருள்களை இவர்களின் சிறிய தந்தை எடுத்துக் கொண்டார் என்று கூறியதும் நபி(ஸல்) அவர்களின் சிறிய தந்தையை கூப்பிட்டு அனுப்பினார்கள். அவர் வந்ததும் அவரிடம், ஸஅதுடைய இரு பெண் மக்களுக்கும், (அவரின் சொத்திலிருந்து) மூன்றில் இரண்டு பாகத்தை கொடுத்து விட்டு அவர்களின் தாயாருக்கு எட்டில் ஒரு பாகத்தை கொடுத்துவிட்டு மீதமுள்ளதை உமக்காக வைத்துக் கொள்ளும் என்று கட்டளையிட்டார்கள்.

அறிவிப்பவர்: ஜாபிர்(ரழி)

நூல்: அஹ்மத்

இந்த மாதிரி இஸ்லாம் கூறிய பின் தான் பெண்களுக்கு கிடைக்க வேண்டிய சொத்தின் பாகங்கள் அவர்களுக்கு சரியான முறையில் சென்றிருந்தது. மேலும் இஸ்லாமிய சட்டப்படி கிடைக்க வேண்டிய பாகங்கள் கிடைக்கப் பெறாத போது அதை உரிய முறையில் கேட்டுப் பெறும் உரிமையும் பெண்களுக்கு உண்டு என்று நாம் மேற்கண்ட ஹதீஸ் குர்ஆன் வசனத்திலிருந்து தெரிந்து கொள்ளவேண்டும்.

மகளுக்கு அரை பங்கையும், மகனுடைய மகளுக்கு (பேத்தி) ஆறில் ஒரு பங்கையும் மூன்றில் ஒரு பங்கு பூர்த்தி ஆக்குவதற்காக கொடுக்க வேண்டும். இன்னும் அதில் மீதமுள்ளத சகோதரிக்கு உரியதாகும் என நபி(ஸல்) அவர்கள் தீர்ப்பளித்தார்.

அறிவிப்பவர்: இப்னு மஸ்வூத்(ரழி)

நூல்: புகாரி

(இறந்தவருக்குத்) தாய் இல்லை எனில் பாட்டிக்கு ஆறிலொரு பங்கை நபி(ஸல்) அவர்கள் உரிமை ஆக்கினார்கள்.

அறிவிப்பவர்: புரைதா(ரழி)

நூல்கள்: அபூதாவூத், நஸயீ

இதிலிருந்து பெண்களுக்கு சொத்துரிமை இருக்கிறது என்று தெரிந்து கொண்டோம்.

### பெண்களுக்கு செலவிடும் உரிமையும் இஸ்லாம் வழங்கியள்ளது.

செலவிடும் உரிமை என்று கூறியவுடன் பெண்கள் சினிமாவுக்கு போவது, நைல்பாலிஸ், இன்னும் தேவையில்லாத அலங்கார பொருட்கள் வாங்கி கணவனின் பணத்தை வீண் விரயம் செய்வது, இன்னும் பல மார்க்கத்தின் முரண் ஆன செலவு செய்வது இவை எல்லாவற்றிற்கும் நாளை மறுமையில் அல்லாஹ் கணக்கு கேட்பான் கணவனின் பொருள்களுக்கு மனைவியே பொறுப்பாவாள்.

நிச்சயமாக முஸ்லிம்களான ஆண்களும், பெண்களும் நம்பிக்கை கொண்ட ஆண்களும், பெண்களும் இறைவழிபாடுள்ள ஆண்களும், பெண்களும் உண்மையே பேசும் ஆண்களும், பெண்களும் பொறுமையுள்ள ஆண்களும், பெண்களும் (அல்லாஹ்விடம்) உள்ளத்துடன் இருக்கும். ஆண்களும் பெண்களும், தர்மம் செய்யும் ஆண்களும், பெண்களும் நோன்பு நோற்கும் ஆண்களும், பெண்களும் தங்கள் வெட்கதலங்களை (கற்பைக்) காத்துக் கொள்ளும் ஆண்களும், பெண்களும் அல்லாஹ்வை அதிகம் அதிகம் தியானம் செய்யும் ஆண்களும் பெண்களும், ஆகிய இவர்களுக்கு அல்லாஹ்வின் மன்னிப்பையும், மகத்தான நற்கூலியையும் சித்தப்படுத்தியிருக்கிறான். (33:35)

தர்மம் செய்யும் ஆண்களையும், பெண்களையும் அல்லாஹ் குறிப்பிடுகிறான். நாம் நன்மையான தர்மம் செய்வது தவறு இல்லை. வேண்டாத செலவுகளை செய்யாமலிருப்பது சிறந்தது.

ஒரு முறை நபி(ஸல்) அவர்கள் பெருநாள் குத்பா முடிந்தவுடன் பெண்கள் பகுதிக்கு சென்று பெண்களே நீங்கள் நரகத்தில் அதிகமாக இருக்கிறீர்கள். ஆகவே அதிகமாக தான தர்மங்கள் செய்யுங்கள் என்று கூறிவிட்டு சென்றார். உடனே நபி(ஸல்) அவர்கள் வீட்டிற்கு ஜைனப் என்ற பெண்மணி சென்று காவாலளியிடம் ஜைனப் வந்து இருக்கிறேன் என்று நபி(ஸல்) கூறுங்கள் என்று சொன்னார். காவலாளி சென்று கூற எந்த ஜைனப் என்று நபி(ஸல்) கேட்டார்கள். ஏனென்றால் நபி(ஸல்) அவர்களின், மனைவியின் பெயரும் ஜைனப் அதற்கு காவலாளி இப்னு மஸ்வூத்(ரழி)யின் மனைவி என்று கூற நபி(ஸல்) என்ன என்று அப்பெண்ணிடம் விசாரிக்க. அந்த பெண் கூறுகிறார். அல்லாஹ்வின் தூதரே இப்பொழுது நீங்கள் பெண்கள் தர்மம் அதிகமாக செய்ய கூறினீர்கள். என்னிடம் இரண்டு காப்புகள் உள்ளன. அதை என் கணவருக்கு தர்மம் செய்யலாமா என்று கேட்கிறார். அதற்கு நபி(ஸல்) செய்யுங்கள் என்று கூறினார்.

இதிலிருந்து நாம் அறிவது என்னவென்றால் பெண்கள் தனியாக சொத்து வைத்துக் கொள்ளலாம். தான தர்மங்கள் செய்யலாம். நன்மையான விஷயங்களுக்கு வேண்டி செலவு செய்யலாம் என்பதை புரிந்து பெண்களாகிய நாம் நடந்து கொள்ளவேண்டும்.

## கல்வியில் உரிமை

கல்வியில் இன்று பெண்கள் முக்கியத்துவம் அளிப்பதில்லை. ஒரு சில பெண்களோ, உலக கல்வியில் முக்கியத்துவம் எடுக்கிறார்கள். மார்க்க கல்வியில் முக்கியத்துவம் எடுப்பதில்லை. பெண்கள் உலக கல்வி கற்க கூடாது என்று இஸ்லாம் போதிப்பதில்லை. ஆண்களுடன் கலந்து கற்க வேண்டாம். தனியாக பெண்கள் கற்கலாம் என்று கூறுகிறது. இன்று நம் நாட்டில் கல்லூரியில் நடக்கு ஈவ்டீசிங் என்ற பெயரிலும், ஆசிரியர் மாணவியை கற்பழித்தார் என்றும். திருமணம் ஆகாத பெண்கள் எத்தனையே பேர் கர்ப்பம் என்று செய்தவர்களில் படிக்கிறோம். இந்த மாதிரி ஆண்களுடன் இரண்டற கலந்து படிப்பது தான் இஸ்லாம் தடை செய்கிறது. தனியாக கல்வி கற்க தடை செய்கிறது. தனியாக கல்வி கற்க தடை எதுவும் கிடையாது. கல்வியின் அவசியத்தை குர்ஆன் கூறுகிறது.

படித்தவர்களும், படிக்காதவர்களும் சமமாக மாட்டார்கள்.

முஃமினான ஆண்களும், முஃமினான பெண்களும், கல்வியை தேடுவது கட்டாய கடமையாகும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். எவருக்கு இறைவன் நன்மையை நாடுகிறானோ அவருக்கு மார்க்க அறிவை நல்குகிறான் என்று அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். என்று கூறியதை மூஆவியா(ரழி) அவர்கள் அறிவித்ததை நான் செவியுற்றேன்.

அறிவிப்பவர்: ஹமீது

ஆதாரம்: புகாரி, முஸ்லிம்

எவர் மார்க்க கல்வியை கற்க செல்கிறார்களோ, அவர் திரும்பவும் வரையில் இறைவழியில் செல்பவராவார் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அனஸ்(ரழி)

நூல்: திர்மிதி

இறை நம்பிக்கையாளர் எவருக்கும் கல்வியைத் தேடுவதிலுள்ள ஆசை சுவனபதி செல்லும் வரை பரிபூரணமாக நிறைவேறமாட்டாது என்று நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஸஈத் (ரழி)

நூல்: திர்மிதி

அறிவு, இறை நம்பிக்கையாளரின் தவறிப்போன பொருளாகும். எனவே அவர் அதனை எங்கு அடைய பெற்றினும் அது அவருக்கே மிகவும் உரிமை உள்ளதாகும் என நபி(ஸல்) அவர்கள்கூறினார்கள்.

அறிவிப்பவர்:அபூஹு ரைரா (ரழி)

நூல்: திர்மிதி

மார்க்கம் பற்றி கல்வி அறிவை எவரிடமும் கேட்கப்பட்டு அறிந்தவர் (அறிந்திருந்தும்) அதனை தெரிவிக்கவில்லையாயின் (மறுமையில்) அவரின் வாயில் நரகக் கடிவாளம் போடப்படும் என நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹு ரைரா (ரழி)

நூல்கள்: அபூதாவூத், திர்மிதி

உன் காரணமாக ஒருவர் நேர்வழியை அடைவது உனக்கு சிறப்பு நிறமான உயர்ந்த ஒட்டகம் கிடைப்பது சிறந்தது என நபி(ஸல்) கூறினார்.

அறிவிப்பவர்: ஸஹ்லுப்னு ஸஃது (ரழி)

ஆதாரம்: அபூதாவூத்

(கெட்ட) பாடல்கள் ஒருவரின் வயிறு நிறைந்து இருப்பதை விட அவரின் வயிறு நிறைய உடலைக் கெடுக்கக் கூடிய சீழ் இருப்பது மிகவும் மேலானதாகும் என்று நபி(ஸல்) கூறினார்.

அறிவிப்பவர்: அபூஹு ரைரா (ரழி)

நூல்கள்: புகாரி, முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி

இன்றைக்கு நம் பெண்கள் பல பெண்களுடன் பேசும் வாய்ப்பு, சந்திக்கும் வாய்ப்பு, கிடைக்கிறது. ஆனால் பெண்களாகிய நாம் என்ன செய்கிறோம் என்றால் வீணான பேச்சுகளை பேசி, நேரத்தை வீணாக்கிறோம். தொழுகை நேரம் வந்தால் தொழுதாயா, நோன்பு நேரத்தில் நோன்பு வைத்தாயா என்று நாம் கேட்பதில்லை. நமக்கு என்ன யார் எப்படி போனால் என்று இருந்து வருகிறோம். மார்க்கத்தை போதிப்பது ஆண்களுடைய வேலை. நம் வேலை இல்லை என்று நினைக்கிறோம். மார்க்கத்தை போதிப்பதை அல்லாஹ் தன் அருள் மறையாம் திருமறையில் கூறுகிறான்.

மூஃமினான ஆண்களும் மூஃமினான பெண்களும் ஒருவருக்கொருவர் உற்ற துணைவர்களாக இருக்கின்றனர். அவர்கள் நல்லதை செய்ய தூண்டுகிறார்கள். தீயதை விட்டும் விலக்குகிறார்கள். தொழுகையை கடைபிடிக்கிறார்கள் (ஏழைவரியாக) ஜகாத்தை (முறையாகக்) கொடுத்து வருகிறார்கள். அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் வழிபடுகிறார்கள். அவர்களுக்கு அல்லாஹ் சீக்கிரத்தில் கருணை புரிவான். நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவனாகவும், ஞானமுடையவனாகவும் இருக்கிறான். (9:71)

அல்லாஹ் ஆண்கள் மீதும், பெண்கள் மீதும் ஆக்கியருக்கிறான். எனவே பெண்களாகிய நாமும் மார்க்க கல்வியை பிறருக்கு போதித்து ஈருள பயனை அடைய வேண்டும்.

## ஜனாஸா சட்டம்

உலகத்தில் உள்ள எல்லா ஜீவராசிகளுக்கு மரணம் என்பது நிச்சயமாகப் பட்டதாகும் மனிதனை படைத்து அவனுக்கு வாழ்வை அளித்த அல்லாஹ் அவனுக்கு மரணத்தை விதியாக்கி உள்ளான். இஸ்லாமிய மார்க்கம் அல்லாஹ்வினால் வழங்கப்பட்ட மார்க்கம் மனிதனுடைய ஒவ்வொரு செயல்பாடும் அல்லாஹ்விற்கும், அவன் தூதருக்கும் கட்டுப்பட்டவையாக இருக்க வேண்டும். மனிதன் பிறந்தது முதல் இறப்பதும் வரை என்னென்ன செய்ய வேண்டும் என்பதை அவன் தூதர்கள் மூலம் நமக்கு கற்றுக் கொடுத்துள்ளான். இதே போல் ஒருவர் இறந்தவுடன் அவர்களை எந்த முறையில் என்னனென்ன செய்ய வேண்டும் என்பதையும் மார்க்கம் நமக்கு காட்டி தந்துள்ளது. இதை முறையாக நம்மவர்கள் தெரியாமல் பலவாறாக நடந்து கொள்கிறார்கள். அதிலும் குறிப்பாக பெண்கள் எப்படி நடக்கவேண்டும். என்பதை பார்ப்போம்.

மரண தருவாயில் உள்ளவர்களுக்கு உள்ளவர்களுக்கு லாயிலாஹ இல்லல்லாஹு (வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வை தவிர யாருமில்லை) என்று சொல் கொடுத்து அவர்களை சொல்லுமாறு செய்யவேண்டும்.

உங்களில் மரணவேளை நெருக்கியவரை லாயிலாஹ இல்லல்லாஹு என்று சொல்ல வையுங்கள் என்று அல்லாஹ்வின் தூதர் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஸயீத் அல்குத்ரீ(ரழி)

நூல்: முஸ்லிம்

ஒரு மனிதன் இறப்பதற்கு முன்னால் மரண தருவாயில் அவனுக்கு நாம் செய்ய வேண்டிய கடமை லாயிலாஹ இல்லல்லாஹ் கூறுவது, இனி இறந்தவுடன் செய்ய வேண்டிய கடமைகளை பார்ப்போம்.

### கண்களை மூடுதல்:

அல்லாஹ்வின் தூதர் நபி(ஸல்) அவர்கள் அபூஸலமா(ரழி) (மரணித்த போது) அருகில் வந்தார்கள். அப்போது அவருடைய கண்ணிமைகள் திறந்து இருந்தன. அப்போது அவர்கள் அபூஸலமாவின கண்களை மூடிவிட்டு நிச்சயமாக உயிர் கைப்பற்றப்படும் போது அதை நோக்கியே பார்வை தொடர்ந்து விடுகின்றது என்று நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: உம்முஸலமா(ரழி)

நூல்: முஸ்லிம்

### மய்யித்தை மூடி வைத்தல்:

நபி(ஸல்) அவர்களின் (மரண செய்தியைக் கேள்விப்பட்ட) அபூபக்கர்(ரழி) ஸீன்ஹ் என்னுமிடத்திலுள்ள தமது வீட்டிலிருந்து குதிரையில் மஜ்ஜிது (ன்னபவி) வந்திரங்கினார். யாரிடமும் பேசாமல் நேரடியாக என் அறைக்குள் நுழைந்தார்கள்.

அங்கு நபி(ஸல்) அவர்களை அடையாளமிட்ட போர்வையால் போர்த்தப்பட்ட நிலையில் கண்டார் உடனே அபூபக்கர்(ரழி) நபி(ஸல்) அவர்களின் முகத்திலுள்ள துணியை அகற்றிவிட்டு அவர்கள் மேல் விழுந்து முத்தமிட்டு விட்டு அழுதார். பின்பு அல்லாஹ்வின் தூதரே, எனது தாயும், தந்தையும் உங்களுக்கு அற்பணம் அல்லாஹ் உங்களுக்கு இரண்டு மரணங்களை ஏற்படுத்தவில்லை. உங்கள் மீது விதிக்கப்பட்ட அந்த மரணத்தை நீங்கள் அடைந்து விட்டீர்கள் என கூறினார்.

அறிவிப்பவர்: ஆயிஷா(ரழி)

நூல்: புகாரி

குளிப்பாட்டுவது பற்றி, மய்யித்தை குளிப்பாட்டுவது அவசியம் என்று இஸ்லாம் கூறுகிறது. குளிப்பாட்டும் முறையையும், யார், யார் குளிப்பாட்டலாம் என்பதை கீழ்வரும் ஹதீஸ்களில் காணலாம்.

நஃப்ஸா(ரழி)யின் அறிவிப்பில் ஒன்றை படையாக(த் தண்ணீர் ஊற்றி) குளிப்பாட்டுங்கள் மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு தடவை (தண்ணீர் ஊற்றுங்கள்) அவரது வலப்புறத்திலிருந்தும் உளூச் செய்ய வேண்டிய பகுதிகளிலிருந்தும் துவங்குங்கள். என்று நபி(ஸல்) கூறியதாகவும் நாங்கள். அவர்களுக்கு தலைவாரி மூன்று சடைகளை பின்னினோம்.

அறிவிப்பவர்: உம்மு அதிய்யா(ரழி)

நபி(ஸல்) அவர்களின் மகளை நாங்கள் குளிப்பாட்டிக் கொண்டிருந்த போது மய்யித்தின் வலப்புறத்திலிருந்து உளூ செய்யவேண்டிய பகுதியிலிருந்தும் ஆரம்பியுங்கள் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: உம்முஅதிய்யா(ரழி)

நூல்கள்: புகாரி, முஸ்லிம், திர்மிதி, அபூதாவூத், இப்னுமாஜா, நஸயீ

பெண்மய்யித்தை குளிப்பாட்டி பின் அவர்களின் தலையை மூன்று சடைகள் பின்னி விட வேண்டும் என்பதை மேற்கண்ட ஹதீஸிலிருந்து தெரிந்து கொண்டோம் எப்படி ஜடை போடுவது.

மூன்று சடைகள் என்பது முன்நெற்றி பகுதியில் ஒன்றும் பிடரி பகுதியில் இரண்டும் ஆகும். நபி(ஸல்) அவர்களின் உத்தரவின் பேரில் தான் இவ்வாறு செய்தார்கள். அல்லது உம்மு அதிய்யா(ரழி) தன் சொந்த அபிப்பராயத்தின் படி செய்தார்களா? என்ற சந்தேகம் நமக்கு வரலாம். அவரின் (தன் மகளின்) தலை முடியை மூன்று சடைகளாக முடிந்து விடுங்கள் என்று நபி(ஸல்) உத்தரவு இட்டதாக சாரியான அறிவிப்பாளர் வரிசையில் இப்னு நிப்பானில் பதிவு ஆகியள்ளது.

### யார் குளிப்பட்ட வேண்டும்.

வெட்கத் தலங்களை பொறுத்தவரை உயிர் உடன் இருக்கும் போது யார் பார்க்கலாமோ, அதே போல் தான் இறந்த பிறகும். ஆண் மைய்யித்தை ஆண்களும் பெண் மைய்யித்தை பெண்களும் குளிப்பாட்ட வேண்டும். கணவன் மனைவி விஷயத்தில் இது விதிவிலக்காகும். கணவன் இறந்தால் மனைவியோ, மனைவி இறந்தால் கணவனோ குளிப்பாட்டலாம்.

நபி(ஸல்) அவர்கள் ஆயிஷா(ரழி)யிடம் எனக்கு முன்பாக நீ இறந்து விட்டால் உன்னை நான் குளிப்பாட்டுவேன் என்று கூறினார்.

### மய்யித்தியின் குறைகளை மறைக்க வேண்டும்

யார் இறந்து விட்ட ஒரு முஸ்லிமை குளிப்பாட்டி அவரது குறையை மறைத்து விடுகின்றரோ, அல்லது அவருக்கு நாற்பது முறை பாவமன்னிப்பை வழங்கி விடுகின்றனான். யார் குழி தோண்டி அடக்கம் செய்கின்றாரோ அவருக்கு ஒரு முஸ்லிமை குடியமாத்தியவருக்குரிய கூலியை போன்று (அவரது) கூலியை நிரந்தர மாக்கி விடுகிறான். யார் இறந்து விட்ட முஸ்லீமுக்கு கப்ன் ஆடையை அணிவிக்கின்றோம். இறுதி நாளில் அல்லாஹ் அவருக்கு சுவர்க்கத்தின் ஸீன்துஸ், இஸ்தப்ரக் ஆகிய பட்டாடைகளை அணிவிக்கின்றான்.

அறிவிப்பவர்: அபூராபிஃ(ரழி)

நூல்கள்: நாம்ம், பைஹகீ

### மய்யித்தை குளிப்பாட்டிய பிறகு மய்யித்தின் உடலை துணியால் மறைக்கவேண்டும்.

உங்களுடைய ஆடைகளில் வெள்ளை நிற ஆடைகளை அணிந்து கொள்ளுங்கள். ஏனெனில் அவை தான் உங்களுடைய ஆடைகளில் சிறந்ததாகும். உங்களில் இறந்தவர்களுக்கு வெள்ளை ஆடைகளால் கபனிடுங்கள் என்று நபி(ஸல்) அவர்கள் சொன்னார்கள்.

அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ்(ரழி)

நூல்கள்: அபூதாவூத், திர்மிதி, இப்னுமாஜா, அஹ்மத்

எத்தனை ஆடைகளால் கபனிடலாம்.

நாங்கள் உம்முகுல்ஸீமை ஐந்து ஆடைகளில் கபன் பொதிந்தோம். உயிர் உள்ளவருக்கு முக்காடு போடுவது போல அவருக்கு நாங்கள் முக்காடு போட்டோம் என்று உம்மு அதிய்யா(ரழி) அறிவிக்கிறார். என்ற செய்தி கவாரிஸிமி என்ற நூலில் விடுகின்றது என்று நாபில் இப்னு ஜைர் அல்கலானி குறிப்பிடுவதால் இந்த ஹதீஸ் நஸன் தரத்தை அடைந்து விடுகின்றன. ஹஜர் நம்பகமானவர் என்று ஹதீஸ் வல்லுநர்களால் கூறப்படுவதால் இதை ஏற்றுக் கொள்ளலாம்.

பொறுமையை மேற்கொள்ளல் இன்று இறந்த வீட்டில் பெண்கள் மய்யித்தை நடு வீட்டில் வைத்து ஒப்பாரி வைத்து அழுகிறார்கள். நபி(ஸல்) ஒப்பாரி வைத்து அழுவதையும் அதை கேட்டு கொண்டு தடுக்காமல் இருப்பவர்களையும் சபித்துள்ளார்கள்.

அறிவிப்பவர்: அபூஸயீத் அல்குத்ரீ

நபி(ஸல்) அவர்களது மகள் (உம்மு குல்ஸீம்) அடக்கம் செய்யப்படும் போது நான் இருந்தேன். நபி(ஸல்) அவர்கள் மண்ணறை அருகில் அமர்ந்திருந்தார்கள். அப்போது அவர்களின் இரண்டு கண்களில் கண்ணீர் வடிந்ததை நான் பார்த்தேன்.

அறிவிப்பவர்: அனஸ்(ரழி)

நூல்: புகாரி

நிச்சயமாக நாம் உங்களை ஓரளவு அச்சத்தாலும், பசியாலும், பொருட்கள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றின் இழப்பினாலும் சோதிப்போம். ஆனால் பொறுமையுடையோருக்கு நபியே நீர் நன்மாராயங் கூறுவீராக.

(பொறுமையுடையோராகிய) அவர்களுக்கு துன்பம் ஏற்படும் போது நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள். நிச்சயமாக நாம் அவனிடமே திரும்பிச் செல்வோம் என்று கூறுவார்கள்.

இத்தகையோர் மீது தான் அவர்களுடைய இறைவனின் நல்லாசியும் நற்ம்ருபையும் உண்டாகின்றன. இன்னும் அவர்கள் தான் நேர்வழியை அடைந்தவர்கள்.

(2:155, 156, 157)

மேலே பார்த்த ஹதீஸிலும், குர்ஆன் வசனத்திலும் இறப்பு செய்தியை கேட்டால் பொறுமையுடன் இருக்க வேண்டும். அல்லாஹ் தான் வழங்கினான். அல்லாஹ் எடுத்துக கொண்டான் என்ற எண்ணம் நம்மிடம் வரவேண்டு. துக்கம் தாளாமல் அல்லாஹ்விற்கு எதிரான வார்த்தைகளை உபயோகிக்க கூடாது. அழக்கூடாது என்பது இல்லை. இறைவனை சாபமிட்டு, தலையை பிய்த்து கொண்டு, சட்டையை கிழித்துக் கொண்டு, மார்பில் அடித்துக் கொண்டு அழக்கூடாது.

அல்லாஹ்வோ, அவன் தூதரோ காட்டி தராத விஷயத்தை நாம் செய்து நரகத்திற்கு சென்று விடக்கூடாது.